பக்கங்கள்
24

புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 01 | 20 மே 2017 | விதி : 49






வைக்கப்படாத
கொள்ளிகள்



பிஞ்சிலே
பழுத்த காதல்



உண்ணாவிரதிகளை
காப்பாற்றிய புலிகள்



யா/வண். நாவலர்
மகா வித்தியாலயம்

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை. உண்ணாவிரதிகளை காப்பாற்றிய புலிகள்

**கூட்டமைப்பும் புலிகளும் 9**

● தயாளன்

**பு**லிகள் - ஈ.பி.ஆர்.எல்.எவ். இடையே ஏற்பட்ட முரண்பாடுகள், உடன்பாடுகள் மட்டு. சிறையில் இருந்து தப்பித்தல் தொடர்பான விடயங்கள் கடந்த தொடரில் வெளியாகியது. அதன் பின்னர் நடந்த விடயங்களின் தொடர்ச்சி இது.



அடுத்த முறுகல் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற உண்ணாவிரதம் தொடர்பானது. 1983 இனக்கலவரச் சூழ் நிலைகளுக்குப் பின் தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் தமிழ் பேசும் மாணவர்களை யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் பல்கலைக்கழகங்களுக்கு மாற்றவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இது நடத்தப்பட்டது. முதலில் சுழற்சி முறையில் என ஆரம்பித்துப் பின்னர் சாகும்வரை உண்ணாவிரதம் என மாற்றப்பட்டது. இந்த முடிவை எடுக்கும் முன்னரே இதை ஒழுங்கு படுத்தியவர்களிடம் "ஜே.ஆர். இதற்கெல்லாம் மசியக்கூடிய ஆள் அல்ல. சாகும் வரை உண்ணாவிரதம் என்ற கட்டத்துக்குப் போகாதீர்கள்" என அறிவுறுத்தினர் புலிகள். அத்துடன் தமது நிலைப்பாட்டைத் துண்டுப் பிரசுரம் மூலம் வெளியிட்டனர். ஆனால் ஏனைய இயக்கங்கள் மாணவரை உசுப்பி விட்டன. இந்த உண்ணாவிரதிகளில் நான்கு மாணவிகளும் அடங்குவர். நாட் செல்ல இந்த மாணவிகளில் ஒருவரான லலிதா என்பவருக்கு விக்கல் ஏற்பட்டது.

அப்போதுதான் சூழ்நிலையின் விபரீதம் புரிந்தது. கண்ணீருடன் உண்ணாவிரதிகளின் பெற்றோர், உறவினர் சூழ இருந்தனர். முடிவெடுப்பதில் சிக்கல். ஏனெனில் இயக்கங்களின் எண்ணிக்கையைக் கணக்கிட இன்னொருவரின் விரல்களையும் இரவல் கேட்கவேண்டும். ஆனாலும் உண்ணாவிரதிகளைக் காப்பாற்ற வேண்டும் என முடிவெடுத்தனர் புலிகள். ரெலோவைக் கேட்டனர். அவர்கள் சம்மதித்தனர். புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்.வில் முடிவெடுக்கக் கூடியவர்களைக் காணவில்லை. அவர்களோடு தொடர்பு கொண்டு கேட்டால் சித்தாந்த விளக்கம் அளிப்பர். அது முடிய விடிந்து விடும். இங்கே ஆள் முடிந்து விடும். சில்லறை இயக்கங்களைக் கணக்கில் எடுக்க முடியாது. எனவே நடப்பது நடக்கட்டும் என முடிவெடுத்து அவர்களைக் கொண்டு செல்ல முயற்சித்தனர். இவர்களில் சிலர் தயங்குவதைக் கண்ட சுகந்தன் (ரவிசேகரம் ) கண்ணீருடன் கையெடுத்துக் கெஞ்சிக் கூப்பிட்டு அனைவரையும் ஒரு வானில் ஏறவைத்தார்.

அடுத்த நாள் பிரச்சினை ஆரம்பமாகிற்று. இதனைக் கண்டித்து ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் சுவரொட்டிகளை ஒட்டின. புலிகளின் பிரமுகர்களைக் கண்டு "எமது தோழியர் இருவர் இதில் இருக்கின்றனர். அவர்களை எம்மிடம் ஒப்படைக்க வேண்டும்" என்றனர் ஈ.பி.ஆர்.எல். எவ்வினர். அக்காலத்தில் இராணுவம், பொலிஸ் எல்லா இடங்களுக்கும் சென்றுவரக் கூடிய சூழல் இருந்தது. இதனைக் குறிப்பிட்ட புலிகள் "நாங்கள் அவர்களை வைத்திருக்குமிடம் வெளியே தெரிந்தால் பிரச்சினையாகிவிடும். எனவே அவர்களை நாம் தமிழகத்தில் ஒப்படைக்கிறோம்" என்றனர். அதனை ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர் ஏற்கவில்லை. முரண்பாடு தோன்றியது. அடுத்த நாளும் இதே நிலைதான். எதற்கும் பொறுமை இழக்காத சந்தோசமும் அதனை இழந்து விட்டார். "நீங்கள் செய்வதைச் செய்யுங்கோடா" என்று கூறி விட்டார் . பத்திரமாக அனைவரும் தமிழகத்துக்கு அனுப்பப்பட்டனர் .

அவர்கள் சிகிச்சை முடிந்து ஓரளவு குணமானபின் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் இரு தோழியரையும் அவர்களிடமே ஒப்படைக்குமாறு பிரபாகரன் சங்கரிடம் கூறினார். இந்த சங்கர் (சொர்ணலிங்கம்) பின்னர் புலிகளின் விமானப் படைத் தளபதியாக இருந்தவர். தமிழ் தகவல் மையம் (Tamil Information Centre) என்று ஒரு செய்தி நிறுவனம் அப்போது சென்னையில் இருந்தது. எல்லா இயக்கத்தவரும் இந்த நிலையத்துக்குச் செய்தி வழங்குவர். மாநிலச் செய்திகளில்



சங்கர்

இந்த நிறுவனத்தை ஆதாரம் காட்டி இலங்கைச் செய்திகளைக் குறிப்பிடுவதுண்டு. பிரபலமான எல்லா இயக்கங்களும் தமது சார்பில் குறிப்பிட்ட ஒரு சிலரையே இங்கு அனுப்புவது வழக்கமாயிருந்தது. புலிகள் சார்பில் சங்கரே செல்வார். அவருக்கு ஈபி.ஆர். எல்.எவ். சார்பில் செய்தி கொடுக்க வருபவரைத் தெரிந்திருந்தது. அவருடன் உரையாடுவது வழக்கமாயிருந்தது. அந்த நம்பிக்கையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். அலுவலகத்துக்குச் சென்றார். அங்கு அவருக்கு அறிமுகமானவரே இருந்தார்.

### ஈ.பி.ஆர்.எல்.எவ்வுடன் போக மறுத்த தோழிகள்!

"எங்கிருந்து வருகிறீர்கள்?" - இதுதான் முதல் கேள்வி. சங்கருக்கு ஆச்சரியம். தினந்தோறும் ஊடக மையத்தில் கண்டு உரையாடுபவர் இப்படிக்கேட்கிறாரே என்று. பொறுமையுடன் "ரைகேர்ஸில் இருந்து "எனப் பதிலளித்தார். அடுத்த கேள்வி "எந்த ரைகேர்ஸ்ஸில் இருந்து" - பொறுமையிழந்த [illegible] அந்தக் காலத்தில் புளொட்டும் தாங்களே உண்மையான ரைகேர்ஸ் என்று சொல்லிக்கொண்டு இருந்தது. எனவே சீண்ட வேண்டுமென்றே அந்தத் தோழர் இப்படிக் கேட்டார். "எந்த இயக்கத்துக்கு ரைகேர்ஸ் என்று கூற உரிமை இருக்கிறதோ அதிலிருந்துதான் வருகிறேன்" என்றார் சங்கர். தொடர்ந்தும் இடக்குமுடக்கான கேள்விகள் - ஆதலால் பதில்களும் அவ்வாறே சொல்ல வேண்டியிருந்தது. மொத்தத்தில் தோழியரை ஒப்படைப்பது பற்றித் தீர்மானமெடுக்க முடியவில்லை. சங்கர் பிரபாகரனிடம் வந்து நடந்த விடயத்தைச் சொன்னார். இந்த விடயம் அந்த தோழியரின் காதுக்கும் போயிற்று. " எங்களை ஒப்படைப்பதற்காகச் சென்ற சங்கர் அண்ணாவிடம் எங்களின் உடல் நிலை குறித்தே முதலில் அவர்கள் விசாரித்திருக்க வேண்டும். அதனை விடுத்துப் புலிகளோடு முரண்படுவதற்கும், தங்களது கௌரவத்தை நிலை நாட்டவுமே அவர்கள் முயல்கின்றனர். இவ்வாறானோரிடம் செல்ல நாங்கள் விரும்பவில்லை. நாங்கள் இங்கேயே இருக்கிறோம்" என்றனர். பின்னாளில் மகளிர் படையணிக்கான பயிற்சிகள் ஆரம்பமானபோது அவர்களும் அதில் இணைந்து கொண்டனர். இவர்களுடன் லலிதா என்ற மாணவியும் சேர்ந்து கொண்டார். இவருக்கு ஜனனி என்ற இயக்கப்பெயர் சூட்டப்பட்டது. பின்னாளில் செஞ்சோலை என்ற அமைப்புத் தொடக்கப்பட்ட போது அதன் பொறுப்பாளர் ஆனார். 'பெரியம்மா' என்று உறவு முறையால் அந்தக் குழந்தைகளால் அழைக்கப்பட்டார். 2008 பிற்பகுதியில் தனது பொறுப்பைத் தனக்கு அடுத்தவர்களிடம் ஒப்படைத்து விட்டுக் களமாடப் போனார். அங்கேயே அவரது வாழ்வு முடிந்தது.

### மாவீரர் நாள் பாடலுக்கு யோசனை!

ஈ.பி.ஆர்.எல்.எவ்வில் இருந்து வந்த இரு தோழியரில் ஒருவருக்கு ஜெயா எனப் பெயர் சூட்டப்பட்டது. இவர் பின்னர் விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியற் துறைப் பொறுப்பாளராகச் சில ஆண்டுகள் பணியாற்றினார். இன்னொரு வரலாற்று முக்கியத்துவம் இவருக்கு உண்டு. 1992 ஆம் ஆண்டு நடைபெற இருந்த மாவீரர் நாளுக்கான ஏற்பாடுகள் குறித்த முன்னோடிச் சந்திப்பு ஒன்று பிரபாகரன் தலைமையில் இடம்பெற்றது. இதில் "மாவீரர்களின் பெற்றோரும், போராளிகளும் இணைந்து பாடக்கூடியதாக உணர்வுபூர்வமான ஒரு பாடலை இயற்றி இந்நிகழ்வில் பாடவேண்டும்" என்ற ஆலோசனையை முன் வைத்தார் இவர். உடனே புதுவை இரத்தினதுரை பெருவிரலை உயர்த்தி இந்த ஆலோசனையை வரவேற்றார். "உடனே அதைச் செய்வோம்" என்று கூறியபடியே புதுவை இரத்தினதுரையைப் பார்த்துத் தலையாட்டினார் பிரபாகரன். ஆண்டு தோறும் பல லட்சக்கணக்கான வர்களின் கண்ணீரை வரவழைக்கக் கூடிய இப்பாடலை புதுவை இரத்தினதுரை இயற்ற, கண்ணன் இசையில் வர்ணராமேஸ்வரன் பாடினார். எப்படியோ இப்பாடல் உருவாக்கத்துக்கான யோசனையை முன் வைத்தவர் இவர்தான் என்பதை அச் சந்திப்பில் கலந்து கொண்டோர் என்றும் நினைவில் வைத்திருப்பர்.

மட்டக்களப்பின் வரலாற்றிலிலும் இவருக்கு ஒரு இடமுண்டு. மகளிருக்கான பயிற்சி முகாமை அங்கு அமைத்து. ஒரு படையணியை உருவாக்கியவர் இவர். இப்பயிற்சி முகாமில் உருவானோரில் முக்கியமானவர் வாஸந்தி என்ற சுகுணா (இவர் பற்றிப் பிறகு பார்ப்போம் )

மாவீரர் நாள் தொடர்பான சந்திப்புப் பற்றி இன்னொரு விடயத்தையும் குறிப்பிட வேண்டும். இதுவரை மாவீரர்கள் பற்றி ஈழநாதம், விடுதலைப் புலிகள், சுதந்திரப் பறவைகள் என்பன வற்றில் வெளிவந்த கட்டுரைகளை அந்தந்தப் பிரிவுகள் அச்சிட்டு மாவீரர் பணிமனையின் பேரில் வெளியிட வேண்டுமென போராளி ஒருவர் கருத்துத் தெரிவித்தார். ஈழ நாதத்தில் 'விழுதுகள்' என்ற தலைப்பில் பின்னர் மரணித்தவர்களான சு.ப.தமிழ்ச் செல்வன், காஸ்ரோ, வசந்தன், மலரவன், முதலானோரும் 'ஒரு போராளியின் குருதிச்சுவடுகள்' எனும் தலையங்கத்தில் விடுதலைப் புலிகளில் வசந்தனும் சுதந்திரப்பறவைகளில் தமிழவள் முதலானோரும் எழுதியிருந்தனர். இக்கருத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. விழுதுகள் தொடரில் லக்ஸ்மன் (ஆரையம்பதி - மட்டக்களப்பு) பற்றிய கட்டுரை உணர்வுபூர்வமாக இருந்ததெனவும் பொன். வேணுதாஸ் பற்றிய ஆக்கம் அவரது முக்கியத்து வத்தை மற்றவர்கள் அறியும் வகை யில் இருந்ததாகவும் பிரபாகரன் குறிப் பிட்டார். பொன்.வேணுதாஸின் துணைவியாரின் படுகொலை குறித்து சிரித்திரனில் வெளிவந்த கட்டுரையையும், ஈழநாதத்தில் கதைவடிவத்தில் சின்ன பாலா எழுதியதையும் தான் படித்ததாக வும் இரு வடிவங்களும் நன்றாகவே இருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உண்ணாவிரதம் இருந்தோரில் நாலாமவர் மதிவதனி ஏரம்பு. இவரது உறவினர்கள் சென்னையில் இருந்தனர். எனவே அவர்களுடன் தொடர்பு கொண்டு இவரைக் கைய ளிக்க ஏற்பாடு செய்யுமாறு கூறினார் பிரபாகரன். இவரை ராகவன் அழைத்துச் சென்று அவர்களிடம் ஒப்படைத் தார். சுறுசுறுப்பான இடத்தில் பாலா அண்ணர், திருமதி பாலா, உண்ணா விரதமிருந்த மற்ற மூவர் எனப் பலருடன் நன்றாகப் பழகிவிட்டு ஒரு வீட்டில் தனியாக அடைந்து கிடக்க அவருக்குப் பிடிக்கவில்லை.

(23ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைக்கப்படாத கொள்ளிகள்

■ மனா

"மனா! குஞ்சையாவுக்கு என்ன செய்வாய்?"

'கொள்ளிவைப்பன்'

கேள்விக்கான பதில் கிடைத்ததும் அகமகிழ்வார் குஞ்சையா. இந்தக் கேள்வியினதோ, நான் சொன்ன பதிலினதோ தாக்கம் என்ன வென்று தெரியாத வயது அது.

அந்தப் பதிலை உறுதிப்படுத்துவதற் காகவோ என்னவோ, என் மீது அபாரப்பிரியம் காட்டிய அவர் அடிக்கடி எனக்குத் தின்பண்டங்களை வாங்கித் தருவார். அடிக்கடி அவை எனக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே நானும் இந்தப் பதிலைச் சொல்வேன்.

சகோதரர்களான எனது ஐயாவும் குஞ்சையாவும் முறையே சகோதரிகளான எனது அம்மாவையும், குஞ்சம்மாவையும் திருமணம் செய்திருந்தமையால் இவர்களுடன் எனக்கு நெருக்கம் கூட. எனது ஐயா வெளிமாவட்டத்திலேயே வதியநேர்ந்ததால் நாலுவயதிலேயே அம்மாவை இழந்த என் மீது குஞ்சையாவுக்கு நல்ல வாரப்பாடு.

அடுத்தது ஆண்பிள்ளைதான் என்ற நம்பிக்கையில், அடுத்தடுத்து சியாமளா, மஞ்சுளா, பிரேமளா, கோமளா என்று பெற்றுக் கொண்டே போனதில், இனி ஆண்பிள்ளையே கிடைக்காது என்று முடிவுகட்டிவிட்டதாலோ என்னவோ என்னையே தனது ஆண்பிள்ளை என்றும் குஞ்சையா முடிவுகட்டியிருக்க வேண்டும்.

தமிழ் உணர்வுமிக்க குஞ்சையா நாளாக நாளாக எனது ஆதர்ஷ புருஷ ராக விளங்கினார். 'சுதந்திரன்' பத்திரிகை, அதன் வெளியீடுகளான காசிஆனந்தன் அண்ணாவின் குட்டிக்குட்டிக் கவிதைத் தொகுப்புகள் என இவர் வாங்கிவருபவை எனது வாசிப்புப் பசிக்குத் தீனியாகின. அவற்றின் தாக்கம் எனது மனதில் பதியலாயின.

தொடர்ந்தும் குஞ்சையா குஞ்சம்மாவுக்கு சரளா, மங்களா என பெண்பிள்ளைகளே பிறந்தன. அடுத்ததும் பெண்பிள்ளை. 'சும்மா 'ளா' 'ளா' எண்டு பேர்வைச்சுக் கொண்டு போறதாலதான் தொடர்ந்து உங்களுக்குப் பெட்டையாப் பிறக்குது. இந்த முறை பேரை மாத்திவையுங்கோ' என்று பலரும் சொன்னதால் 'ளா' வரிசையை முறித்து 'வாசுகி' எனபெயர் வைத்தனர்.

அந்த ராசியோ என்னவோ அதற்கு அடுத்ததாகக் கிடைத்தது ஆண் குழந்தை. 'செந்தில்குமரன்' என்று அவனுக்குப் பெயரிட்டு விழாக்கொண்டாடியது குஞ்சையா வீடு. அதன் பின்னர் 'தம்பியுடையான் படைக்கஞ்சான்' என்ற பழமொழி நினைவுக்குவரவே இவனுக்கு ஒரு தம்பியைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என நினைத்து மேற்கொண்ட முயற்சி பயனளிக்காமல் பெண் குழந்தையாகவே பிறந்தது. 'கவிதா' என்ற அதற்குப் பெயர் வைத்ததுடன் எல்லாவற்றிக்கும் சுபம் சொல்லியாயிற்று.

இக் காலப்பகுதியில் நான், 'குஞ்சையா இப்ப செத்து.. நான் கொள்ளிவைக்கப்போனா.. அவர் பெட்டிக்குள்ளால எழும்பி, நீ ஏன் கொள்ளிவைக்கிறாய்? செந்தில்


சங்கர்


சங்கீதா

எங்கை போட்டான்? என்று கேட்டாலும் கேட்பார்' என்று எனது குடும்பத்தவரிடம் சொல்வதுண்டு.

எட்டுப் பெண் சகோதரர்கள் மத்தியில் ராஜகுமாரனாக செந்திலின் வாழ்வு அமைந்தது. காலம் அவனை வளர்த்ததுடன் அவனுக்குரிய பணியையும் காட்டியது. நக்கீரன் என அவனுக்குப் பெயர் சூட்டப்பட்டது. அதேபோல் அவனுக்குநேரே மூத்தவளான வாசுகியின் பெயர் 'அர்ச்சனா' ஆகியது. இவர்களில் முதலில் பெட்டியில் வந்தது செந்தில்தான். வீட்டிலிருந்து அவனது வித்துடலைக் காவிச்செல்லும்போது குஞ்சையா என்னிடம் கேட்டார். 'மனா, எனக்குக் கொள்ளிவைப்பாய்தானே?'

எத்தனையோ வருடங்களுக்கு முந்திய உடன்பாடாயினும் அந்தச் சூழலில் இதனை அவர் ஞாபகப்படுத்தியது சம்மட்டியால் நெஞ்சில் அடித்தது போலிருந்தது.

யாழ். இடப்பெயர்வின் பின்னர் எல்லோரும் வன்னி வாசிகளானோம். அங்கு வாசுகியும் பெட்டியில் வந்தாள். அவளுக்கு வன்னிவிளாங்குளம் துயிலுமில்லத்தில் ஒரு கல்லறை கிடைத்தது. குஞ்சையா - குஞ்சம்மாவுக்கு 'இரண்டு மாவீரர் குடும்பம்' என்ற பெயர் ஒட்டிக் கொண்டது. இதற்குப் பின் குஞ்சையாவால் வன்னியில் இருக்கமுடியவில்லை. அங்கிருந்துவெளியேறும் தருணத்தில் தழு தழுத்த குரலில் மீண்டும் எமது உடன்பாட்டை நினைவு படுத்தினார். 'இனிச் சந்திக்கிறாயோ தெரியாது, சந்தர்ப்பம் கிடைச்சா நீதான் எனக்குக் கொள்ளி வை'

சமாதான ஒப்பந்தம் அமுலாகி யாழ் - வன்னிப் போக்குவரத்தும் ஆரம்பமானது. 'குஞ்சையா காலமாகி விட்டார்' என்ற செய்தி வன்னியில் எனக்குக் கிடைத்தது. சிறு வயது ஒப்பந்தம் மனதில் பாரமாக அழுத்திக் கொண்டிருக்க 'நான் எப்படியும் வருவேன்' என்ற செய்தியை அனுப்பினேன். எமக்கான விசேட அடையாள அட்டையைப் பெற்றுக் கொண்டு யாழ்ப்பாணம் விரைந்தேன். செம்மணிச் சுடலையைத் தாண்டும்போது அங்கே கட்டை அடுக்கப் பட்டிருப்பதைக் கண்டேன். குஞ்சையாவுக்குத்தான் இது என்று நினைத்துக் கொண்டு போகும் போது அவரது காடாத்தே (சடங்கு) முடிந்து போயிற்று என்று செய்தி கிடைத்தது.

எல்லாமே முடிந்துவிட்டது. தன்னுடன் நான் நிற்பேன் என்று நம்பி என்னைச் சேர்த்துக் கொண்டவரைக் கைவிட்டு, செய்த சத்தியப்பிரமாணத்தை மறந்து, வட்டுவாகல் தாண்டி முள்ளுக் கம்பிகளுக்குள் வாழும் வாழ்வைத் தேடிப்போன என் இழிநிலையை எண்ணி வெதும்புகின்றேன். இன்று துயிலுமில்லத்துக்குக் கொண்டு செல்லப்படும் தகுதியும் எனக்கில்லை.

ஆத்திரமா, கோபமா, என்று சொல்ல முடியாத நிலை எனக்கு. பழைய நினைவுகள் என்னைக் குத்திக் கிளறின. போக முடியாத காலத்தில் இப்படி நடந்திருந்தால் மனம் சமாதானம் அடைந்திருக்கும். இனி என்ன செய்வது? கொள்ளிக் கடன் தீரவேயில்லை. அவருக்கு வைத்திருக்கவேண்டிய கொள்ளியின் வெக்கையை என்மனதில் உணர்ந்தேன்.

● ● ●

எனது சின்ன மகன் நசிகேதனைச் சீண் டுவது மூத்தவன் சங்கருக்கு ஒரு கலை. சின்னவ்ன் 'நான் தான் அப்பான்ர புள்ள' என்று அடிக்கடி கூறுவதுண்டு, அவனை 'டேய்! நீ அம்மான்ர புள்ள' என்று கடுப்பேத்துவது மூத்தவனின் வழக்கம்.

இவர்களின் சண்டையை ரசிப்பதே எனக்கும் என் மனைவிக்கும் சுவாரஸ்யமான விடயமாக இருக்கும்.

ஒரு நாள் மத்தியானம் இந்தச் சீண்டல் நீண்டு கொண்டே போயிற்று. ஒரு கட்டத்தில் மூத்தவன் சொன்னான் 'டேய்.... என்ன இருந்தாலும் நான்தான்ரா அப்பான்ரை கொள்ளி. ஏனெண்டா நான் தான் மூத்த ஆம்புளப் புள்ள. நீ கடைசி என்றபடியால அம்மான்ர கொள்ளிதான்' - சின்னவன் சீறினான். 'அதென்னெண்டு? நான்தான் அப்பான்ர புள்ள. அப்ப நான்தான் அப்பான்ர கொள்ளி'

இவனை மடக்கவென்றே மூத்தவன் சொன்னான்.

'பார் அப்பா ஒரு நாளைக்குச் சாவார்தானே. அப்ப எல்லாரும் வந்து, டேய் சங்கர்! நீதான்ரா மூத்த பிள்ளை, நீதான் உங்கட அப்பாவுக்குக் கொள்ளிவைக்கவேணுமெண்டு சொல்லுவினம் அப்ப நீ என்ன செய்வாய்?'

பொறுமையை இழந்துவிட்டான் சின்னவன் - 'ஆ! அப்பிடியோ? அப்ப நான் இப்பவே வைக்கிறன் கொள்ளி' என்று கூறிவிட்டுச் சமையறையை நோக்கி விரைந்தான். அடுத்த சில வினாடிகளில் எனது மனைவியின் குரல் கேட்டது. 'டேய் கேதன் எங்கையடா கொண்டு போறாய் நெருப்புக் கொள்ளியை?"

மெல்ல மெல்லத் தூக்கத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்த நான் இந்தச் சத்தத்தைக் கேட்டதும் சூழ்நிலையின் விபரீதத்தைப் புரிந்து கொண்டு எடுத்தேன் ஓட்டம். கையில் நெருப்புக் கொள்ளி. அதைவிட தான் நினைத்தது நடக்காத கோபத்தை முகத்தில் வெளிப்படுத்தியபடி நின்றான் சின்னவன்.

"எனக்குத் துயிலுமில்லத்தில்தான் இடம். இவர்கள் இருவரும் கொள்ளிக்கு அடிபடுகிறார்கள்" என்று மனதில் நினைத்துக் கொண்டேன் நான்.

● ● ●

ஒவ்வொரு இடமாக நகர்ந்து நகர்ந்து முள்ளிவாய்க்காலுக்கு வந்தாயிற்று. சேவலின் கூவல் கேட்டு நீண்டநாளாயிற்று. அடிக்கடி கேட்கும் எறிகணையின் கூவல் எங்களது கூடாரத்திலும் ஒரு நாள் முடிந்தது. க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை எழுதிய பின்னரும் கை சூப்பும் பழக்கத்தைக் கைவிடாத எனது மூத்தவன் சங்கர் 07.04.2009 அன்று அதே நிலையில் மீளாத்துயிலில் ஆழ்ந்திருந்தான்.

துடிக்கக்கூட முடியாதபடி பிடரியில் விழுந்திருந்தது மரண அடி. துடிந்திருந்தால் நிச்சயம் வாயிலிருந்து விரலை எடுத்திருப்பான்.

'நான் தான் மூத்த புள்ள. நான் தான் அப்பான்ர கொள்ளி' என்று சின்னவனுடன் சண்டை பிடிப்பவனுக்கு மூட்டித் தீ வைக்க விறகோ, அவனோடு சேர்த்துப் புதைக்கச் சவப்பெட்டியோ கிடைக்கவில்லை. ஒரு பொலித்தீன் பையினால் சுற்றப்பட்டு மண்ணுக்குள் புதைக்கப்பட்டான்.

அப்போது எனது போராளி மகள் தாயை நோக்கிக் கேட்டாள் "அம்மா! மார்க்கண்டேயரைப் போல ஒரு மகன் வேண்டுமெண்டு கேட்டிருக்கலாமே கடவுளை!" அவள் அவன் வயதை ஞாபகப்படுத்த, நான் நவநீதம் பிள்ளையை நினைத்துக் கொண்டேன்.

இன்னும் இருபது நாளுக்குள் எமது கையால் போடும் மண்கூடக் கிடைக்காமல்தான் மண்ணுக்குள் போகப்போவது தெரியாமல் குரலெடுத்து அழுது கொண்டிருந்தாள் என் மகள் சங்கீதா (அறவிழி 26.04.2009).

எல்லாமே முடிந்துவிட்டது. தன்னுடன் நான் நிற்பேன் என்று நம்பி என்னைச் சேர்த்துக் கொண்டவரைக் கைவிட்டு, செய்த சத்தியப்பிரமாணத்தை மறந்து, வட்டுவாகல் தாண்டி முள்ளுக் கம்பிகளுக்குள் வாழும் வாழ்வைத் தேடிப்போன என் இழிநிலையை எண்ணி வெதும்புகின்றேன். இன்று துயிலுமில்லத்துக்குக் கொண்டு செல்லப்படும் தகுதியும் எனக்கில்லை.

ஏன்? துயிலுமில்லங்களே இல்லை என்றாகி விட்டது.

சரி! கொள்ளியாவது கிடைக்குமா? அல்லது பிந்துனுவெவவில் இருந்தோருக்குக் கிடைத்தது போன்று இரவல் கொள்ளியா?

(பண்டாரவளை பிந்துனுவெவ - இந்த இடத்தில் அமைந்திருந்த தமிழ் இளைஞர்களின் தடுப்பு முகாம் அங்கிருந்த படையினராலும் சிங்களப் பொதுமக்களாலும் தாக்கப்பட்டது. அறை குறை உயிரில் இருந்தவர்கள் கூட தீமூட்டி எரிக்கப்பட்டனர்.

குஞ்சையா : ஈழத்துக் கிராமங்களில் தந்தையின் சகோதரரை அழைக்கும் முறை.

குஞ்சம்மா : தாயின் சகோதரி

வாரப்பாடு : விருப்பம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடந்தவார சமூக இணையத் தரவரிசை

## 1 உணர்ச்சி வாரமான முள்ளிவாய்க்கால்




ஈழத் தமிழினத்தின் அவல வாழ்வின் அடையாளமாகிப் போன முள்ளிவாய்க்கால் நினைவுநாள் கடந்த வாரம் வந்தது. இதையொட்டி சமூக வலைத்தளங்கள் உணர்ச்சிப் பிழம்பைக் கக்கியிருந்தன.

முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் அண்மித்ததுமே சமூக வலைத்தளங்கள் கொந்தளிக்கத் தொடங்கியிருந்தன. கடந்த வாரத்தில் முள்ளிவாய்க்கால் நினைவு தொடர்பான பகிர்வுகளை பதிவிடாதவர்கள் எவரும் இல்லை எனலாம். எழுத்துப் பகிர்வுகளைக் காட்டிலும் அது சார்ந்த படங்களின் பகிர்வுகளே அதிகளவில் காணப்பட்டன.

புலம்பெயர் தேசத்தவர்கள் தங்கள் நாட்டில் இடம்பெறவுள்ள நிகழ்வுகளின் முன்னாயத்தப் படங்களையும் பதிவிட்டிருந்தனர். கவிதைகள், நினைவுக் கட்டுரைகள், விடுதலைப் புலிகள், தளபதிகள், தொடர்பான பகிர்வுகள் என்பவற்றால் ஒவ்வொருவரின் சுவர்களும் நிறைந்திருந்தன.

## 2 அன்னையர் தினம்

உலகில் நடமாடும் தெய்வம் அன்னைதானே. அன்னையரைப் போற்றும் நாளான அன்னையர் தினம் கடந்த வாரம் வந்தது. பேஸ்புக் வழமைபோன்று இம்முறையும் அன்னையர் தினத்தை சிறப்பிக்கும் முகமாக புரொபைல் படத்தை மாற்றும் செயலியை அறிமுகப்படுத்தியது.

அம்மாவுடன் செல்பி என்பதைப் பற்றி யோசிக்காத பலரும் சமூக வலைத்தளத்தில் அம்மாவுடனான செல்பி படத்தைப் பதிவேற்றி பாசத்தை வெளிப்படுத்தி லைக்குகளை பெற்றனர். அன்னையைப் பற்றிய கவிதைகள் பொங்கி வழிந்தன.

தங்கள் அன்னை பற்றிய பதிவுகளையும் பலரும் பகிர்ந்திருந்தனர். ஆகமொத்தத்தில் அன்னையர் தினத்தில் சமூகவலைத்தளங்கள் மகிழ்ச்சியாக இருந்தன. அன்னைக்கு இதுவும் மகிழ்ச்சிதானே...?




## 3 வெசாக்கும் தமிழ் பதிவர்களும்



பௌத்தர்களின் வெசாக் பண்டிகையும் கடந்தவாரம் சமூகவலைத்தளங்களில் அதிக கவனம் பெற்றது. பெரும்பாலான பதிவுகள் சிங்களத்துக்கு எதிராகவும் யாழ்ப்பாணத்தில் அத்துமீறிய பௌத்த அடையாளங்களை எதிர்ப்பதாகவுமே இருந்தன.

புதுவை இரத்தினதுரையின் வெசாக் பற்றிய கவிதையும் பலரால் பகிரப்பட்டது. வடக்கு மண்ணில் அத்துமீறிய பௌத்த அடையாளங்களை பல புகைப்படங்களும் எதிரொலித்தன.

இவை எல்லாவற்றையும் தாண்டி வெசாக் கண்காட்சி பார்த்தவர்களின் செல்பிகள், படங்களும் சமூக வலைத்தளங்களை ஆக்கிரமித்தன. இதில் வேடிக்கை என்னவென்றால் படங்கள் பகிர்ந்தவர்களில் சிலர் வெசாக் ஆக்கிரமிப்பு தொடர்பிலும் பதிவுகள் போட்டிருந்தனர்.

கடந்த வாரம் பேஸ்புக் போராளிகளுக்கு வெசாக் நல்ல தீனி போட்டது.




அவள் முகம் - ஞாயிறு

அவள் கண்கள் - திங்கள்

அவள் உதடு - செவ்வாய்

அவள் கன்னம் - புதன்

அவள் மூக்கு - வியாழன்

அவள் பற்கள் - வெள்ளி

மொத்தத்தில் அவள் ஒரு சனி....

### மை ரியாக்சன்




பொண்டாட்டி என் போன எடுத்து பார்க்கும்போது...










### இந்தவார மீம் (Meme)




2018ல ஒரு சட்டம் போட போறாங்களாம்

யாராவது ரொம்ப அழகா இருந்த Tax கட்டனுமாம்...

நீங்க தப்பிச்சுட்டீங்க..




ஆனா நாங்க தான் மாட்டிக்கிட்டோம்... எவ்ளோ கோடி கட்டணுமோ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

puthuvithi@gmail.com


## தேவை முன்னெச்சரிக்கை

சமீபத்தில் வடக்கில் ரயில் விபத்துக்கள் அதிகரித்துவிட்டன. பாதுகாப்பற்ற ரயில் கடவைகளே இந்த அநியாயச் சாவுகளுக்கான காரணமாகச் சொல்லப்பட்டாலும், மனிதக் கவனயீனமே மிக முக்கியமான காரணம். பெரும்பாலான நேரங்களில், ரயில் விபத்துக்களுக்கான காரணங்கள் மனிதப் பிழைகளிலிருந்தே ஆரம்பிக்கின்றன.

கடந்தவாரம் புளியங்குளத்தில் மணல் ஏற்றிச் சென்ற டிராக்டர் ரயிலோடு நேருக்கு நேர் மோதியது. டிராக்டர் அப்படியே சப்பளிந்து போக, அதில் பயணித்த இரு இளைஞர்கள் அந்த இடத்திலேயே உடல் சிதறிப் பலியாகியிருந்தனர்.

இந்தச் சம்பவம் நடைபெறுவதற்கு சில நாள்கள் முன்னதாக யாழ்ப்பாணம் சங்கத்தானையில் இராணுவ ட்ரக் ஒன்று, வேகக்கட்டுப்பாட்டை இழந்து ரயிலோடு மோதியது. ட்ரக்கில் இருந்த படையினர் ரயில் மோத முன்னரே அதிலிருந்து குதித்தோடியமையால் காயங்களோடு தப்பிக் கொண்டனர். இல்லாவிட்டால் அவர்களும் சட்னிதான். இவ்வாறான ரயில் விபத்துகளுக்கு காரணம் நிச்சயமாகப் பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் அல்ல. மனித்தவறுகள்தான்.

புளியங்குளத்தில் அந்த டிராக்டர் கொஞ்சம் நிதானித்திருந்தால், முன்னும் பின்னும் பார்த்திருந்தால் அந்த விபத்தைத் தவிர்த்திருக்கலாம். அத்துடன் குறிப்பிட்ட பகுதியில் வாகனங்கள் கடப்பதற்கான அனுமதியும் இருக்கவில்லை. அனுமதியற்ற ஒரு தடத்தை பயன்படுத்த முனைந்தமையும், அவசரமும், ரயில் வருவது பற்றிய முன்னெச்சரிக்கையின்மையுமே அந்த இரு உயிர்களும் பலியெடுக்கப்பட்டமைக்கு காரணிகள்.

சின்னச் சின்ன ஒலிகள், குறியீடுகள் என்பன பற்றியெல்லாம் போதிய பயிற்சி இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ளது. அப்படிப் பயிற்சி பெற்ற இராணுவத்தினரே சங்கத்தானையில் ரயிலோடு ட்ரக்கை மோதி விளையாட்டுத்தனமாக நடந்து கொண்டமைக்கும் ரயில் காரணமாக முடியாது. இந்த விபத்துக்கும் முழுக்காரணி மனிதத் தவறே.

ரயில் தண்டவாளத்தைப் பார்த்தவுடனேயே ரயில் பற்றிய நினைப்பு வந்திருக்கவேண்டும். ஏனெனில் ரயில் தண்டவாளம் சாதாரண வாகனங்களுக்கானவையல்ல. அவை ரயில்களுக்கு மட்டுமே உரித்தானவை. எப்படி இன்னொருவரின் வீட்டில் நுழையும் போது அவர்களின் வீட்டுக் கதவைத் தட்டி , அனுமதி பெற்று உள்நுழைகிறோமோ அப்படியே தண்டவாளங்களைக் கடக்கும் போதும் இருப்பக்கம் தலையைக் கொஞ்சம் நீட்டிப் பார்த்து, ரயில் வரவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு அவற்றைக் கடக்கலாம்.

பொதுவாக தண்டவாளத்தை வாகனம் கடக்கும் போது ரயில் வருமாயின் அப்போது ஏற்படும் அதிர்வலைகள் காந்த அலைகளாக மாற்றமடைந்து இயந்திர இயக்கத்தை நிறுத்திவிடும். இதை அறியாமல், ரயில் நெருங்க முன்னர் தண்டவாளத்தைக் கடந்துவிடலாம் என்றே பலரும் நம்புகிறார்கள். அந்த நம்பிக்கை வாகனத்தை தண்டவாளத்தைக் கடக்க தூண்டுகிறது. கடைசியில் ரயிலின் காந்த அலை வாகனத்தை நிறுத்திவிட, முடிவு வேறுவிதமாக மாறிவிடுகின்றது.

வீணாக நம் தலையை வலியக் கொண்டு சென்று மோதிவிட்டு, ரயிலில் குறை சொல்லாமல் இனியாவது தண்டவாளங்களைக் கடக்கும் போது கொஞ்சம் எச்சரிக்கையோடு நடப்போம். அப்படி முன்னெச்சரிக்கையோடு இருந்தாலே ரயில் விபத்துக்களை சடுதியாகக் குறைக்கமுடியும்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# ஞானசாரதேரர் : அவசிய வஸ்து



ஞானசார தேரர்' முஸ்லிம்களுக்கு மிக அவசியப்பட்டவர்.

ஞானசார தேரர் மிகச் சரியான பாதையில் செல்கிறார். அவருக்கான நிகழ்ச்சிநிரலில் எந்தக் குறைபாடுகளையும் அவர் ஏற்படுத்தவில்லை. அவரின் கடமைகள் எவ்வித இடையூறுகளுமின்றி நடைபெறுகின்றன. முஸ்லிம்களுக்கு ஞானசார தேரர் மிக அவசியமானவர். அவர் இல்லாவிடில் முஸ்லிம்களின் நிலைப்பாட்டினை நினைத்து நாம் அஞ்ச வேண்டியுள்ளது.

எப்படித் தெரியுமா? ஞானசார தேரர் போன்றவர்கள் இல்லாவிடில் முஸ்லிம் அரசியலினை முஸ்லிம் தலைமைகள் எப்படி வழி நடத்துவது? எதிர்வரும் தேர்தலில் முஸ்லிம் மக்களது வாக்கின் பிரதான கதாபாத்திரமே ஞானசார தேரர்தான். சென்ற தேர்தல்களிலும் அவரே முக்கியமானவராகவும், அதுவே முக்கிய தேவையாகவும் நமக்கிருந்தது. ஞானசார தேரர் முஸ்லிம் எதிர்ப்பு வாதத்தினை கைவிட்டால் கூட, முஸ்லிம் அரசியல் அதற்கான எந்த வாய்ப்புகளையும் அவருக்கு வழங்காது.

ஞானசார தேரரை கைது செய்வதாலோ, தடுத்து நிறுத்துவதாலோ அதிகம் நஷ்டமடையப் போவது எமது முஸ்லிம் அரசியல் நிலைப்பாடுதான். ஆக ,ஞானசார தேரர் உடைக்கின்ற ஒவ்வொரு பள்ளியும், அபகரிக்கின்ற, அத்துமீறி நுழைகின்ற ஒவ்வொரு நிலங்களும் முஸ்லிம்களின் பெறுமதியான உணர்வுகளைச் சீண்டுவதற்கு, இலகுவான வழி முறையே. ஞானசார தேரர் மட்டும் இல்லாவிடில் முஸ்லிம் தலைமைகளே இருக்க முடியாது.

இவர்களது பாராளுமன்ற ஆசனம் ஞானசார தேரர் போட்ட பிச்சை. ஆகவே ஞானசார தேரர் இன்றி நாம் ஒன்றுமே செய்ய முடியாது. பள்ளி உடைப்பதைத் தவிர வேறு என்ன அரசியல் வேண்டும்? ஞானசார தேரர் இல்லாமல் போனால் முஸ்லிம் அரசியல் காய்ந்து விடும். அந்த அபாயத்தினை நினைத்து எதிர் வரும் தேர்தல் காலங்களில், பிரசார மேடைகளில் ஞானசார தேரர் பற்றிய முஸ்லிம் தலைமைகளின் உரையாடல்களில், உணர்வுகள் பொங்கி எழுந்து முஸ்லிம் மக்கள் வாக்களிப்பர் பின்பு என்ன நடக்கும்? வழமை போல மீண்டும் தொடங்கும் ஞானசார தேரரின் மிடுக்கு...

- ஏ.எம்.சாஜீ;

## பேரரசரும் ஐயாவும்

லெக்கின்ஸ் பேரரசரை சந்தித்த கணத்தில் ஐயாவுக்கு ஆனந்தப் பிரஷர். ஐயாவின் கையை பேரரசர் பிடித்து " நல்லா வயசாப் போட்டுது. உடம்பைக் கவனமா பாருங்கோ" என்று சொல்லிக் கொண்டே, பாதாம் பருப்பு பெட்டியை நீட்டினார். பேரரசரின் குசலம் விசாரிப்பும், பரிசும் ஐயாவை மெய்மறக்கச் செய்தன. பொய் பிறந்தது.

" மாட்சிமை பொருந்தியவரே! அடுத்த முறை வரேக்க ஒருக்கா எங்கட கோணேச்சரத்தானிட்ட வர வேணும். பக்கத்தில தான் காளி கோயில். அதையும் ஒருக்கா எட்டிப் பாத்தீங்களெண்டால் என்ரை பிறவிப்பயனை அடைஞ்சிடுவன்" ஐயா விழி நீர் சொரிய சொல்லி முடித்தார். பேரரசர் செல்பி எடுத்துவிட்டு, அடுத்த லெக்கின்ஸை மாற்றி மேக்கப் போடப் போய்விட்டார்.

வெளியே வந்த ஐயா கமெரா வெளிச்சத்தில் புழுவாய் கூசி நெளிந்தார். பின் இப்படிச் சொன்னார்,



"மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் எல்லாவற்றையும் விளக்கினோம். அவரும் அக்கறையோடு கேட்டார். அவர் உடுப்பு மாத்திறத்துக்கிடையில நிச்சயம் தீர்வு வரும். பொறுமையா இருக்கோணும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K

# "உயிரோடு இருப்பதற்காக வெட்கப்படுகிறேன்"



2009இல் வல்லரசு நாடுகள் சேர்ந்து கூட்டழிப்பை எம் தாயக மண்ணில் நிகழ்த்திக் கொண்டிருந்த போது தமிழ் எழுத்தாளப் பெருந்தகைகள் அந்த நேரத்திலும் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல ஆண்டாண்டு காலம் திட்டமிட்ட இன அழிப்பில் வெந்து கொண்டிருந்த சனத்துக்குச் சாத்வீக வழியில் போராடக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

அதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர் விடுதலைப் புலிகளில் இருந்து கருணா வெளியேறித் தன் ஆட்டத்தை ஆரம்பித்ததைக் கூட ஒரு எழுத்தாளர் தன் ஜன்னலில் இது ஜனநாயக வெளிப்பாடு என்ற தோரணையில் கக்கியிருந்தார். இறுதிக் கட்டப் போரில் எம் உறவுகள் அழித்தொழிக்கப்பட்ட சமயம் அவரின் ஜனநாயகக் கருத்துகள் வெளிவரக் கண்டதில்லை.

அந்த வேளை எஸ்.ரா அவர்கள் தன்னுடைய தளம் வழியாக எழுதிப் பகிர்ந்த "உயிரோடு இருப்பதற்காக வெட்கப்படுகிறேன்" என்ற பகிர்வு முன் சொன்ன இந்த வன்மம் தோய்ந்த எழுத்துகளைக் கடந்து போகச் செய்து ஆற்றுப்படுத்தியது.

இந்த நாள் இந்த நிமிடம் எட்டு ஆண்டுகளுக்கு முன் பிணக்காடாய் இருந்த என் தேசத்தை நினைக்கும் நேரம் இந்தக் கட்டுரையும் நினைப்புக்கு வந்தது. - கானா

எஸ்.ஆர்.

இறுதிப்போரின் பின்பு மீளாத துயரமும் அழிவுமாக ஈழம் சிதைந்து போயிருக்கிறது. மின்ஊடகங்கள் அவற்றைத் திரும்பத் திரும்ப காட்சிப் பொருளாக காட்டிக் கொண்டேயிருக்கின்றன. மனித உயிரிழப்பு தரும் வேதனை வெற்று காட்சிகளாக கடந்து போவது தாங்க முடியாத வலி தருவதாக உள்ளது.

குறிப்பாக ஆங்கில ஊடகங்கள் ஈழப்போரினை தங்களது அற்ப அரிப்புகளுக்குத் தீனி கொடுப்பதற்கே அதிகம் பயன்படுத்திக் கொள்கின்றன. தமிழ் ஊடகங்களில் பெரும்பான்மை இதையே நகலெடுக்கின்றன. இறந்து போன பல்லாயிரம் மனிதர்களுக்கான துக்கத்தையோ உயிர் பிழைத்தவர்களின் சொல்லவொண்ணாத துயரத்தையோ எந்த ஊடகமும் பகிர்ந்து கொள்ளவில்லை.

நண்பர் நாகர்ஜூனன் தனது வலைப்பக்கத்தில் இன்றைய ஈழத்தின் அவலநிலை பற்றிய சில இணைப்புகளை வழங்கியிருந்தார். 'ரைம்ஸ்' இதழ் ஈழப்படுகொலைகள் பற்றி என்ன தகவல்களை தருகின்றன. என்ற இணைப்புகள் அவை.

அத்துடன் அவரே மேரி கொல்வின் கட்டுரையை மொழியாக்கம் செய்து போட்டிருந்தார். அந்த கட்டுரையின் ஈரம் தரும் அதிர்ச்சியும் மனித நம்பிக்கை மோசடியும் நாம் வாழும் காலம் குறித்த மிகுந்த குற்றவுணர்வை, பயத்தை, அசிங்கத்தையே தருகின்றன.

கடந்த சில ஆண்டுகளாகவே ஈழத்திலிருந்து அவ்வப்போது சில நண்பர்கள் மின்னஞ்சல்கள் அனுப்பிக் கொண்டிருப்பார்கள். தங்கள் நம்பிக்கைகளை, வலியை, துயரை வார்த்தைகளால் பகிர்ந்து கொள்வதைத் வேறு வழியில்லை என்ற சூழலில் எழுதப்படும் கடிதங்கள் அவை.

வலி மிகுந்த அந்த மின்னஞ்சல்களை திறந்து படிக்கவே தயங்குவேன். அவை பெயர் தெரியாத உறவுகளின் மரணசாட்சியங்களை அல்லவா சுமந்து வந்திருக்கிறது. எல்லா மின்னஞ்சலிலும் சாவிற்கு கூட அழமுடியாத உடைந்த மனது பீறிட்டுக் கொண்டிருக்கும்.

என்ன பதில் அனுப்புவது. அவர்கள் எந்த பதிலையும் கேட்கவில்லை. அந்த கடிதங்கள் தங்களை சுற்றிய உலகின் கருணையற்ற தன்மையை சுட்டிக் காட்டுகின்றன. மனிதர்கள் விலங்குகளை விடவும் கீழாக நடந்து கொள்கிறார்கள் என்பதை அடையாளம் காட்டும் வரிகள். சொந்த துயரங்களை விடவும் தன் நிலத்தையும் நிலம் சார்ந்த விடுதலையை. அதன் இழப்பு துயரங்களையும் முன் வைத்த கடிதங்கள்.

யோ என்ற ஒற்றை எழுத்துடன் ஒரு நண்பர் இரண்டு ஆண்டுகாலமாக அடிக்கடி மின்னஞ்சல் அனுப்பிக் கொண்டிருந்தார்.

தமிழ் ஈழ விடுதலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை அவருக்கு உறுதியாக இருந்தது. அவரது மின்னஞ்சல்களில் சோர்வுறாத நம்பிக்கை இருப்பதை கண்டிருக்கிறேன். யுத்தசாவுகள் அவரது நம்பிக்கைகளை தகர்க்கவில்லை. ஆனால் இரண்டு மாதங்களுக்கு முன்பாக அவர் ஒரு மின்னஞ்சல் அனுப்பியிருந்தார்

"அதில் நான் உயிரோடு இருக்கிறேன்" என்பதை தவிர வேறு வாசகமே இல்லை.

படித்து முடித்த இரவெல்லாம் கணினியை அணைத்துவிட்டு இருளில் அமர்ந்தபடியே செயலற்று இருந்தேன். அது ஒரு மனிதனின் வெளிப்பாடு அல்ல. மீதமிருக்கும் நம்பிக்கைகளை கூட கைவிட வேண்டிய சூழல் உருவாகிவிட்டதே என்ற ஓர் இனத்தின் அவலக் குரல். அது என்னை துவள செய்துவிட்டது.

பகலிரவாக கறையான் அரிப்பதை போல அந்த சொற்கள் என்னை அரித்துக் கொண்டேயிருந்தன. அந்த மின்னஞ்சலுக்கு என்ன பதில் அனுப்புவது. பதில் தேவையற்ற அந்த மின்னஞ்சல் தரும் வலி ரணமாக கொப்பளிக்கத் துவங்கியிருந்தது. அவரிடமிருந்து இன்னொரு மின்னஞ்சல் வராதா என்று நினைத்துக் கொண்டிருந்தேன். வரவேயில்லை

பேரழிவின் இரண்டு தினங்களுக்கு பிறகு அவரிடமிருந்து இன்னொரு மின்னஞ்சல் வந்தது. திறந்து பார்த்தேன். மூன்றே வார்த்தைகள்

"உயிரோடு இருப்பதற்காக வெட்கப்படுகிறேன்"

எவ்வளவு இழப்புகள். எவ்வளவு குருதிப்பெருக்கு. யாவும் ஒடுக்கப்பட்ட சொல்லமுடியாத துயரம் இந்த ஒரு வரியில் வெளிப்படுகிறது.

"நாம் என்ன ஆயுதம் எடுக்க வேண்டும் என்பதை நமது எதிரியே முடிவு செய்கிறான்" என்று சொன்ன புரட்சி கருத்துகளை நேற்று வரை கொண்டாடி வந்த பலரும் இன்று வன்முறை பாதை தவறானது. வன்முறையில்லாமல் நாம் அமைதியாக போராடி வெற்றி பெற வேண்டும் என்ற யோசனைகளை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ரத்தம் சிந்தாமல் எந்த சமூகமும் மாறியதில்லை என்பதே வரலாறு திரும்ப திரும்ப சொல்லும் உண்மை. காந்தி வழியில் தான் இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்தது என்ற பள்ளிப்பாட சரித்திரம் உண்மையில்லை என்பதை இந்த சுதந்திர போரில் வெள்ளையர்களால் அடிபட்டும் வன்கொலைக்கு உள்ளாகியும் இறந்தவர்களின் எலும்புகள் என்றும் சொல்லும்.

நான் வன்முறையை வளர்க்க சொல்லவில்லை. ஆனால் வன்முறை என்பது ஆயுதங்கள் ஏந்தி போரிடுவது மட்டுமில்லை. அதிகாரம் மேற்கொள்ளும் அத்தனை செயல்களிலும் வன்முறை பீறிட்டுக் கொண்டுதானே இருக்கிறது.

ஆயிரமாயிரம் மக்கள் கொட்டடிகளில் நிராதரவாக அடைக்கப்பட்டிருக்கிறார்கள். வதை முகாம் போல அகதிமுகாம்கள் உள்ளன என்ற கண்கூடான உண்மைகள் வெளிவந்த பிறகும் அதைபற்றிய எவ்விதமான கலக்கமும் இன்றி இனி ஈழம் செய்ய வேண்டியது என்னவென்று இலவச புத்திமதிகளை ஈழத்திற்கு வாரி வழங்கும் அறிவு வன்முறையில்லையா?

ஈழப்போரின் வழிமுறைகளை தமிழகத்தில் உட்கார்ந்து கொண்டு சொந்த வாழ்வின் சொகுசு கலையாமல் யோசிப்பதும் புத்திமதி வழங்குவதும் போன்ற மோசடிகளை வேறு எந்த சமூகத்திலும் காணமுடியாது.

எது சரி? யார் செய்தது தவறு? ஈழபோராட்டம் முடிந்து விட்டது என்பது போன்ற உப்புசப்பில்லாத மயிர்பிளக்கும் விவாதங்கள் எப்போதும் போலவே காணும் எல்லா ஊடகங்களிலும் நிரம்பி வழிகிறது.

தொலைவில் குருதி குடித்த மண் அறுபட்ட குரல்வளையோடு கிடக்கிறது. சவ அமைதி எளிதானதில்லை. அதன் வலிமை அடங்காதது. சாவின் துர்மணம் கொண்ட மண். பித்தேறிய மத்தகத்தின் கண்களை போல நம்மை வெறித்துக் கொண்டிருக்கிறது.

"பிரபாகரன் உயிரோடு இல்லை. அவர் கொல்லபட்டுவிட்டார்" என்ற செய்தியை (வதந்தியை) எதற்காக இத்தனை உற்சாகமாக ஊடகங்கள் கொண்டாடுகின்றன. என்ன வெறுப்பு அது. ஈழமக்களின் கடைசி யுத்தம் முறியடிக்கபட்டுவிட்டது என்பதை பொதுவெளிகள் ஏன் களிப்போடு பேசி கதைக்கின்றன.

ஓர் இனம் தன் வாழ்வுரிமை மறுக்கபட்டு ஒடுக்கப்பட்டதை கொண்டாட முடிகின்ற மனிதர்களோடு எதற்காக எழுத்து படிப்பு இலக்கியம் என்று காலத்தை வீணடிக்கிறோம் என்று ஆத்திரம் வருகிறது.

நான் ஆழ்ந்த அரசியல் அறிவு கொண்டவன் இல்லை. ஈழப்போராட்டத்தின் வரலாற்றை முழுமையாக கற்று தேர்ந்து சரி பிழைகளை நிறுத்துப் பார்த்து எனது நிலைப்பாட்டை எடுப்பவனுமில்லை.

வரலாற்றில் இத்தனை பெரிய இனப்படுக்கொலையை நிகழ்த்திவிட்டு அதை மூடிமறைத்து கொண்டாடும் தேசத்தை, அதை நியாயப்படுத்தும் மனிதர்களை காணும் போது அரசியல் அறிவை மீறி உணர்ச்சிவசப்பட வேண்டியிருக்கிறது. கோபமும் இயலாமையும் எழுகின்றது.

யோவின் மின்னஞ்சல் நினைவில் உறுத்திக் கொண்டேயிருக்கிறது

"உயிரோடு இருப்பதற்காக வெட்கப்படுகிறேன்."

இது சொற்கள் அல்ல. ஒடுங்கி நிற்கும் இனத்தின் மனசாட்சியின் முணுமுணுப்பு. என்மீது படிந்த அழியாக்கறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்: பிறரின் விருப்பங்களுக்காக பிறந்தவள்

■ மாதுமி

பிறக்கிற ஒவ்வொருவரும் அத்தனை உரிமைகளுடனும் பிறக்கிறனர். ஆனால் வெறுமனே இந்த ஆண் பெண் என்ற வித்தியாசத்தினால் பெண்களுக்கு சில உரிமைகளை தடை செய்யும் வகையில் கட்டுப்பாடுகளை புகுத்தும் நிலைமையை எதிர்ப்பவர் ஒருவரை இலகுவில் யதார்த்தத்துக்கு அப்பாற்பட்டவராக முத்திரை குத்தி விடுகிறார்கள். உடலியல் கூற்றின் அடிப்படையில் ஆணாக அல்லது பெண்ணாக அடையாளப்படுத்தப் படுவதை தவிர எந்த வகையில் எப்போது பெண் ஆணுக்கு குறைவானவள் ஆனாள்? பெண் மென்மையானவள் என்று யார் உருவாக்கியது?

ஆண் என்கிற ஒரு நடுப்புள்ளி தனது சௌகரியத்துக்காக பெண்ணை பல வழிகளில் தனக்கேற்ற வகையில் வைத்திருக்க நினைப்பது, அதை பெண்ணுக்கு பாதுகாப்பு, பெண் மென்மையானவள், பூ போன்றவள் என்றும், ஆண்கள் தாங்கி பிடிக்க வேண்டியவர்கள் என்றும் மனோபாவத்தை உண்டாக்கி விட்ட பின்பு அவள் தன்னில் தங்கி இருக்க வேண்டியவள் என்ற கருத்தை எல்லா வகையிலும் உணரச் செய்வதற்கான ஏற்பாடுகளையும் செய்திருக்கிற விதிமுறைகளை கேள்வி கேட்பது யதார்த்த விரோதம், அதிலும் எல்லாரும் அங்கீகரிக்கப்பட்டு இருக்கிற 'வழக்கத்தை' கேட்பது நியாயமற்றது தான். பெண் ஆணுக்கு இணையானவள் அல்ல என்பதை மீள மீள வலியுறுத்தவே பல கோட்பாடுகள் கொள்கைகள் விதிகள் சட்டங்கள் உருவாக்கப்பட்டது யாரால்?

பெண்களை படிக்க அனுமதித்தோம், வேலை செய்ய அனுமதித்தோம் வேறென்ன சம உரிமை வேண்டும் என்று கேட்கிற போது எங்கே தொடங்கி எங்கே முடிப்பது என்று தெரியாமல் யோசிக்கத் தான் தோன்றுகிறது. இன்னும் அவளுக்கான அனுமதியை இன்னொருவர் வழங்குகிறார் என்றால் அவளை அதிகாரம் செய்வது இன்னொருவர் என்று தானே அர்த்தம்? உரிமையை யாரும் யாருக்கும் கொடுக்க முடியாது. அதை மற்றவர் அடைவதில் தடுப்பதில் தான் பிரச்சினை என்று சொல்கிறேன். பெண்கள் வாக்குரிமை இல்லாமல் இருந்தார்கள், ஏன்? பெண்களின் கல்விக்காக போராட வேண்டி இருந்தது ஏன்? பெண்களின் வேலைக்காக, சுகாதாரத்துக்காக என்று ஆண்கள் அனுபவிக்கிற உரிமைகளை பெண்ணும் அனுபவிக்க என்று அவர்கள் ஏன் நினைத்தது இல்லை?

பெண்ணுடல் ஆணுக்கானது அதனால் அந்த ஆண் அதை மதிக்கிற மாதிரி பெண் நடக்க வேண்டும் என்பது தான் உள்ளார்ந்த சித்தாந்தமாக நம்மை அறியாமல் திணிக்கப்பட்டு இருக்கிறது. ஒரு பெண்ணினது வாழ்வின் அதியுயர்ந்த இலட்சியமாக ஆணொருவனை திருமணம் செய்து அவனுக்காக வாழ்வை அர்ப்பணித்து வாழ வேண்டும் என்கிற போக்கில் தான் இன்னும் எல்லாமே இருக்கிறது. ஆணை மையமாக வைத்து அவனுக்கு உகந்த இடங்களில் பெண்ணை வைப்பது / வைத்திருக்க விரும்புகிற, சீரும் தனமும் கொடுத்து திருமணம் செய்து வைத்தால் பிள்ளைகள் பெற்று வளர்த்து சாக வேண்டியது தான் பெண்ணானவள் என்ற நிலையை அடுத்த சந்ததிக்கும் கடத்துகிற நிலையில் இருக்கிறோமே.

பெண்கள் கல்வி கற்கலாம், வேலைக்கு போகலாம் என்று வாயால் சொல்லி விடலாம். அதற்கான வாய்ப்புகளை அணுக அவர்களால் இலகுவில் முடிகிறதா? கல்வி கற்கலாம் ஆனால் நிறைய கற்க கூடாது. கற்றால் என்ன? திருமணத்துக்கு ஆண் தேட கஷ்டம். தனக்கான துணையை தேர்ந்தெடுக்க முடியாதவளாக தான் சமூகமும் கல்வியும் அவளை வைத்திருக்கிறது.

வெயிலில் திரியாதே, அழகு கெட்டுவிடும் ஆண்கள் அழகானவர்களை தான் விரும்புவார்கள், எமது மொழியில் 'கறுப்பு என்றால் ஆண்கள் மறுப்பார்கள்'

கராத்தே கற்க போகிறாயா? பெண்ணுக்குரிய நளினம் கெட்டுப் போகும். ஆண்களுக்கு மென்மையானவர்களைத்தான் பிடிக்கும்

தலை முடியை வெட்டப் போகிறாயா நீண்ட கூந்தல் தான் பெண்ணுக்கு அழகு அது தான் ஆணுக்கு பிடிக்கும்.

அழுவது பெண்களின் குணம் என்று எப்போது ஆனது என்று தெரியவில்லை. ஆண்களும் அழுவார்கள். ஆனால் அதை நகைப்புக்கு உள்ளாக்கி பலவீனமானவர்களின் செயல் என சித்தரித்து 'பெண் போல அழுகிறாய்' என்று தான் சொல்வார்கள். அதே போல தைரியமான பெண்ணை 'ஆண் போல தைரியம்' என்பார்கள். தைரியமாக இருப்பது ஆணின் குணமல்ல. அவளை தகப்பன் ஆண் போல வளர்த்தார் என்று சொல்வதில் பெருமைப்பட்டும் அவனை பெண் போல வளர்த்திருக்கிறார்கள் என்பதை நகைப்பாகவும் தான் சொல்வார்கள். 'ஆண்' போல என்பதும் அவனுக்கென்று வகுத்த விடயங்களை செய்வதும் பெருமை, பெண் போல என்பது அப்படியல்ல.

உடைகளில் கூட ஆண்கள் உடையை அணிகிற பெண்களை காலப்போக்கில் ஏற்க முடிந்த சமூகத்துக்கும் பெண்களின் உடையை ஆண்கள் அணிந்தால் ஏற்க முடிவதில்லை ஏன்? பெண் குறைவானவள், அவளது உடையை அணிவது ஏற்புடையதல்ல என்ற ஆழமான பதிவு இன்னும் இருக்கிறது. உடை வேண்டாம் நகப்பூச்சு பூசுகிற ஆண்களை 'பெட்டை' என்று சொல்லுவதை காதுபட கேட்டிருக்கிறேன். இந்த ஆண் பெண் பேதத்தில் லாபம் கண்டவர்கள் என்னவோ வியாபாரிகள் தான்.

சிறுவயதிலேயே பெண்ணை திருமணம் செய்து கொடுத்தல் அந்தப் பெண்சார்ந்த முடிவை பெண்ணின் தந்தை எடுத்தல் இதெல்லாவற்றுக்கும் மேலாக பெண்ணுடல் ஆணுக்கானது என்பதின் ஆதிக்கத்தின் அதியுச்சமாக பெண்குறி மூலத்தை சிதைத்தல், இன்னும் பல கலாசாரப்பின்னணியில் இருக்கிற போதும் சுகாதாரத்தில் முன்னேற்றம் கல்வித்துறையில் முன்னேற்றம் என்று புள்ளிவிபரங்களை முன்வைத்து பெருமைப்படுவது நகைப்பாக இருக்கிறது. பெண்களின் ஆரம்ப பள்ளிக்கான சேர்கைகளில் இருக்கிற விபரம் பாடசாலை இடைநிறுத்தம் பற்றி இருப்பதில்லை, பல்கலைக்கழக அனுமதி பற்றி இருக்கிற விபரம் வேலை வாய்ப்பு பற்றி இருப்பதில்லை. திருமணத்தின் பின் வேலை செய்வதில்லை அல்லது செய்வதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படுகிறன.

கி அண்ட் கா (Ki & Ka) படத்தில் நாயகன் வீட்டை பார்த்துக் கொள்வார் நாயகி ஒரு வர்த்தக பெண்மணி. நீங்களா வீட்டில் மனைவி என்று கேட்கும் போது நாயகன் "இல்லை நான் தான் கணவன் ஆனால் இந்த வேலைகளை நான் பார்த்துக் கொள்கிறேன். சமைப்பதால் வீட்டை பார்த்துக் கொள்வதால் அது பெண்ணுக்கான அல்லது மனைவிக்கான வேலை என்று அர்த்தமல்ல. அதை யாரும் செய்யலாம். எனக்கு இது பிடிக்கிறது" என்று சொல்வார். நமது சமூகத்தில் பெண் வேலைக்கு போய் ஆண் தங்கி இருத்தலை கௌரவ குறைவாகத்தான் நினைக்கிறார்கள்.

பெண் சம்பாத்தியத்தில் ஆண் இருப்பதா? என்கிற கேள்வியில் கோபம் வருகிறது. ஏன்? சம்பாத்தியம் ஆண்களுக்கானது என்கிற எண்ணம். அந்த சம்பாதிக்கும் ஆண்கள் பெண்களை என்ன நிலையில் வைத்திருக்க விரும்புவார்களோ அந்த நிலையில் தான் இருக்க விரும்பவில்லை. நான் சம்பாதிக்கிறேன் என்கிற ஒரு நிலை ஆண்களுக்கு பெண்களை அடக்கியாள பயன்பட்டது. அதனால் பெண் சம்பாதித்தால் அவள் தன்னை அடக்கிவிடுவாள் என்ற எண்ணம் தானாகவே வருகிறது. படித்த திமிராக சம்பாதிக்கிற திமிராக எத்தனை பெண்களை அடையாளப்படுத்தி இருப்பீர்கள்? அதிலும் மனைவி தன்னை விட அதிகம் சம்பளம் எடுக்க கூடாது, எடுத்த சம்பளத்தை தன்னிடம் தர வேண்டும் என்று கட்டளைகள். நன்கு படித்த பெண் என்றாலும் தன்னை விட குறைந்த படிப்பு உள்ளவள் வேண்டும் என்பது. அதிகம் படித்தவள் குடும்பத்துக்கு ஆகாதவள் என்று முத்திரை வேறு. ஆணென்றால் சம்பாதிக்கவே வேண்டுமென்ற மனநிலையை உள்வாங்கி வளர்த்துக்கொண்ட பெண்கள் காரணமாக அழுத்தங்களுக்கு உள்ளாகும் நிலையில் ஆண்களும் இருக்கிறார்கள் என்பதையும் சொல்லியே ஆக வேண்டும்.

எந்த துறையிலும் சாதித்தவர்கள் என்று சில பெண்களின் பெயர்களை சிலர் சொல்லுவார்கள். எத்தனை பெண்கள்? அந்த துறையில் இருந்த ஆண்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டு விகிதாசாரத்தில் சொல்லுங்கள்? அந்த பெண்கள் சாதித்து முடிந்த பிறகும் 'இன்னாரின்' மகளாக 'இன்னாரின்' மனைவியாக தான் அடையாளப்படுத்தப் படுகிறது. 2016 ஒலிம்பிக் இல் நீச்சலில் பதக்கம் வென்ற பெண் மற்றும் துப்பாக்கி சுடுதலில் பதக்கம் வென்ற போது செய்திகள் 'இன்னார்' 'இன்னாரின்' மனைவி பதக்கம் வென்றார் என்று கணவன்மாருக்கு அந்த வெற்றியை கொடுத்தன. சச்சின், அஞ்சலியின் கணவன் துடுப்பாட்ட சாதனை செய்தார் என்று என்றேனும் செய்தி பார்த்ததாக நான் நினைக்கவில்லை.

சந்திரிகா ஆட்சி, செய்தார் சிறிமா ஆட்சி செய்தார் என்று சொல்பவர்களும் அவர்கள் எதை செய்தார்கள் என்று கேட்பவர்களும் இன்னும் இருக்கிறார்கள். நான் அவர்களிடம் கேட்பது 'உங்கள் பெண்கள் அரசியலுக்கு வர விரும்புகிறார்கள் என்ன செய்வீர்கள்?' அது ஆண்கள் விடயம், பணமுள்ளவர் விடயம் என்று தட்டிக் கழிப்போமே தவிர ஆதரவு தருவதில்லை. அதை விட ஒரு முயற்சியில் தோற்றால் தோற்றவர் என்கிற முத்திரையை அழுத்தமாக்கி அவரை மீள ஒரு முயற்சி செய்ய விடாமல் அக்கறை அறிவுரை என தவிர்க்க பார்க்கிறோம். ஏன்? பெண் உனக்கு தேவையில்லாத வேலை இது என்று சொல்கிறோம்.

கடினமான பாதை வேண்டாம், நல்ல பாதை இருக்கிறது அதிலே போ என்போம். ஆண் முள்ளு நீ சேலை, கிழிந்தாலும் கிழிந்ததை தைத்தாலும் அடையாளத்தை மறைக்க முடியாது என்கிற மாதிரியான விஷயங்களை போதிக்கிறோம்/போதிக்கப்படுகிறோம். உனக்கான விடயங்களை எதிர் கொள்ளு என்பதாக ஆதரவு தரும் சுற்றத்தை எங்கே காண்பது?

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொல்லாச் சிறகு விரிக்கும் ஹர்த்தால்கள்

- ஜூட் பிரகாஷ்



வரலாற்றில் தமிழர் பிரதேசத்தில் நடந்த முதலாவது பகிஷ்கரிப்பாக 1931இல் யாழ்ப்பாண இளைஞர் பேரவை (Jaffna Youth Congress-JYC), முன்னின்று நடத்திய தேர்தல் பகிஷ்கரிப்பு பதிவாகிறது. டொனமூர் யாப்பிற்கமைய, நடத்தப்பட்ட சர்வஜன வாக்குரிமையடிப்படையிலான தேர்தலை, யாழ்ப்பாணத் தமிழர்கள் புறக்கணித்தார்கள்.

சாதி, மத, பால் பாகுபாடின்றி, ஆசிய கண்டத்திலேயே இலங்கையில்தான் முதன் முதலாக அனைவருக்குமான வாக்குரிமை (universal suffrage) அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தியாவில் 1950 வரை அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்படவில்லை. சுவிற்சர்லாந்து 1971இல் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கும்போது, உலகின் முதலாவது பெண் பிரதமராக சிறிமாவோ பதவியேற்று ஆறாண்டுகள் கடந்துவிட்டிருந்தன.

“கீழ் சாதியினருக்கும் படிப்பறிவில்லாதவர்களுக்கும் பெண்களுக்கும் வாக்குரிமை அளிப்பது முட்டாள்தனமானது” என்று சேர் பொன். இராமநாதன் எதிர்ப்பு தெரிவிக்க, இலங்கையிலேயே எழுத்தறிவில் முன்னணியில் திகழ்ந்த யாழ்ப்பாண மாவட்டமோ, வேறொரு காரணத்திற்காக தனக்கு வழங்கப்பட்ட முதலாவது ஜனநாயக உரிமையை பகிஷ்கரிக்கத் தயாரானது.

இந்திய தேசிய காங்கிரஸின் வழிநின்ற யாழ்ப்பாண இளைஞர் பேரவை, பிரித்தானியா இலங்கைக்கு சுயராஜ்ஜியம் வழங்காததால் தேர்தலை புறக்கணிக்குமாறு அழைப்பு விட, யாழ்ப்பாண மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நான்கு ஆசனங்களும் வெற்றிடமாயின. யாழ்ப்பாணத்தில் போட்டியிட முடியாத ஜீ.ஜீ.பொன்னம் பலம், மன்னார் மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோற்றுப்போனார்.

தேர்தல் புறக்கணிப்பால் தேசிய சட்ட சபையில் தங்கள் உரிமைகளும் நலன்களும் புறக்கணிக்கப்படுவதையும் பாதிக்கப்படுவதையும் காலங்கடந்து உணர்ந்த யாழ்ப்பாண மக்கள், அடுத்து வந்த காலங்களில் யாழ்ப்பாண இளைஞர் பேரவையை புறந்தள்ளினார்கள் என்பது வரலாறு.

இந்த தேர்தல் புறக்கணிப்பு பற்றி Jane Russell எனும் வரலாற்றாசிரியர் எழுதிய விரிவான கட்டுரைக்கு அவர் இட்ட தலைப்பு “The dance of the Turkey-cock: the Jaffna Boycott 1931”, அதாவது “வான் கோழியின் நடனம்: யாழ்ப்பாண பகிஷ்கரிப்பு 1931”. இந்திய தேசிய காங்கிரஸ் என்ற மயிலைப் பார்த்து யாழ்ப்பர்ண இளைஞர் பேரவை என்ற வான் கோழி ஆடிய நடனமே 1931ஆம் ஆண்டு தேர்தல் பகிஷ்கரிப்பு என்று Jane Russell விவரிக்கிறார்.

1980களின் மத்தியில் இயக்கங்களின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாண தீபகற்பம் இருந்த காலங்களில், இயக்கங்களின் மாணவர் அமைப்புக்கள் நடத்திய பகிஷ்கரிப்புக்களையும் ஹர்த்தால்களையும் ஊர்வலங்களையும் அந்தக் காலப்பகுதியில் வாழ்ந்த யாரும் மறந்திருக்க மாட்டார்கள். பெரும்பாலான பகிஷ்கரிப்புக்களை முன்னின்று நடத்தியது புளொட் அமைப்பின் மாணவர் அணியான TESO, ஈரோஸ் அமைப்பின் GUYS மற்றும் ஈ.பி. ஆர்.எல்.எப் இன் GUES.

“இன்று ஹர்த்தால்” என்று காலை எழுந்ததும் ஈழநாடு பத்திரிகையில் கொட்டை எழுத்தில் தலையங்கம் மிரட்டும். இலங்கை அரசாங்கம் நிகழ்த்திய ஏதோ ஓர் அநியாயத்தை கண்டித்து, நாங்கள் பள்ளிக்கூடங்களை பகிஷ்கரித்து, கடைகளை அடைத்து, அலுவலகங்களை மூடி, கண்டி வீதியால் கச்சேரியை நோக்கி, “மாணவர் சக்தி மாபெரும் சக்தி” என்று தொண்டை கிழிய கோஷம் எழுப்பிக்கொண்டு, கொளுத்தும் வெயிலில் ஊர்வலம் போக, கொழும்பில் அத்துலத் முதலியும் ஜெயவர்த்தனவும் சுடச்சுட தேத்தண்ணியோடு கொக்கீஸ் சாப்பிட்டுக் கொண்டிருப்பார்கள்.

அதே காலப்பகுதியில், மலையகத்திலும் வேலைநிறுத்த போராட்டங்கள் இடம்பெற்றன. அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியை வகித்துக்கொண்டே, பெருந்தோட்டங்களில் வேலைநிறுத்த போராட்டங்களுக்கு சௌமியமூர்த்தி தொண்டமான் அறைகூவல் விடுப்பார். இலங்கைப் பிரஜாவுரிமை கோரியும் சம்பள உயர்வு கேட்டும் மலையகத் தமிழர்கள் நடாத்திய போராட்டங்கள் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றுத்தந்தது. இலங்கையின் பொருளாதாரத்தில் பெருந்தோட்டத்துறையின் வகிபாகமும் அந்தத் துறையில் மலையகத் தமிழர்களின் உழைப்பின் முக்கியத்துவமும் அவர்களடைந்த வெற்றிகளுக்கு பிரதான காரணிகளாகின.

கடந்த ஏப்ரல் 24ஆம் திகதி, இலங்கையின் பெற்றோலியத்துறை தொழிலாளர்களை பிரதிநிதித்துவப் படுத்தும் தொழிற்சங்கம் விடுத்த வேலைநிறுத்த கோரிக்கைக்கும், அரசாங்கம் 24 மணித்தியாலங்களுக்குள் அடிபணிந்தது. பெற்றோல் நிரப்பு நிலையங்களுக்கு வெளியே ஏற்பட்ட வாகன நெரிசலும் பொருளாதாரத்தையே முடக்கவல்ல அறிகுறிகளும் இலங்கை அரசாங்கத்தை, தொழிற்சங்கத்தின் கோரிக்கைகளை செவிமடுக்கச் செய்தது.

பெற்றோலிய தொழிற்சங்கத்தின் பணிப் பகிஷ்கரிப்பு மட்டுமன்றி தென்னிலங்கையில் இடம்பெறும் பெரும்பாலான போராட்டங்கள் வெற்றி பெறுவதற்கான காரணம், அவை பெரும்பான்மையின சிங்களவர்களால் மேற்கொள்ளப்படுவது மட்டுமன்றி, அந்த போராடங்கள் இலங்கையின் பொருளாதாரத்தில் செலுத்தவல்ல எதிர்மறையான தாக்கமும்தான்.

பெற்றோலியத் தொழிலாளர்களின் பகிஷ்கரிப்பு நடந்து மூன்று நாட்கள் கழித்து, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பிரச்சினைக்கு ஆதரவாக தமிழர் பிரதேசங்களில் நடந்த பகிஷ்கரிப்பிற்கு இலங்கை அரசின் பதில், “நல்லாட்சி அரசில் ஜனநாயக வழியில் போராட ஏற்பட்டுள்ள பொது வெளியை இந்த பகிஷ்கரிப்பு பிரதிபலிக்கிறது” என்பதாக அமைந்தது. எங்களது பகிஷ்கரிப்புகளும் ஹர்த்தால்களும் கடையடைப்புக்களும் வெற்றி பெற வேண்டுமென்றால், நாங்கள் முதலில் பொருளாதார ரீதியில் பலம் பெற வேண்டும்.

இலங்கைத் தீவின் மூன்றிலொரு பங்கு நிலப்பரப்பையும் மூன்றிலிரண்டு பங்கு கடற்பரப்பையும் தன்னகத்தே கொண்ட, தமிழர் தாயகப் பகுதியில் இடம்பெறும் பகிஷ்கரிப்புகள், வெற்றி பெறாமல் போவதற்கான மிகப் பிரதான காரணம், வட-கிழக்கு மாகாணங்கள் இலங்கை யின் பொருளாதாரத்தில் செலுத்தும் தாக்கம் எதுவுமில்லை என்ற கசப்பான உண்மையே. இலங்கையின் 2015ம் ஆண்டிற்கான GDPயில் கிழக்கு மாகாணம் 6.0% ஐயும் வட மாகாணம் 3.5% ஐயும் பங்களிப்பு செய்திருந்ததாக இலங்கை மத்திய வங்கியின் அறிக்கை கூறுகிறது.

இந்த உண்மைகளை அறிந்தும் தங்கள் சொந்த அரசியல் நலன்களுக்காகவும் அரசியல் சாகசத்திற்காகவும் (political stunt) ஹர்த்தால்களுக்கு அழைப்பு விடுக்கும் தமிழ் தலைமைகளைப் பற்றி என்னத்தைச் சொல்ல?

யுத்தத்தில் அழிவுண்டு சிதைவுண்டு போயிருக்கும் தமிழர்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப எந்தவித ஆக்கபூர்வமான செயற்பாடுகளையும் மேற்கொள்ளாத அதேவேளை, பகிஷ்கரிப்புக்களை நடத்தி, வட-கிழக்கில் முதலீடுகளை மேற்கொள்ள விரும்பும் முதலீட்டாளர்களையும் துரத்தி விடும் கைங்கரியத்தை, இந்த தமிழ் தலைமைகள் செவ்வனே செய்கின்றன.

பொருளாதார அபிவிருத்திக்கும் அதனுடனான மக்களின் சுபீட்சமான வாழ்விற்கும் அடிப்படையாக அமைவது தொழில்சார் முதலீடுகளே. இந்த முதலீடு களை தங்கள் தங்கள் நாடுகளுக்கு கவர உலகிலுள்ள 190 சொச்ச நாடுகளோடு இலங்கையும் போட்டி போடுகிறது. அவ்வாறு இலங்கைக்குள் வரும் முதலீடுகளை தங்கள் தங்கள் மாகாணங்களுக்குள் உள்வாங்க ஒன்பது மாகாணங்களும் முட்டி மோத வேண்டும்.

எங்களது பகிஷ்கரிப்புகளும் ஹர்த்தால்களும் கடையடைப்புக்களும் வெற்றி பெற வேண்டுமென்றால், நாங்கள் முதலில் பொருளாதார ரீதியில் பலம் பெற வேண்டும். புலம்பெயர்ந்த எங்களுறவுகளின் முதலீடுகளுக்கும் வெளிநாட்டு உள்நாட்டு நிறுவனங்களின் முதலீடுகளுக்கும் உகந்த பிரதேசமாக வட-கிழக்கு மாகாணங்களை மாற்ற வேண்டும்.

முதலீட்டாளர்கள் ரஜினிகாந்தை வரவழைத்து வவுனியாவில் திறப்பு விழா நடத்தவும் டெண்டுல்கரை கூப்பிட்டு கிளிநொச்சியில் கிரிக்கெட் போட்டி நடத்தவும் எதிர்ப்பு தெரிவிப்பதை நிறுத்த வேண்டும். அதைவிட முக்கிய மாக எங்கள் தலையில் நாங்களே மண்ணை வாரியிறைக்கும் பகிஷ்கரிப்புக்களுக்கு ஓய்வு கொடுக்க வேண்டும்.

ஒரு விதத்தில் இன்று நாங்கள் அரங் கேற்றும் பகிஷ்கரிப்புகளும், 1931ஆம் ஆண்டு தேர்தல் பகிஷ்கரிப்பைப் போல், வான் கோழி நடனங்களே. எந்தவித பொருளாதார வலுவுமற்று, ஹர்த் தால் நடத்துவதால் எதிரிக்கு எந்த வித பாதிப்பும் நேராது என்றறிந்தும், கடையடைப்பு நடத்தி வியாபாரத்தை முடக்கி, அன்றாட வேதனத்தில் வாழும் எம்மவர்களை நாங்களே நிர்க்கதியாக்கும் செயற்பாடுகளை நாங்கள் நிறுத்த வேண்டும்.

நீதியும் நியாயமுமான எங்கள் கோரிக்கைகளை உலகுக்கு எடுத்துரைக்க, எழுக தமிழ் போன்ற பேரணிகளுக்கும் உண்ணாவிரதங்களுக்கும் பகிஷ்கரிப்புகளுக்கும் அழைப்பு விடுக்கும் அரசியல் தலைவர்களை, எங்களுக்காக ஒருநாளேனும் ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாகவும் அலரி மாளிகைக்கு பின்பாகவும் நாடாளுமன்றத்திற்கு வெளியேயும் உண்ணாவிரதம் இருக்க அழுத்தம் கொடுக்க வேண்டும்.

ஒரு விதத்தில் இன்று நாங்கள் அரங் கேற்றும் பகிஷ்கரிப்புகளும், 1931ஆம் ஆண்டு தேர்தல் பகிஷ்கரிப்பைப் போல், வான் கோழி நடனங்களே. ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்டவர்கள், அந்த மக்களின் உரிமைக்காக தங்களை வருத்தி போராட வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறா?

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக “ஊர் வாழ வேண்டுமென்ற, உன்னத நோக்கம் கொண்டு, ஏராளமான துயர் தாங்கி நின்று” களமாடிய ஆயிரமாயிரம் போராளிகள் உலாவிய எங்கள் தேசத்தில், அரசியல் உரிமைகளுமின்றி, ஆக்கிரமிக்கப்பட்ட தங்கள் காணிகளை மீட்கவும் காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளை தேடியும் போராடும் எம்மக்களுக்கு தலைமை தாங்கவென முன்வரும் எவரும் அந்த மக்களுக்காக தியாகங்கள் செய்ய தயாராக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறா?

“கான மயிலாட கண்டிருந்த -
வான்கோழி

தானும் அதுவாகப் பாவித்து -
தானுந்தன்

பொல்லாச் சிறகை விரித்தாடினால்
போலுமே”

- என்றுள்ள எங்கள் பகிஷ் கரிப்புகளுக்கு விடை கொடுப்போம். எங்கள் போராட்ட வடிவங்களை மாற்றி எங்கள் தலைவர்களை முன்னிறுத்தி போராடங்களில் ஈடுபடுவோம். அதேவேளை எங்கள் பொருளாதாரத்தை வளப்படுத்தி வான்கோழிகளாக எங்களைப் பார்ப்பவர் கண்களில் நாங்களும் கான மயில்களாக அவதாரம் எடுப்போம்.

போலிப் பகிஷ்கரிப்புகளை பகிஷ்கரிப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரப்பலன்

**மேடம்**
பொறுப்பற்ற நிலை. பகற்கனவு. பண விரயம்

**ரிஷபம்**
கனவு. தெய்வ சிந்தனை. சோதனை. வீண்விரயம்

**மிதுனம்**
காரியனுகூலம். பொருள் வரவு. கல்வி மேன்மை

**கடகம்**
தான தர்மம். பொருள் செலவு. போதனை.

**சிம்மம்**
தெய்வ பலம் ஆன்மிக சிந்தனை. தரும நோக்கு

**கன்னி**
பிணி தீரும். பார்வை விருத்தி. பண்பாளர் வரவு

**துலாம்**
தொழில் விருத்தி. சோதனை. தெய்வ வழிபாடு.

**விருச்சிகம்**
மக்கள் தொண்டு. மனைமாட்சி. தொழில் விருத்தி

**தனுசு**
வீண் விரயம். தொழிற்கேடு. மக்கள் மேம்பாடு

**மகரம்**
தரும சிந்தனை. தாகமிகுதி. துணை நலம். பலம்

**கும்பம்**
நினைத்த காரிய சித்தி. நாவன்மை. நற்பேறு

**மீனம்**
சுகக்குறைவு. தனித்த நிலை. நிலைமாற்றம்.





யாழ்.பல்கலைக்கழக மிருதங்க விரிவுரையாளர் நல்லை க.கண்ணதாஸ் எழுதிய 'முப்பத்தைந்து தாளங்களில் தனியாவர்த்தனம்' என்ற நூலின் வெளியீட்டு விழா கடந்த (14.05.2017) காலை 9.30 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபத்தில் சிறப்புற இடம்பெற்றது.







கொற்றை.பி.கிருஸ்ணானந்தன் அவர்களின் 'சாம்பல் பூத்த வானமும் சில நட்சத்திரங்களும்', கொற்றாவத்தையில் உலவும் குட்டிக்கதைகள் ஆகிய இரண்டு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு கொற்றாவத்தை செட்டித்தறை சித்திவிநாயகர் திருமண மண்டபத்தில் 14.05.2017 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.







கடந்த 14.05.2017 ஞாயிற்றுக்கிழமை சரசாலையில் [illegible] போது....



33ஆவது பெண்கள் சந்திப்பு மே கடந்த 6,7ஆம் திகதிகளில் இல் சூரிச்சில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூங்காவில் கற்ற பாடம்



# ஹாய் குட்டீஸ்...!

உங்களின் படைப்புகள் அனைத்தும் புதுவிதியில் பிரசுரமாக வேண்டுமா? உடன் எழுதி அனுப்புங்கள்.

puthuvithi@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கும் உங்கள் படைப்புகளை அனுப்பி வைக்க முடியும்.

'புதுவிதி' இல.107 இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

பூங்காவுக்குள் நுழையும்போதே ஜனனிக்கு உற்சாகம் தொற்றிக்கொண்டது. அப்பாவின் கையிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு சறுக்கி விளையாட ஓடினாள்.

"பார்த்துப் போ... கீழே விழுந்துடப் போற" பதற்றப்பட்டார் அம்மா.

"பயமுறுத்தாதே. விளையாடிட்டு வரட்டும். வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடக்கறா. இன்னைக்கு ஒரு நாளாவது சுதந்திரமா ஓடி விளையாடட்டும்" அப்பா உற்சாகப்படுத்தினார்.

சறுக்கி விளையாடுதல், ஊஞ்சல் ஆட்டம், ராட்டினம், சீசோ ஆடல் என அங்குமிங்கும் ஓடி விளையாடினாள் ஜனனி. அவளை வேடிக்கை பார்த்துக்கொண்டே அம்மாவும் அப்பாவும் "சிமெந்து பெஞ்"சில் உட்கார்ந்து கதைத்துக் கொண்டிருந்தனர்.

விளையாடி வியர்வையில் நனைந்தவாறு ஓடி வந்த அம்மாவிடமிருந்து தண்ணீர் வாங்கிக் குடித்தாள்.

பின்னர், "வாங்க அப்பா! பெரிய ஊஞ்சலில எல்லோரும் உட்கார்ந்து விளையாடலாம்" எனக் கூப்பிட்டாள். ஜனனியின் ஆசையைத் தீர்ப்பதற்காக மூவரும் சேர்ந்து உட்கார்ந்து பெரிய ஊஞ்சலில் ஆடினர். அந்த ஆசையும் தீர்ந்த பிறகு ஜனனிக்கு ஏதாவது சாப்பிட வேண்டும் போல இருந்தது.

மீண்டும் சிமெந்து பெஞ்சுக்கு மூவரும் வந்தனர். தன் கைப்பையில் வைத்திருந்த சொப்பிங் பையை எடுத்தார் அம்மா. அதனுள் இருந்த சிறிய சொப்பிங் பைகளை ஆளுக்கொன்றாக எடுத்தனர். பையை கிழித்துப் போட்டுவிட்டு அதிலிருந்த லட்டைச் சாப்பிட ஆரம்பித்த ஜனனி, எதிர் வரிசையில் கண் பார்வையற்ற கணவனும் மனைவியும் அமர்ந்திருப்பதைப் பார்த்தாள். அவர்கள் அருகில் ஒரு சிறுவனும் இருந்தான். அவர்களும் சொப்பிங் பைகளிலிருந்த மிக்ஸரை சாப்பிட்டுக்கொண்டிருந்தனர்.

"அப்பா! அந்தப் பெடியன் அவையட மகனா?" சந்தேகத்துடன் கேட்டாள் ஜனனி.

"முகத்தைப் பார்த்தால் அப்படித்தான் தெரியுது" என்றார் அப்பா.

"அப்ப அவனுக்கு மட்டும் எப்படி கண் தெரியுது?" ஆச்சரியமாகக் கேட்டாள் ஜனனி.

"கண் பார்வை இல்லாதவங்களுக்கு கண் பார்வை இழந்த பிள்ளைதான் பிறக்கும்னு உனக்கு யார் சொன்னது? எந்தக் குறையுமில்லாத ஆரோக்கியமான குழந்தையும் பிறக்கும்"

"ஓ! அப்படியாப்பா. பாவம்அவங்க!" எனக் கூறிக் கொண்டே வெற்றுப் பையையும் பேப்பரையும் புல்வெளியில் தூக்கி எறிந்தாள் ஜனனி. அது காற்றில் பறந்து பாதையில் விழுந்தது.

"ஜனனி! குப்பையை இப்படியா பாதையில் வீசுவது?" அதட்டினார் அப்பா.

"நான் மட்டுமா குப்பையைப் பாதையில் போட்டிருக்கிறன். அங்க எத்தனை பேர் போட்டிருக்கிறார்கள் என்ற " என்று சுட்டி காண்பித்தாள் ஜனனி.

"அவர்கள் தப்பு செய்தால் நாமும் செய்யலாமா? எறிந்த குப்பையை எடுத்து குப்பை தொட்டியில் போட்டுட்டு வா!"

"போங்கப்பா வீட்டிலதான் இதைச் செய், அதைச் செய்னு வேலை சொல்லிக்கிட்டே இருப்பீங்க. இங்கே வந்தும் அதையே சொல்லாதீங்கப்பா" சிணுங்கினாள் ஜனனி.



அப்பா அடுத்து ஏதோ சொல்ல நினைக்கையில் தற்செயலாகக் கண் பார்வையற்ற தம்பதியின் பக்கம் அவரது பார்வை சென்றது. அவர்கள் அதற்குள் சாப்பிட்டு முடித்திருந்தார்கள். சொப்பிங் பையையும் பேப்பரையும் சிறுவனின் அம்மா எடுத்துக் கொள்ள, சிறுவனும் காகிதத்தையும் தண்ணீர் போத்தலையும் கையில் எடுத்தான். தன் அம்மாவின் கையைப் பிடித்துக் குப்பைத் தொட்டியை நோக்கி அழைத்துச் சென்றான்.

குப்பைத் தொட்டியைத் தன் கையால் தடவி அதற்குள் அம்மா குப்பையைப் போடவே. சிறுவனும் குப்பையைப் போட்டான். பின்னர் இருவரும் கைகளைக் கழுவிவிட்டு சிமெந்து பெஞ்சுக்குத் திரும்பினர். மீண்டும் அதேபோல் தந்தையைக் குப்பைத் தொட்டிக்கு அழைத்துச் சென்று குப்பையை அதில் போட்டுக் கை கழுவ வைத்து அழைத்து வந்தான் அந்தச் சிறுவன்.

இதையெல்லாம் ஆச்சரியமாகக் கவனித்துக் கொண்டிருந்த அப்பா, ஜனனியைத் திரும்பிப் பார்த்தார். அவளும் அதை பார்த்துக் கொண்டிருந்தாள். "பார்த்தாயா ஜனனி! அவங்க பார்வை இழந்தவங்களா இருந்தாலும் இந்தப் பூங்கா, குப்பைகளால் அசுத்தமாகி விடக்கூடாதுன்னு நினைக்கிறாங்க. தன்னால பார்க்க முடியாத பூங்கா எப்படி இருந்தா நமக்கென்னன்னு அலட்சியமா இருக்காம, சுத்தமா வைச்சுக்க முயற்சி பண்றாங்க. அவங்களே அப்படி நினைக்கும்போது, கண் பார்வையுள்ள நாம அதைவிட ஒரு படி மேலே முயற்சி செய்யணும் இல்லையா?"

எப்போதும் மறுப்பு கூறும் ஜனனி, இப்போது மிக அமைதியாக உட்கார்ந்திருந்தாள்.

"இன்னொண்ணு கவனிச்சியா? அவங்கவங்க வேலைய அவங்கவங்களே செஞ்சாங்க. தங்களுக்குக் கண் தெரியாதென்று தங்கள் மகனிடம் குப்பையைப் போடச் சொல்லிக் குடுத்து விடல!"

ஜனனியின் மனதுக்கு அந்தக் காட்சி ஏதோ ஒன்றை உணர்த்தியது. அவளுக்குள் ஏதோ ஒரு மாற்றம் நிகழ்ந்துகொண்டிருந்தது. வேகமாக எழுந்த ஜனனி, தான் வீசி எறிந்த குப்பையைத் தேடி எடுத்தாள். அவற்றோடு மற்றவர்களால் வீசி எறியப்பட்டுப் பாதையில் கிடந்த குப்பைகளையும் எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட்டாள்.

"வெரி குட்!" என்று கை தட்டினார் அப்பா.

இப்போதெல்லாம் வீட்டிலும் குப்பை வாளியில்தான் குப்பையைப் போடுகிறாள் ஜனனி! அதுமட்டுமல்ல, தன் வேலைகளைத் தானே செய்கிறாள்!

## அன்னையர் தினம் வந்தது எப்படி?

அமெரிக்காவை சேர்ந்த மேரி ஜார்விஸ் என்பவர்தான் அன்னையர் தினத்தை அறிமுகப்படுத்தினார். தனது தாயார் ஆன் மரியா ரீவிஸ் ஜார்வி ஸின் நினைவாக மதர்ஸ் டே வேர்க் என்ற அமைப்பை நிறுவி கிராமங்களில் சுத்தம், சுகாதாரத்தை மேம்படுத்த பாடுபட்டார். அமெரிக்க உள்நாட்டுப் போரில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளித்து வந்தார். 1905 இல் அவர் இறந்து விட்டார்.

தனது தாய் மீது கொண்ட அன்பு காரணமாக மே இரண்டாம் நாளை அன்னையர் தினமாக அறிவித்து, விடுமுறை தினமாக்க வேண்டும் எனவும் 1907 ஆம் ஆண்டு தொடக்கம் அன்னையர் தினம் கொண்டாடுவதற்கான முயற்சிகளையும் எடுத்தார்.

1914 ஆம் ஆண்டு அமெரிக்க அரசு அன்னையர் தினம் கொண்டாட அங்கீகரித்தது. இதைத் தொடர்ந்தே மே இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை அன்னையர் தினம் கொண்டாடப்படுகின்றது.

## தகவல்கள் அறிவோம்

சமாதானம், யுத்தம் நிலவும் நேரங்களில் இரு விதமாக தேசியக் கொடியை பறக்கவிடும் ஒரே ஒரு நாடு பிலிப்பைன்ஸ். இந்த நாட்டின் தேசியக் கொடி நீலம், சிவப்பு நிறக் கீலங்களை கொண்டுள்ளது. சமாதானம் நிலவும் நேரத்தில் நீலக் கீலம் மேலாகவும், சிவப்புக் கீலம் கீழாகவும் இருக்குமாறு கொடி பறக்கவிடப்பட்டிருக்கும். யுத்த சூழல் ஏற்பட்டால் இது தலைகீழாகிவிடுமாம்.





பாலைவனங்களில் வளரும் போபாப் மரங்கள் சுமார் ஆயிரம் லீற்றருக்கும் அதிகமான நீரை சேமித்து வைத்திருக்கும். இதனால் அதனை போத்தல் மரம் என்றும் அழைக்கின்றனர்.

- பெண்களை எப்போதும் வாயாடிகள் என்பார்கள். இதைத்தான் ஒரு ஆய்வும் சொல்கிறது. பெண் ஒருவர் ஒரு நாளில் 7 ஆயிரம் சொற்களைப் பேசுகிறாராம். ஆனால் ஆணோ 2 ஆயிரம் அல்லது 2 ஆயிரத்து 500 வரையிலான. சொற்களைத்தான் பேசுகிறாராம்.
- இரும்புகள் கூட முதலையின் வயிற்றில் சமிபாடு அடைந்து விடும். இதற்கு அதன் வயிற்றில் சுரக்கும் அதிகளவிலான அமிலங்கள்தான் காரணமாம்.
- உலகில் மிகக்குறைந்த வெப்பநிலை யைக் கொண்ட கடலாக ரஷ்யாவின் வெண் கடல் உள்ளது. இங்கு 2 பாகை செல்சியஸ் வெப்பமே நிலவுகிறது. பெர்சியன் வளைகுடா கடலில் வசந்த காலத்தில் 35 பாகை செல்சியஸ் வெப்பம் நிலவுகிறது. இதுதான் உலகின் அதிக வெப்பம் கொண்ட கடலாகும்.

## 6 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உன்னை நீயே அறிவாய்

வெற்றிகரமான தொழிலுக்கு சக்திவாய்ந்த ஆயுதம் நிர்வாகம்தான். தொழில் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு துறையையும் அதன் முகாமையாளர்கள் சரியாக நிர்வகித்து விட்டால், நிச்சயம் அந்தத் தொழில் வெற்றியடையும். ஒரு தொழிலில் முக்கியமாகச் செய்யவேண்டிய ஏழு மேலாண்மை விடயங்களை விரிவாகப் பார்த்துவருகிறோம். இந்த வாரம் தொழிலின் மிக முக்கியமான அளவுகோல்களை எப்படித் தீர்மானிப்பது, எப்படி மேலாண்மை செய்வது என்பதைப் பார்க்கலாம்.

தொழிலில் நாம் செய்யும் முதலீடு தொடக்கம் நாம் வைக்கும் இலக்கு, கிடைக்கும் இலாபம் வரை அனைத்துமே அளவுகோல்கள்தான். அளவுகோல்கள் என்பது எண்களாலும் தகவல்களாலும் நிறைந்தது. தொழிலில் அளவுகோல்களை நிர்ணயிப்பது, அனாலிஸ் செய்வது போன்றவை எந்த அளவுக்கு முக்கியம் என்பது எல்லோருக்கும் இப்போது புரிய ஆரம்பித்திருக்கிறது. அதன் விளைவாக தரவு ஆய்வாளர்களுக்கான மவுசு அதிகரித்து வருகிறது.

ஒரு தொழிலுக்கு முதலீடு எவ்வளவு தேவை, எவ்வளவு பணியாளர்கள் தேவை, கொள்முதல் எவ்வளவு செய்யலாம், வாடிக்கையாளர்கள் யார், எமது சந்தை அளவு என்ன, உற்பத்தி எவ்வளவு செய்ய வேண்டும், எமது இலக்கு என்ன, விற்பனை எவ்வளவு ஆகிறது, திரும்பி வருவது எவ்வளவு என தொழிலின் ஒவ்வொரு விடயங்களையும் தரவுகளாக, அளவுகோல்களாக தயார் செய்தால்தான் எமது தொழிலை எம்மால் புரிந்துகொள்ள முடியும்.

அந்தத் தரவுகளை ஆராய்ந்து, அவற்றிலிருந்து கிடைக்கும் முடிவுகளை வைத்து தொழில் செயற்பாடுகளைத் திட்டமிட வேண்டும். அவற்றிலிருந்து கிடைக்கும் முடிவுகள் மூலம், நாம் இதுவரை செய்துவந்த தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டும். அதன் மூலம் மட்டுமே காலத்தைத் தாண்டி நிலைத்து நிற்கும் வகையிலான தொழிலை வளர்த்தெடுக்க முடியும். இதன் மூலம் நிறுவனத்தின் செயற்பாடுகளை மேம்படுத்த முடியும். எந்தவொரு திட்டமும் செயற்படாமல் முடங்கிப் போவதைத் தவிர்க்க முடியும்.

### எப்படி நிர்வாகம் செய்வது?

தொழிலின் அனைத்து நிர்வாக செயற்பாடுகளுக்கும் அடிப்படை யாகப் பயன்படுவது அளவுகோல்கள். எனவே, தொழிலின் ஒவ்வொரு திட்டத்துக்கும் அவற்றின் செயற்பாடுகளைப் பற்றி ஒவ்வொரு நிலையிலும் தரவுகள் சேகரிக்கப்பட வேண்டும். அவை அறிக்கைகளாகத் தயார் செய்யப்பட வேண்டும். தொழில் நிர்வாகத்தில் இது மிக முக்கியமானது. அப்போதுதான் தொழில் நிர்வாகத்தை எப்படிச் செய்யலாம் என்பதை முகாமையாளர்கள் முடிவு செய்ய முடியும். நிர்வாகத்தின் தரப்பிலும், திட்டங்களைச் செயற்படுத்தப்படும் இடத்திலும் அவற்றின் செயற்பாடுகள் அனைத்தும் அந்தந்த நிலைகளில் பதிவு செய்யப்பட வேண்டும்.

தொழிலின் எந்தவொரு விடயத்தையும் தனித்தனியாக கவனிக்க வேண்டும். ஒவ்வொரு வேலையையும் முன்னுரிமை அடிப்படையில் வரிசைப்படுத்த வேண்டும். சரியான நேரத்தில் சரியான வேலைகள் நடக்கிறதா என்பதை அதன் மூலம்தான் உறுதி செய்ய முடியும். அதேபோல்தான் தரமும். வேலையின் தரத்தை உறுதிசெய்ய வேண்டும். இவை அனைத்தையும் சரியான பதிவு செய்தல்களின் மூலம் மட்டுமே சாத்தியப்படுத்தலாம். எனவே முகாமையாளர்கள், தங்களின் கீழ் உள்ள பொறுப்புக்களைத் தொடர்ந்து கவனிக்க வேண்டும். தங்களுக்குக் கீழ் உள்ளவற்றை, தொடர்ந்து பதிவுசெய்ய




வேண்டும். அது தொழிலின் ஒவ்வொரு செயற்பாடுகளையும் காலக்கெடு தவறாமல் முடிக்க வசதியாக இருக்கும்.

### ஏன் அளவுகோல் நிர்வாகம் அவசியம்?

தொழிலின் ஓர் இடத்தில் எடுக்கும் ஒரு தவறான முடிவு, சில நேரங்களில் பிற இடங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தும். அளவுகோல் நிர்வாகம் மூலம் ஒருங்கிணைக்கப்படும் தரவுகளிலிருந்து அதனை எளிதில் எம்மால் அடையாளம் காண முடியும். பிரச்சினை எங்கே நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வதில் அலட்சியம் காட்டினால், அது எமது வளர்ச்சியைப் பாதிக்கும்.

முடிவுகள் எடுக்கும்போது தரவுகள்தான் மிக முக்கியமாக அலசிப் பார்க்கப்படும். முக்கிய பிரச்சினைகளை எளிதாக அவற்றின் மூலம் அறிந்துகொள்ளலாம். இது, சரியான முடிவுகளைத் திட்டமிட்டு எடுக்க உதவியாக இருக்கும். இதன் மூலம் சந்தையின் அளவைத் தெரிந்துகொண்டு எவ்வளவு முதலீடு செய்ய வேண்டும், எவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டும் என்று முடிவெடுக்க முடியும். மேலும், இதற்கான முடிவுகளை எடுக்க சந்தையிலுள்ள மதிப்பு மற்றும் போட்டியாளர்களின் சந்தையையும் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்கும் இந்த நிர்வாக முகாமை உதவியாக இருக்கும்.

எமது தொழில் பற்றி பிறருக்கு எடுத்துச் சொல்ல இது உதவும். வாடிக்கையாளர்களுக்கும், பங்குதாரர்களுக்கும் தொழில் செயற்பாடுகளைப் பற்றி விளக்க, இந்தத் தரவுகளும் அறிக்கைகளும்தான் மிகவும் உதவியாக இருக்கும். இவை இல்லாமல் பேசினால் உங்களை தொழிலதிபராக மதிக்கமாட்டார்கள். முக்கியமாக, இந்த மேலாண்மையில், எமது தொழிலில் உள்ள சவால்களைக் குறைக்க முடியும். ரிஸ்க் மனேஜ்மென்ட் என்பது தொழிலில் மிக முக்கியமான ஒரு அம்சம். அந்த ரிஸ்க் மனேஜ்மென்ட் செயற்பாட்டுக்கு, அளவுகோல்கள் மேலாண்மை நிச்சயம் தேவை. தொழிலில் உள்ள சவால்களை அடையாளம் காணவும், அவற்றை ஆய்வுசெய்து தீர்வுகளைக் கண்டறியவும் இது உதவும். சவால்களை அடையாளம் காணத் தவறினால், பின்னர் அவற்றைச் சரி செய்வது கடினமாகிவிடும் என்பதோடு, அதற்கான செலவுகளும் அதிகமாகிவிடும். இதைத் தவிர்க்க தொழிலில் உயர்தரமான அளவுகோல்கள் மேலாண்மை செய்யப்பட வேண்டும்.

### எக்காலத்துக்கும் உதவும் அளவுகோல்கள்!

அளவுகோல்கள் முக்காலத்தையும் உள்ளடக்கியவை. கடந்த காலத்தில் நம்முடைய செயற்பாடுகள் எப்படி இருந்தது? இப்போது எப்படி இருக்கிறது; எதிர்காலத்தில் எப்படி இருக்க வேண்டும்..? என அனைத்தையும் உள்ளடக்கியதுதான் இந்த முகாமையில் முக்கிய அம்சம். ஏனெனில், தொழிலோடு கால மாற்றம் என்பது மிகப் பெரிய பங்கு வகிக்கிறது. காலம் மாறும்போது ஒவ்வொரு தொழிலும் மாறியாக வேண்டும். இல்லையென்றால் காணாமல் போக வேண்டியதுதான். அதேநேரம் நாம் செய்ய வேண்டிய மாற்றம் என்பது நமக்கு வெற்றியைத் தரக்கூடியதாக இருக்கவேண்டும்.

சரியான மாற்றங்களைச் செய்துகொள்ள இந்த அளவுகோல்கள் உதவியாக இருக்கும். எதிர்காலத்துக்கான தெளிவான இலக்குகளையும், அளவுகோல்களையும் ஆராய்ந்த பிறகே முடிவு செய்யமுடியும். எதிர்காலத் திட்டங்களைத் திட்டமிடுவது, திட்டங்களுக்கான கால வரையறைகளை வகுப்பது, அதற்கான நிதித் திட்டமிடலை உருவாக்குவது, செயற்பாடுகளைக் குறிப்பிட்ட கால இடைவெளியில் பதிவு செய்வது ஆகியவற்றையும் வெற்றிகரமாகச் செய்ய முடியும்.

### தொழில்நுட்ப உதவியை நாடலாம்!

இந்த மேலாண்மைக்கு அதிக ஆள்களை எடுக்க வேண்டியதில்லை. மாறாக, மென்பொருள் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி நிர்வகிக்கலாம். இதன் மூலம், முதலீடு மற்றும் நேரம் விரயமாவதைக் குறைக்கலாம். ஆனால், அதில் பிழைகள் இல்லாமல், அவற்றின் உண்மைத் தன்மையை முகாமையாளர்கள் உறுதிசெய்துகொள்ள வேண்டும். புதிய தரவுகள், விவரங்கள் சேர்க்கப்படும் போது, அவை சரியாக அப்டேட் ஆகிறதா என்பதையும் பார்க்க வேண்டும்.

தொழிலில் நாம் எடுக்கும் முடிவுகளை வெற்றிகரமாக்கிக் காட்ட வேண்டிய கட்டாயம் எமக்கு இருக்கிறது. அப்போதுதான் உண்மையான வளர்ச்சியை நம்மால் அடைய முடியும். நம்மை ஒரு வெற்றியாளராக இந்த உலகுக்கு உணர்த்த வேண்டும் என்பதை உணர்ந்தவர்கள், ஒருபோதும் அவர்களுக்கு கிடைத்த வாய்ப்புக்களைத் தவறவிட மாட்டார்கள். இந்த அளவுகோல்கள் மேலாண்மை மூலம், வளர்ச்சிக்கான வாய்ப்புகளைக் கண்டறிந்து, தெளிவான இலக்குகளை வகுத்து, அவற்றை முழு செயற்திறனுடன் சாத்தியமாக்குவதன் மூலம் தொழிலில் வெற்றியடையலாம்.

தொழிலுக்குத் தேவையான ஏழு முகாமைத்துவக் கோட்பாடுகளில், ஆறு முகாமைத்துவக் கோட்பாடுகளைப் பார்த்து விட்டோம். ஏழாவதாக உள்ள மிக முக்கியமான பண முகாமைத்துவம் பற்றி பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவனின் தளபதி

- தமிழரசன் -

போரும் காதலும் வாழ்வு எனக் கொண்ட தமிழினத்தின் வீர சரித்திரத்தில் எண்ணரும் வீரர்கள் தங்கள் பெயர்களைப் பதித்துச் சென்றுள்ளனர். ஆயிரமாயிரம் என நீளும் இந்த வீரர்களின் வரிசையில் கரிகாலன், ராஜராஜன், ராஜேந்திரன், கருணாகரத் தொண்டைமான் போன்றவர்கள் காலங்கள் ஆயிரம் கடந்தும் மக்கள் மனங்களில் இன்றும் வாழ்பவர்கள். தமிழினத்தின் நீண்ட போரியல் வரலாற்றில் இவர்கள் வீரத்தின் குறியீடுகளாக போற்றப்படுகிறார்கள். கால மாற்றம் போர் உலகிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது.

இந்த மாற்றத்தால் வீரத் தமிழினம் அடிமைத் தளைக்குள் கட்டுண்டு தூங்கிப் போனது. இவ்வாறு கட்டுண்டு கிடந்த தமிழினத்தின் அடிமை விலங்கை உடைத்து தட்டி எழுப்பிய பெருமை தலைவர் பிரபாகரனுக்கும் அவர் உருவாக்கிய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்குமே உரியது. ஈழத்தில் தொடங்கிய இந்த வீர வரலாறு உலகம் முழுவதும் தூங்கிக் கிடந்த தமிழினத்தைத் தட்டி எழுப்பியது. நவீன போரியலை தன் வசப்படுத்தி உலகையே தமிழினம் நோக்கி திரும்பிப் பார்க்க வைத்த தலைவன் பிரபாகரன் என்றால் அதை நடத்திக் காட்டிய வீரத் தளபதி பால்ராஜ்.

பால்ராஜ்... பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே இலங்கை, இந்திய இராணுவங்கள் தொடை நடுங்கும். தமிழ்மக்கள் மத்தியில் வீர உணர்ச்சி கொந்தளிக்கும். உலகின் எந்த மூலையிலும் உள்ள இராணுவமும் மீண்டும் அந்தப் பெயரை உச்சரித்து அமைதியாகும். ஆம்... பால்ராஜ் நவீன போரியலின் வீரத்தின் அடையாளங்களில் ஒன்றாகிப் போனவன். உலகையே திரும்பிப் பார்க்க வைத்த ஈழப் போரின் சாதனையாளன். அவன் ஒரு தனிமனித சகாப்தம்.

பால்ராஜ் என உலகம் அறிந்த வீரத் தளபதியின் இயற்பெயர் பாலசேகரன் என்பதே. முல்லைத்தீவின் கொக்குத்தொடுவாயில் கந்தையா - கண்ணகி தம்பதிக்கு கடைசிப் புதல்வனாக 27 நவம்பர் 1965 இல் பால்ராஜ் பிறந்தார். 3 சகோதரன்களும் ஒரு சகோதரியும் கொண்ட குடும்பத்தில் செல்லப் பிள்ளையாக வளர்ந்த பால்ராஜ் சிறுவயதிலேயே மணலாற்றுக் காடுகள் தொடர்பில் நன்கு பரிச்சயமிக்கவர். பின்னாளில் புகழ்பெற்ற தளபதியாக மிளிர்வதற்கு காடுகள் தொடர்பாக அவருக்கு இருந்த அறிவும் முக்கிய காரணம். ஆரம்பக் கல்வியை கொக்குத்தொடுவாயிலும் இடைநிலைக் கல்வியை புல்மோட்டையிலும் பால்ராஜ் தொடர்ந்திருந்தார்.

### புளொட்டில் பால்ராஜ்

ஜீ.சி.ஈ. உயர்தரத்தில் கற்றுக் கொண்டிருந்த பால்ராஜ் பல்கலைக்கழகத்துக்கு செல்ல வேண்டும் என்பது பெற்றோரின் எதிர்பார்ப்பாக இருந்தது. அவரின் கனவும் அப்போது அதுவாகவே இருந்தது. அச்சமயத்தில்தான் - 1980 களில் மணலாறு பிரதேசத்தில் - இப்போதைய வெலிஓயாவில் - சிங்களக் குடியேற்றத்தை வலிந்து ஏற்படுத்தியது இலங்கை அரசு. இதனால் அப்பகுதிகளில் இருந்து தமிழர்கள் விரட்டப்பட்டனர். இந்தச் சந்தர்ப்பத்தில் கொக்குத்தொடுவாய் இளைஞர்கள் கைகளில் கிடைத்தவற்றைக் கொண்டு அரசை எதிர்க்கத் தொடங்கினர். இந்தக் கிளர்ச்சியாளர்களில் பாலசேகரனும் ஒருவர். இந்த நிலையில் அங்கு சென்ற புளொட் அமைப்பு இளைஞர்களை உள்வாங்கியது. அவர்களில் பாலசேகரனும் ஒருவர். சேர்க்கப்பட்ட இளைஞர்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்தது புளொட். எந்நேரமும் போர்க்களம் பற்றிய சிந்தனையிலேயே இருந்த பாலசேகரனுக்கு புளொட்டின் செயலற்ற தன்மை பிடிக்கவில்லை. சில வாரங்களிலேயே புளொட்டிலிருந்து விலகி சொந்த இடத்துக்கு திரும்பினார்.

### விடுதலைப் புலிகளுடன் தொடர்பு

விடுதலை போராட்டத்தில் இணைய வேண்டும் என்ற எண்ணத்துடனேயே நாள்களைக் கடத்திய பாலசேகரன் தலைவர் பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகள் பற்றி அறிந்தார். அவர்களின் வீரதீரத்தை செய்திகள் மூலமாக அறிந்த அவர் விடுதலைப் புலிகளுடன் இணைவதே தனக்குப் பொருத்தமாக இருக்கும் என்று எண்ணினார். ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்வது என்பது அப்போது பகீரத் பிரயத்தனமாக இருந்தது. சேர விரும்புபவர்கள் உடனடியாக சேர்க்கப்படுவதில்லை - அதுவும் இவர் புளொட் அமைப்பில் சில நாள்களேனும் இருந்திருந்தார். விடுதலைப் புலிகள் மாற்று இயக்கத்தாரை தங்கள் அமைப்பில் சேர்ப்பதில்லை. இதுதவிர சாதரண ஒருவர் விடுதலைப் புலிகளுடன் சேர்வதாக இருந்தால் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரின் சிபாரிசைப் பெறவேண்டும். பின்னர் இயக்கம் கொடுக்கும் வேலைகளை வெற்றிகரமாகவும் திருப்திகரமாகவும் செய்தால் மட்டுமே விடுதலைப் புலிகளின் உறுப்பினராகலாம். பால்ராஜ் தனது உறவினரான காண்டீபனுடன் (ஒதியமலை தாக்குதலில் 1984 இல் லெப்டினன்ட் படையப் பதவியுடன் வீரச்சாவடைந்தவர்.) தொடர்பை ஏற்படுத்தி 1983 ஆம் ஆண்டு தொடக்கம் இயக்கத்துக்காக வேலை செய்ய ஆரம்பித்தார். 1984 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்புக்குள் உள்வாங்கப்பட்டார்.

### முதல் போர்க்களம்

பால்ராஜ் தொடர்பில் நன்கு விசாரித்து அறிந்த புலிகள், அவர் புளொட்டுக்கு விரும்பிச் செல்லவில்லை என்பதை உறுதிப்படுத்தினர். அத்துடன் அவரின் மணலாற்றுக் காடு சார்ந்த அறிவு தமக்கு உதவும் என்பதால் கூடவே வைத்திருந்தனர். எனினும் அவர் தொடர்ச்சியாக புலிகளால் கண்காணிக்கப்பட்டுக்



## பிரிகேடியர் பால்ராஜ்

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | கந்தையா பாலசேகரன் |
| பிறப்பு | - | 27 நவம்பர் 1965 |
| பெற்றோர் | - | கந்தையா - கண்ணகி |
| சகோதரர்கள் | - | 3 சகோதரர்கள், 1 சகோதரி |
| பிறப்பிடம் | - | கொக்குத்தொடுவாய் |
| மாவட்டம் | - | முல்லைத்தீவு |
| கல்வி | - | ஜீ.சி.ஈ. உயர்தரம் |
| தெரிந்த மொழிகள் | - | தமிழ், சிங்களம், ஆங்கிலம் |
| இணைவு | - | 1984 |
| பயிற்சி | - | இந்தியா (9 ஆவது பயற்சி முகாம்) |
| போர் முறை | - | சாதாரண போர் (ஆயுதம் தாங்கிய), உளவியல் போர் |
| அடைமொழிப் பெயர் | - | மானமறவன், சமர்க்கள நாயகன் |
| வேறு பெயர் | - | லீமா |
| முதல் தாக்குதல் | - | ஒதியமலை வாகன அணி மீது தாக்குதல் |
| வாழ்க்கைத் துணை | - | வரதா |
| வகித்த பதவிகள் | - | முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் தளபதி, வன்னி மாவட்ட கட்டளைத் தளபதி, சாள்ஸ் அன்ரனி படையணி சிறப்புத் தளபதி, விடுதலைப் புலிகளின் துணைத் தளபதி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மேஜர் பசீலனுடன் பால்ராஜ்


குடாரப்பு தரையிறக்கத்தின் போது...


குடாரப்பு தாக்குதல் நடவடிக்கையின் போது...

கொண்டிருந்தார். இந்த நிலையில்தான் விவசாயிகளிடம் இருந்து "ஷொட்கன்"களைப் பெற்ற பொலிஸார் அவற்றை வாகனங்களில் ஏற்றிச் சென்றனர். இந்த வாகனத் தொடரணியை காண்டீபன் தலைமையிலான குழுவினர் வழி மறித்துத் தாக்கினர். இந்தத் தாக்குதலில் காண்டீபன் உட்பட 9 பேர் வீரச்சாவடைய, மூவர் தப்பினர். தப்பியவர்களில் பால்ராஜும் ஒருவர். ஆனாலும் அவர் தோள் பட்டையில் காயமடைந்திருந்தார்.

### மாத்தையாவுடன் உறவு

காயமடைந்த பால்ராஜ் சிகிச்சைக்காக தமிழ்நாட்டுக்கு அனுப்பப்பட்டார். அச்சமயம் விடுதலைப் புலிகளின் துணைத் தலைவராக இருந்த மாத்தையாவும் காயத்துக்கு சிகிச்சை பெற்று வந்தார். மாத்தையாவுக்கும் பால்ராஜுக்கும் ஏற்பட்ட நெருக்கத்தால் தமிழ்நாட்டில் புலிகளுக்கு அளிக்கப்பட்ட பயிற்சி முகாமில் பயிற்சி பெறும் வாய்ப்பு பால்ராஜுக்கு கிடைத்தது. இங்குதான் தலைவர் பிரபாகரனுக்கும் பால்ராஜுக்கும் இடையிலான உறவு ஆரம்பமானது. இந்த உறவு பின்னாளில் வலுவாகி தலைவர் பிரபாகரனின் அன்பையும் பாசத்தையும் நம்பிக்கையையும் பெற்ற தளபதியாக பால்ராஜை வலம் வரச் செய்தது எனலாம். தமிழ்நாட்டில் பயிற்சி முடிந்து வந்த பால்ராஜுக்கு பின்னர் தளபதி கிட்டுவுடனும் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. இருவரினதும் உறவும் மிகக் குறுகியதாகவே அமைந்தது.

பயிற்சி முடிந்து வன்னிக்குத் திரும்பிய பால்ராஜ் புலிகள் அணிக்கு சமையலாளராக பணியைத் தொடங்கினார். பால்ராஜ் பற்றி அறிந்திருந்த முல்லைத்தீவு மாவட்டத் தளபதியாக இருந்த மேஜர் பசீலன் அவரைத் தனது மெய்ப்பாதுகாவலாராக அழைத்துச் சென்றார். மேஜர் பசீலன் அதீத துணிச்சல் மிக்க தளபதி. இலங்கை - இந்திய இராணுவங்களுக்கு சிம்மசொப்பனமாகத் திகழ்ந்தவர். தலைவர் பிரபாகரனுக்கான முழுப் பாதுகாப்பையும் இவரது அணியே வழங்கியது. போர் திட்டமிடலில் அசகாயசூரனான பசீலனின் கீழ் பால்ராஜ் வளர்ந்தார். பசீலனுக்கு துணையாக என்றும் களத்தில் நின்ற பால்ராஜ், அவரின் சொல்லை என்றும் மீறியதில்லை. இருவரின் நடவடிக்கைகளால் 1985 இல் முல்லைத்தீவும் 1986 இல் கிளிநொச்சியும் புலிகள் வசமாகின. 1987 ஒக்ரோபரில் இந்தியப் படைக்கும் புலிகளுக்கும் இடையிலான தாக்குதல் ஆரம்பித்தபோது பசீலன் தனது அணியினருடன் முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

### இந்திய டாங்கி தகர்ப்பு

அச்சமயம் இந்தியப் படையும் புலிகளும் கோப்பாயில் பொருதினர். மிகக் கடுமையாக இருந்த இந்த சண்டையில்தான் புலிகளின் முதல் பெண் போராளியான 2 ஆம் லெப். மாலதி வீரச்சாவடைந்தார். பசீலனுடன் நின்று சண்டை பிடித்துக் கொண்டிருந்த பால்ராஜ். தம்மை நோக்கி வந்த இந்திய டாங்கி ஒன்றை ஆர்.பி.ஜியால் தாக்கி அழித்தார். அவரின் இந்த துணிச்சலும் களத்தில் அவர் காட்டிய வழிநடத்தல் திறனையும் கண்ட பசீலன் அவருக்குப் பொறுப்புகளை வழங்கினார். பின்னாளில் தலைவர் பிரபாகரன் மணலாறு காட்டுக்குள் தனது இருப்பிடத்தை அமைத்துக் கொண்டபோது அவருக்கான பாதுகாப்பை மேஜர் பசீலன் பார்த்துக் கொண்டார். அப்போது ஓர் அணியை பால்ராஜ் தலைமையில் காட்டின் ஆரம்பப் பகுதியில் நிறுத்தினார். இந்தச் சமயத்தில் லெப்.கேணல் நவத்துடன் பால்ராஜுக்கு தொடர்பு ஏற்பட்டது.

மலைநாட்டை சேர்ந்தவரான லெப்.கேணல் நவம் கொக்குத்தொடுவாயில் பிறந்து வளர்ந்தவர். பால்ராஜும் அந்த இடத்தை சேர்ந்தவர் என்பதால் இருவருக்குமான உறவும் மிக நெருக்கமாக இருந்தது. தலைவர் பிரபாகரனுக்கு நெருக்கமாக இருந்த நவம்தான் காட்டினுள்ளே அவருக்குப் பாதுகாப்பு அளித்து வந்தார். இதனாலும் பால்ராஜுக்கும் நவத்துக்கும் இடையிலான உறவு மேலும் வலுப்பட்டது. இந்த சமயத்தில் தலைவர் பிரபாகரனை அழிக்க செக்மேற் நடவடிக்கையை இந்திய இராணுவம் செய்தது. தலைவர் பிரபாகரன் இடம்மாறிக் கொண்டிருந்த சமயம் இந்தியத் துருப்பினர் விமானத்தில் இருந்து பரசூட் மூலம் காட்டுக்குள் குதித்து தாக்கத் தொடங்கினர். இதற்கென்றே விசேட பயிற்சிகள் பெற்ற இந்திய இராணுவத்தை பால்ராஜின் அணி ஒருத்தர்கூட மிஞ்சாது துவம்சம் செய்தது. இத்தாக்குதல் தலைவரின் நம்பிக்கையை பால்ராஜுக்குப் பெற்றுக் கொடுத்தது. இதன் பின்னர் நடந்த தாக்குதல்களில் பால்ராஜின் திறனையும் வீரத்தையும் கண்ட தலைவர் அவரை மேலும் மேலும் ஊக்கப்படுத்தி வெற்றிகளைப் பெற வைத்தார். பசீலன் - பால்ராஜ், பால்ராஜ் நடத்திய சண்டைகளே புலிகளுக்குப் பெருமளவு ஆயுதங்களைப் பெற்றுக் கொடுத்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேஜர் பசீலனின் வீரச்சாவின் பின்னர் முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளராக பால்ராஜை தலைவர் பிரபாகரன் நியமித்தார். பொறுப்பை ஏற்றதும் தாக்குதல்களை தீவிரப்படுத்தினர். கொக்காவில், மாங்குளம், மண்கிண்டிமலை முகாம்கள் மீது தாக்குதல்களை நடத்தினர். இவற்றில் புலிகளின் அணிகள் பெரு வெற்றிகளைப் பெற்று பல வகையான ஆயுதங்களைக் கைப்பற்றின. இதையடுத்து வன்னி மாவட்டத் தளபதியாக பால்ராஜை நியமித்தார். விடுதலைப் புலிகள் மரபு வழிப் படையாக மாற்றமடைந்தது. சாள்ஸ் அன்ரனி படையணி 1991 ஏப்ரல் 10 ஆம் திகதி நிறுவப்பட்டது. இதன் முதலாவது சிறப்புத் தளபதியாக பால்ராஜ் பொறுப்பேற்றார். பொறுப்பேற்ற சில நாள்களிலேயே வன்னி விக்கிரம 02, 03 இராணுவ நடவடிக்கைகளை முறியடித்தார்.

### அமிலப் பரிசோதனை

போர்க் களங்களில் வெற்றிவாகையை புலிகள் சூடினாலும் அமைப்புக்குள் நிகழும் சில விடயங்களால் அந்த அமைப்பு பலவீனப்படுவதுண்டு. இத்தகைய ஒரு காரணியாக அமைந்ததுதான் இந்திய றோவிடம் விலைபோன மாத்தையாவின் துரோகம். மாத்தையாவுக்கும் பால்ராஜுக்கும் இடையே நெருக்கமான உறவு வளர்ந்திருந்தது. இந்தியப் பயிற்சி முகாமில் பால்ராஜ் பங்கேற்கும் வாய்ப்பு மாத்தையாவாலேயே கிடைத்தது. முல்லைத்தீவு மாவட்டத் தளபதியாக இருந்தபோது மாத்தையா அவருக்கு அளித்த ஆதரவும் பால்ராஜை அவர் மீது விசுவாசகம் கொள்ளச் செய்தது. ஆனாலும் பால்ராஜ் தலைவர் பிரபாகரன் மீதே தீவிர விசுவாசமும் மரியாதையும் கொண்டிருந்தார். இதற்கான அமிலப் பரிசோதனைக் களமாக மாத்தையா பிளவு இடம்பெற்றது.

புலனாய்வுத் துறைப் பொறுப்பாளராகவும் பின்னாளில் புலிகள் அமைப்பில் தலைவருக்கு அடுத்து முடிவுகளை எடுக்கும் சக்திமிக்கவராக வளர்ந்தவருமான

(18ஆம் பக்கம் பார்க்க)

## பால்ராஜ் தலைமையில் இடம்பெற்ற தாக்குதல்கள்

### புலிகளின் வலிந்த தாக்குதல்கள்

- 1990 - கொக்காவில், மாங்குளம் முகாம்கள் தகர்ப்பு
- 1991 - ஆகாய கடல் வெளி சமர் (ஆனையிறவு முகாம் மீதான தாக்குதல்)
- 1992 - வளலாயில் 7 கிலோமீற்றர் நீளமான படைத்தளம் அழிப்பு
- 1993 மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பு, தவளை நடவடிக்கை (மருத்துவமனையில் இருந்தவாறு வழிநடத்தினார்)
- 1995 - புலிப்பாய்ச்சல்
- 1996 - ஓயாத அலைகள் 01 (முல்லைத்தீவு முகாம் தகர்ப்பு)
- 1998 - பரந்தன் ஊடறுப்பு சமரும் பீரங்கிப் படைத்தளம் அழிப்பும்
- 1998 - ஓயாத அலைகள் 02 (கிளிநொச்சி முகாம் தகர்ப்பு)
- 2000 - ஓயாத அலைகள் 03 (ஆனையிறவுப் பெருந்தளம் அழிப்பு)

### முறியடிப்புத் தாக்குதல்கள்

- 1987 - ஒப்ரேஷன் பவான் (அணித் தலைவர்களுள் ஒருவர்)
- 1988 - ஒப்ரேஷன் செக்மேற் (இரண்டாம் நிலைத் தளபதி)
- 1991 - ஒப்ரேஷன் பலவேகய, வன்னி விக்கிரம 02,03
- 1992 - மின்னல்
- 1993 - யாழ்.தேவி
- 1995 - சூரியக்கதிர்
- 1996 - ஒப்ரேஷன் சத்ஜெய
- 1997 - ஒப்ரேஷன் ஜெயசிக்குறு
- 1999 - ஒப்ரேஷன் ரணகோஷ
- 2001 - ஒப்ரேஷன் அக்கினிகீல


முல்லைத்தீவு முகாம் தாக்குதல் திட்டம் குறித்து விளக்குகிறார்


இராணுவத்திடம் கைப்பற்றிய பவளுடன் பால்ராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திசைகள்

எஸ்.எல்.எம்.ஹனிபா

மதங்கொண்ட யானைகள் திரண்டெழுந்து செல்வதைப்போல மாந்தராறு தனது முழு உக்கிரத்தையும் வெளிப்படுத்தி ஓடிக்கொண்டிருந்தது.

ஆங்காங்கே எழும் சுழிகளில் கண்களை நிலைகுத்தி நின்ற மாணிக்கம் ஏதோ நினைவுக்கு வந்தவனாக வெற்றிலைக் குட்டானைத் தலையில் கட்டிக்கொண்டு ஆற்றில் இறங்கினான்.

உடலின் பலத்தையெல்லாம் கைகளுக்கனுப்பி, அவன் ஆற்று நீரைப் பின்னுக்குத் தள்ளி நீந்தத் தொடங்கிய கண நேரத்திற்கெல்லாம் திடீரெனத் தோன்றிய பெருஞ் சுழியொன்று அவனைத் திக்குமுக்காடச் செய்தது.

"முருகா!" பெருமூச்சுடன் வெளிவந்த அந்த வார்த்தையின் உந்துதல் அவனக்குப் புதிய தெம்பையும் பலத்தையும் கொடுத்திருக்கவேண்டும். நான்கு கை எறிதலில் அவன் ஆற்றின் மறுகரையை எட்டினான்.

விலா எலும்புகள் உப்பிப் புடைக்க அவனுக்கு மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கியது. அந்த மணற்பரப்பில் அவன் 'சடா'ரென விழுந்தான். இடுப்பில் கட்டியிருந்த துண்டை அவிழ்த்து நீரைப் பிழிந்துவிட்டு, முகம், தலை என்று ஒரு தடவை துடைத்துவிட்டான்.

தலையில் பத்திரப்படுத்தியிருந்த வெற்றிலைக்குட்டான் கைக்கு மாறியது.

வெற்றிலையோடு புகையிலையும் சுண்ணாம்பும் நனைந்து 'பிசுபிசு'த்துப்போயின. அருவருப்பை ஊட்டினாலும் குத்து மதிப்பில் அள்ளிக் குதப்பிக்கொண்டான்.

அவ்விடத்தை விட்டு எழும்பும்போது மீண்டும் ஒரு முறைதான் கட்டியிருந்த துண்டை முறுக்கிவிட்டு தோளில் போர்த்திக்கொண்டான். பெருமழையில் வீதியெல்லாம் நாய் கடித்துப்போட்ட தோல்வாரைப்போல....

போதாதற்கு வண்டில் பட்டம்வேறு வீதியை வெட்டி வெட்டித் தின்றுகிடந்தது.

கருங்கல்லும் கிறவல் உடைசல்களும் அவன் கால்களைக் குத்தின.

'பெருமானே! எப்பதான் ஊட்ட போறயோ?' எண்ணும்போதே அவன் மனவானில் மனைவியும் அவன் குஞ்சு குருமன்களும் ஒருமுறை நினைவுச் சொடுக்கில் மின்னினார்கள்.

மூக்கர் கல் சந்தியில் ஏறி - அவன் கால்கள் இறக்கத்தில் மிதக்கும்போது- கிழக்கே செல்லும் சாமான் 'கோச்சி'யின் சப்தம் அவன் காதுகளைக் கடித்தது.

கால்களை எட்டிப்போடத் தொடங்கினான்.

இருள் அரக்கியின் கரிய போர்வையின் அரவணைப்புக்குள் வயல்வெளி கிடந்தது.

"டேய்! யார்ராலெ?" இருட்டில் வந்த உருவத்தோடு முட்டிக்கொண்டே முணுமுணுத்துக் கொள்கிறான்.

"ஆ! நம்மெடெ முஸ்தாக்காவா? இந்தெ நேரத்திலெ எங்கடாக்கா?" அளவுகடந்த களைப்பின் தொய்வு அவன் கேள்வியில் இழுபட்டது.

"மாணிக்கன்! நான் மயிலெவட்டவானுக்கெ போறென். பகல் இஞ்செ அத்துல்ஹமீதிடெ கடையிலெ குடைய அயத்து வெச்சிட்டேன். அதிரிக்கெ ஆத்திலெ தண்ணி எப்பிடிப் பம்பலோ?"

"அதென்னத்தெ போசிறாய். இந்தெ மழை மனிசனெ அழிக்க வந்தாப்லெ இலுவா இரிக்கி. ஆறு தமாராப் போவுது. நான் நம்பெல்லெ இந்தெ நாளயிலெ வானம் வெளிக்குமெண்டு."

"அதானெ மூணுமாசமாப் பேயுதெ. சனியன் புடிச்செவனாம். இந்தெக் கிழம உச்சிவடக்கல் அவுலியாடெ பேராலெ கந்தூரி குடுப்போம் என்றிரிக்கெம்."

அவர்களின் கதைக்கு முற்றுப்புள்ளி வைப்பதைப் போலெ வானத்தின் ஒரு மூலையிலே 'பளீர்' என்ற மின்னல் கம்பிகளின் சுடர் மாணிக்கத்தின் கண்களை மூடி மூடித் திறக்கச்செய்தன. தொடர்ந்து அந்த மூலையே இடிந்து விழுவதைப்போன்ற பேரிசைச்சலுடன்...

அந்த இடியோசையில் முஸ்தவாக்கா சொன்னவைகள் அவனுக்கு விளங்கவில்லை போலும். அவன் கால்கள் மீண்டும் வேகமாக நடைபோடத்தொடங்கின.

நீர் கொழுத்த புகாரிக்குள் தன்னை ஒப்புக்கொடுத்த சந்திரன் சோகை பிடித்த பெண்ணைப்போலெ....

எங்கிருந்தோ கூவிய சாமக் கோழியைத் தொடர்ந்து இன்னும் சில கூவல்கள்....

'வீட்டெ போகெ விடிஞ்சிடும்' மனத்தில் எண்ணிக்கொண்டே போடியாரின் கேற்றில் நின்றவண்ணம் குரல் விட்டான்.

"ஆரெது? மாணிக்கமா?" அந்த மாரிகால தூக்கக் கலக்கத்திலும் அவரின் செவிகள் அவன் குரலைக்கொண்டே அடையாளம் காட்டின.

சாவிக் கொல்லையைத் தலைமாட்டிற்குள்ளிருந்து எடுத்தவர் போர்டிக்கோ கதவைத் திறக்கிறார். அவரின் கையிலிருந்த 'டோர்ச்' அவன் கால்களில் ஒளியைத் துப்புகிறது.

"என்னெ மாணிக்கன் ஆத்திலெ தண்ணி எப்பெடி? சூட்டடியிலே தண்ணி ஏறிரிக்கா?" போடியார் யதார்த்தமான விசயத்தில் இறங்கினார்.

மாணிக்கம் மங்கலான நிழலில் அவர் முகத்தைப் பேந்தி பேந்திப் பார்த்தான். 'சூடு' அடிக்கவேண்டும் என்ற ஆவல் முகத்தை ஆட்கொண்டிருப்பதான உணர்வு அவன் உள்ளத்தைத் தொட்டது.

அந்தக் கணத்திலிருந்து அவனுள் புரியாத வேதனையும் வேக்காடும் முடிக்கொண்டது.

விதை விதைத்தவன் அவன்தானே!

"களத்தடியிலெ முழங்கால் தண்ணி. நாமெ இந்தெ நாளையிலெ சூடடிச்சாப்லெதான்." வெறுப்பு விரக்தியின் உருவில்.

"மெய்தான் துவக்கெங்கே?"

மாணிக்கத்தின் செவிகளை நாகம் தீண்டியதைப் போலெ, அடிநாக்கு மேல் முரசுடன் ஒட்டிக்கொண்டது. அவன் பேசமுடியாமல் திணறிக்கொண்டே-

"புரையிலெ எடுத்துவைச்சாப்லெ"

"பளீர்! பளீர்!"

போடியாரின் கை அவன் கன்னங்களில் அறைந்து ஓய்கின்றது.

"பறநாயெ உனக்கு மண்டையிலெ களிமண்ணாடா? வளிசெக்கூதிரெ மகன்!" அந்த வார்தைகள் போடியாரின் மனைவியும் தூக்கக் கிறக்கத்திலிருந்து எழும்பியது.

திறந்திருந்த கதவினூடாக அவள் கணவனையும் மாணிக்கத்தையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு அடுப்பங்கரையை நோக்கினாள். அந்த வேளையில் அவர் மாணிக்கத்தை அப்படிச் சினந்தது ஏனோ அவளுக்குப் பிடிக்கவில்லை.

மாணிக்கம் மூக்கன் போடியாரின் முல்லைக்காரன் என்றுமட்டும் சொல்லமுடியாது. போடியாரின் அந்தரங்கத்துக்குவப்பான சகல காரியங்களிலும் அவன் பங்கும் உண்டு. அவன் போடியாரிடன் 'முல்லைக்கார'னாக வந்த நாட்களில் ஓடிஆடித் திரிந்த அவரின் ஒரே செல்வப் புதல்வன் இன்னும் சிலநாட்களில் தந்தையாகப் போகிறான். இடையில் இருபத்திரண்டு வருடங்கள்! அவனைப் பொறுத்த வரையில் இருபத்திரண்டு நாட்கள்தான்!

போடியாருக்கு அவன்மீது சினம் வெடிக்கும்போதெல்லாம் அவரின் கையிலிருக்கும் எந்தெ ஆயுதமானாலும் அவனைப் பதம் பார்க்கத் தவறாது.

உலுமுத்தம் வரிச்சி, வேலைக்காரன் கம்பு, மண்வெட்டிப்பிடி என்று அவனுடலை அள்ளிக் கொஞ்சும். அந்தக் காயங்கள் மாறுவதற்கு முன்னரே அவன் அந்தச் சம்பவங்களை மறந்துபோய்விடுவான்.

எவ்வளவு பெரிய மனம் அவனுக்கு? ஆனால் அவன் எப்படி உழைத்தாலும் திருப்தி காணாதவொரு சுபாவம் போடியாருக்கு. போடியாரின் மனம் மாணிக்கத்தையும் துவக்கையும நினைந்து நினைந்து புகை கக்கியதினால்- முகம் சிவப்பேறி - சினம் வெடிக்கும் தருணத்தை குறி பார்த்துக்கொண்டிருந்தது.

'குடையை எடுத்துக்கிட்டு சந்தெப்பக்கம் போவெம். ராவெல்லாம் பெஞ்செ மழையிலெ, சூடெலாம் அடிச்சிட்டுப் போனாலும் போயிரிக்கிம்'.

குடையின் போர்வைக்குள் உடம்பை ஒப்புக்கொடுத்தவராக நடை பயில்கிறார் மூக்கன் போடியார். அவர் வீதியில் இறங்கியதுமே அவரைத் தேடியவராக அவரின் வலது கையான அவக்கன் போடியாரின் தரிசனமும் சித்தித்தது.

"போடியார் புளியடித்துறப்பக்கம் ஒரு நட போவெம். வெள்ளம் எப்பிடிண்டு பாப்பெமெ." மூக்கன் போடியாரின் நாசித்துவாரங்கள் புடைத்துச் சரிந்தது.

"போய்ப் பார்த்து என்னதான் செய்யப்போறம். வானத்தை மறைச்சி பந்தலா போடப்போறம்."

அவக்கன் போடியாரின் சாரன் முழங்காலைச் சுற்றிக் கொள்ள- தோளில் கிடந்த துவாய் தலையைச் சுற்றிக்கொள்கிறது.

நுங்கும் நுரையுரமாகப் பொங்கி வழிந்துசெல்லும் ஆற்றின்மீது மிதந்துசெல்லும் உப்பட்டிகளைக் கண்டதும்

"சேய்! என்னெ மசிரு மழையிது. ஒவ்வொரு உப்பட்டியிலெயும் நாலு மரைக்கா நெல்லிலுவா போவுது. இந்தெ மாரிக்கு மரைக்கால் பதினைஞ்சிக்கு விக்கலாமே!" இதயம் மறுகி ஆலாய்ப் பறந்தது.

அன்றெல்லாம் அப்பிரதேசம் கார்மேகத்தின் அணைப்புக்குள்ளாகி...இரவோடு இருளாக...

வாடியில் தவைந்துவிட்ட கணவன்மார்களையும் பிள்ளைகளையும் எண்ணிக் கலங்கி அக்கிராமத்தின் சந்து, பொந்துகளிலெல்லாம் சிணுங்கல்களும் கூடவே கண்ணீர் மணிகளும் தெறிக்கத்தொடங்கின.

மோட்டு வளையில் துணிகளில் சில்லறைக் காசுகளும் பச்சரிசியும் காணிக்கையாகத் தொங்கத் தொடங்கின. இரண்டு நாள்கள் அடைமழையில் கரைந்தன.

மூன்றாம் நாள் ஒரு என்ஜின் வள்ளம் அந்தக் கிராமத்தின் சில மனித மூட்டைகளைச் சுமந்தவண்ணம் வயல் வெளியை நோக்கி நீரைக் கிழித்துக்கொண்டு செல்கிறது.

அங்கே சோகத்தின் நிழலாய் மூக்கன் போடியார்.

இரண்டு நாள்களாக எதையோ பறிகொடுத்த பதறலில்-வெள்ளத்தில் கரையேறிய கயல்போல் துடிதுடித்தது.

'மாணிக்கன் எங்கெ போனான்? ஆண்டவன்தான் அவனக் காக்கணும்.' இவரைப்போலவே அந்த வள்ளத்தில் பயணம்செல்லும் போடிமார்கள் இறைவனைப் பக்திபூர்வமான தேடலில் தரிசனம் காணும் முயற்சியில் இறங்குகிறார்கள். ஓடிக்கொண்டிருந்த அந்த வள்ளத்தை-எங்கிருந்தோ தோன்றிய பெருஞ்சுழியொன்று அந்தப் பென்னம்பெரிய மருத மரத்தில் அடராக்கி நிறுத்தியது.

ஒரு முறை வள்ளம் ஆடி நின்றது.

அந்த மரத்தின்மேலே கைக்கு எட்டும் உயரத்தில் ஒரு காட்சி- அவர்களின் கண்களைப் பறித்து இழுத்துப் பயம் காட்டியது.

அங்கே மருதமரத்தின் கிளைகளில் சிக்கி-மாணிக்கத்தின் உடல் தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருந்தது.

உடலில் ஆங்காங்கே வெள்ளைப் புண்கள். கண்கள் இருந்த இடம் வெறம் மூழியாக-மீன்கள் கொத்தித்தின்றிருக்கவேண்டும்.

அதற்குமேலே! அந்த மரத்தின் நடுப்பகுதியில் துவாயினால் சுற்றிக் கட்டப்பட்ட - அந்த இரட்டைக்கண் குழல்துவக்கு அவர்களை நோக்கிக் குறிபார்ப்பதுபோலக் காட்சிதந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆடையும் அழகியும்

பொதுவாக அழகு ராணிப் போட்டிகள் என்றால் ஆடை உரிப்பும் இருந்தே தீரும். குறிப்பாக பிகினி உடைகளில் மேடைகளில் இவர்கள் நின்றாக வேண்டும். இதற்கு தயார் என்றால்தான் போட்டிகளில் கலந்து கொள்ள முடியும்.

ஆனால் இந்தத் தடவை வித்தியாசமான சம்பவம் ஒன்று நடந்துள்ளது.

பிரிட்டனில் இடம்பெற்ற அழகு ராணிப் போட்டி ஒன்றில் கலந்து கொண்ட முஸ்லிம் அழகி ஒருவர் இறுதிச் சுற்றுக்கு தெரிவாகி இருந்தார். இந்தச் சுற்றில் போட்டியாளர்கள் நீச்சலுடை அணிந்தாக வேண்டும். ஆனால் முனா ஜமா என்ற இந்த 27வயது அழகி அதற்கு மறுத்து விட்டார். கடற்கரையில் நான் பிகினி அணிவதில்லை. எப்படி நான் ஒரு மேடையில் பிகினி அணிந்து பலர் முன்னிலையில் நிற்க முடியும் என்று கூறி பிகினி ஆடை அணிய மறுத்து விட்டார்.

இந்தத் தர்மசங்கடமான நிலையில் போட்டி ஏற்பாட்டாளர்கள் அவரைத் தூக்கி எறிந்து விடவில்லை. கிழக்கு லண்டனில் வசிக்கும் இவரை kaftan என்ற உடலை மூடிய கால் வரை நீளும் ஆடையை அணிய அனுமதித்தார்கள். இந்த ஆடை புராதன மொசபத்தேமிய காலத்தில் இருந்த ஆடை என்பதோடு மத்திய கிழக்கு நாடுகளில் பெண்களால் இது பெரிதும் அணியப்பட்டு வருகின்றது

மூன்று நாட்கள் தொடரும் இந்த இறுதிச் சுற்றில், 40அழகிகள் பங்குபற்ற இருக்கின்றார்கள். வேல்ஸின் தலைநகரான கார்டிப் நகரில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. இதில் தெரிவாகும் அழகி பிரிட்டனின் சார்பாக மிஸ் யூனிவேர்ஸ் போட்டியில் கலந்து கொள்வார்.

இவர் சென்ற ஆண்டும் தெரிவாகி நீச்சல் உடை அணிய வேண்டும் என்ற கட்டத்தில் மெல்ல ஒதுங்கிக் கொண்டார். இந்தத் தடவை மீண்டும் பங்கேற்று நீச்சல் உடை விவகாரம் வந்தபோது நேரடியாக மறுத்துள்ளார். சோமாலியாரான இவர் இன்றைய அழகிப் போட்டிகள் திசை மாறிச் செல்கின்றன என்று கருதுவதோடு அது குறித்து பெண்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த முயல்வதாக தெரிவித்துள்ளார்.

எல்லா விவகாரங்களுமே பணம் புரட்டும் விவகாரங்களாக மாறிக்கொண்டு வருவதால் வந்த வினை இது.

# மரமேறும் சிங்கம்



சிறுத்தை தான் கொன்ற மானை வாயில் கவ்விக்கொண்டு மிக இலாவகமாக மரம் ஏறுவது புதினமான சங்கதி அல்ல. ஆனால் ஒரு சிங்கம் மரத்தில் ஏறுகின்றது என்பது புதினந்தான். உகண்டா காடுகளில் இந்த அரிதான நிகழ்வை படம் பிடித்துள்ளார்கள். இங்குள்ள குயீன் எலிசபத் தேசிய பூங்காவில் சிங்கம் குடும்பமாக மரக் கிளைகளில் உட்கார்ந்திருப்பதைக் காணலாம் என்கிறார்கள்.

இதற்கு என்ன காரணம்?

இங்கு தரையில் உள்ள சூட்டை தாங்க முடியாமைதான் காரணம் என்கிறார்கள் ஆய்வாளர்கள். ஒர் இன ஈக்களின் கடியில் இருந்து தப்பவே இவை மரமேறுகின்றன என்கிறார்கள் இன்னொரு சாரார்.

இப்படி மரமேறும் வல்லமை கொண்ட சிங்கங்கள் தன்சானியாக் காட்டிலும் உள்ளன என்பதோடு முழு உலகிலும் இந்த இரண்டு இடங்களிலும் மாத்திரமே மரமேறும் அரிய நிகழ்வு இடம்பெறுகின்றது என்று சொல்லப்படுகின்றது.

போதிய உணவு கிடைக்காமல் மரத்தில் ஏறுகின்றன என்றும் சொல்லப்படுகின்றது. அப்படி என்றால் மரத்தில் ஏறும் சிங்கம் எந்த வழியில் உணவைப் பெறப் போகின்றது?

இது கேள்விக்குரிய விடயம்தான்.

# புதியவர் வருகிறார்




இந்தக் கணனி யுகத்தில் புதிய வரவுகள் என்றுமே மனக் கிளர்ச்சியை ஏற்படுத்தவல்லன. அதிலும் புதிதாக வரும் ஐபோன்கள் பெரிய பெரிய எதிர்பார்ப்புகளை சந்திக்க வருகின்றன.

ஐபோன் 7 வந்த சூடு ஆற முன்பு 8 களத்தில் குதிக்கப்போவதாக செய்திகள் வந்து விட்டன. இதன் விலை 1099 டொலர் என்று விலையைக் கூட நிர்ணயித்துள்ளார்கள். நடிகைகளை விட ஐபோன் பற்றி வரும் கிசு கிசுக்கள்தான் அதிகம். அந்த அளவுக்கு இது கோடிக்கணக்கானவர்களின் டார்லிங் என்று மாறி இருப்பதே நிஜம்.

256GB கொள்ளளவு கொண்ட இந்தப் புதிய போனின் விலை ஆயிரம் டொலரைத் தாண்டும் என்று கூறுவதோடு 3D சென்சர் OLED டிஸ்பிளே வசதியைக் கொண்டிருக்குமாம்.

அப்பிள் உற்பத்தியில் மிக அதிகம் விலை கொண்ட போனாக இந்தப் புதிய போன் இருக்கப் போகின்றது என்றும் சொல்லப்படுகின்றது. எப்பொழுது இது சந்தைக்கு வரும் என்று உறுதியாக சொல்லாமல் சில மாதங்கள் என்று சொல்லி இருக்கிறார்கள்.

புது அதிசயங்களுக்காகக் காத்திருப்போமே

**புதினப்பூங்கா**
**ராஜேஷ்மணாளன்**



# பிஞ்சிலே பழுத்த காதல்

காதலுக்கு கண் இல்லை என்கிறார்கள். வாஸ்தவந்தான். கடும் காதல் கண்ணை மூடவைத்து விடுகிறது. காதலுக்கு வயதும் இல்லையா? அவர் பெயர் Brigitte Trogneux. வயது 64.இவர் பெயர் Emmanuel Macron. இவர் வயது 39. மிக இளம் வயதில் பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதி என்ற பெருமையோடு திகழ்பவர்தான் இந்த மக்ரோன் என்பவர்.

அப்படியானால் இந்த 64 வயதுப் பெண்மணி யார்?

புதிய ஜனாதிபதியின் மனைவிதான் இவர். நம்ப முடியவில்லையா? இன்றைய ஜனாதிபதியின் அன்றைய நாடக ஆசிரியராக இருந்து ,காதல் நாடகம் வரை இந்தக் கதை நீண்டதில், 2007இல் இருவருக்குமே திருமணம் நடந்துள்ளது.

“நீ என்ன செய்தாலும் நான் உன்னையே மணப்பேன்” என்று மக்ரோன் அவரது 17வயதில் தன்னிடம் கூறியிருந்ததாக இந்த டீச்சரம்மா பாரிஸ் சஞ்சிகை பேட்டி ஒன்றில் கூறி இருக்கிறார். அதாவது இது பிஞ்சிலே பழுத்த பிடிவாதமான காதல் என்று சொல்லாமல் சொல்லி இருக்கிறார் பிரெஞ்சு நாட்டின் முதல் சீமாட்டி.

இந்த நாடக ஆசிரியைக்கு 40 வயதாககவும் மக்ரோனுக்கு 16 வயதாகவும் இருந்தபோது 18வயதாகும் வரையாவது தங்கள் மகனை தொந்தரவு செய்யாமல் விடும்படி இன்றைய ஜனாதிபதியின் பெற்றோர் அப்பொழுது மன்றாட்டமாக கேட்டுள்ளார்களாம்.

இதில் யாருக்கு யார் மீது காதல் என்ற கேள்வி வருகிறது அல்லவா? மக்ரோனின் அசாத்திய எழுத்துத் திறமை ஆசிரியையை அவர் மீது பித்துப் பிடிக்க வைத்தது என்கிறார் அவருடன் ஒன்றாகப் படித்த ஒரு மாணவர். இதை இவர் பத்திரிகைப் பேட்டி ஒன்றில் கூறி இருக்கின்றார்.

தன் ஆசிரியத் தொழிலை கிடப்பில் போட்டு விட்டு தேர்தல் காலத்தில் முழு நம்பிக்கைக்குரியவராக முழு மூச்சோடு உழைத்தார் என்று ஒரு பாரிஸ் சஞ்சிகை கூறி உள்ளது.

நான் நாட்டின் முதல் சீமாட்டி என்ற ஸ்தானத்தில் இருக்கும்போது இங்குள்ள இளம் சமுதாயத்தினரின் கல்வி மேம்பாட்டுக்காக பெரிதும் உழைப்பேன் என்று இவர் ஒரு பேட்டியில் கூறி இருக்கின்றார்.

64வயதென்பது நமக்கு அஸ்தமன காலம். ஆனால் அவர்களுக்கு இது இளமை பிறக்கும் காலம். இதுவும் செய்வார்கள். இதற்கு மேலும் செய்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைவத்தையும் தமிழையும் ஓங்கச் செய்யும்
# யா/ வண். நாவலர் மகாவித்தியாலயம்

தொகுப்பு:
அ.றொக்ஷன்



அதிபர் சுந்தரம் திருநாவுக்கரசு

## சவால்கள்

3 - 1ஏபி பாடசாலையும், ஒரு 1சி பாடசாலைக்கும் மத்தியில் இப்பாடசாலை அமைந்துள்ளமையால் புதுமுக மாணவர்களை இணைத்துக் கொள்வதில் மிகப் பெரிய சவாலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இப்பாடசாலைக்கு அண்மையில் மிகவும் பிரபல்யமான ஆரம்பப் பாடசாலைகள் அமைந்துள்ளமையால் முதலாம் தரத்தில் இணைந்து கொள்ளும் மாணவர் எண்ணிக்கை மிகவும் குறைவாகவுள்ளது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பெற்றோர்களின் பிள்ளைகள் இப்பாடசாலையில் கல்வி கற்பதினால் மாணவர்களின் கல்வியை மேம்படுத்த முடியாமல் உள்ளது.

இப்பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களை அயல் பாடசாலைகள் உள்வாங்கிக் கொள்கின்றமை.

இப்பாடசாலைக்கு என்று விளையாட்டு மைதானம் இல்லாமை பெரும் சவாலாக உள்ளது.

## வரலாறு

சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் நோக்கில் 1848 ஆம் ஆண்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாலயத்தை ஆரம்பித்தார். இப்பாடசாலையே இன்று நாவலர் மகா வித்தியாலயம் எனப் பெயர் கொண்டு நிற்கின்றது.

1864 ஆம் ஆண்டு பாடசாலையானது உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக பதிவு செய்யப்பட்டது. 1950ஆம் ஆண்டு 8 ஆசிரியர்களுடனும் சுமார் 200 மாணவர்களுடனும் இயங்கியது. 1960 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இப்பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றது. 11.01.1961 இல் பாடசாலையின் நிர்வாகத்தை கல்வி அதிபதி பொறுப்பேற்றார்.

அக்காலத்தில், 12 ஆசிரியர்கள், 300 மாணவர்களுடன் மேம்பட்ட நிலையில் இயங்கி வந்தது. இதனைத் தொடர்ந்து 1962 ஆம் ஆண்டு மகா வித்தியாலயமாக தரம் உயர்ந்தது. 1963 இல் சமஸ்கிருத உயர் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. 01.01.1966 ஆம் ஆண்டில் 16 ஆசிரியர்களும் 425 மாணவர்களுடன் இயங்கியது. 1967 இல் வண்ணார் பண்ணை நாவலர் மகா வித்தியாலயமாகப் பதிவு செய்யப்பட்டது.

இப்பாடசாலையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்(1848 - 1858), மு.தில்லைநாதபிள்ளை (1858 - 1964), வித்துவ்சிரோமணி பொன்னம்பலபிள்ளை (1864 - 1866), மா.வைத்திலிங்கபிள்ளை (1866), அ.குமாரசுவாமிப்புலவர் (1917), கா.இளையதம்பி, மா.வைத்திலிங்கம் (1925), வித்துவான் ந.சுப்பையாப்பிள்ளை (1925 -1928) இ.திருநாவுக்கரசு - (1960), பண்டிதர் க.இராசையா (1960 - 1966), பண்டிதர் த.வேலுப்பிள்ளை (1966 - 1968), வித்துவான் க.இரத்தினவேல் (1968 - 1972), வித்துவான் சி.வைத்திலிங்கம் (1972 - 1973), கு.உதயகுமார் (1973 - 1981), ப.சிவஞானசுப்பிரமணியம் (1981 - 1983), ஐ.துரைராஜா (1983 - 1991), ந.சிவராஜா (1991 - 2001), சு.சிவபாதசுந்தரம் (2001 - 2006) ஆகியோர் அதிபர்களாக கடமையாற்றினர்.

'ஆன்மீகமும் அறிவியலும் இணைந்த கல்வியின் மூலம் நிலமிசை நிறைவோடு நீடிய புகழ் பெற ஒழுக்கமுள்ள சமுதாயத்தை உருவாக்குதல்' எனும் தூரநோக்குடன், 'முறையான கலைத்திட்டத்தினூடாக மாணவர்களின் அறிவுத்திறன், மனப்பாங்கு என்பனவற்றை விருத்தி செய்தல், இணைபாடவிதானங்களினூடாகவும், தலைமைத்துவத்தினூடாகவும் வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கு முகம் கொடுத்தல் சமூகத்திற்கு பொருத்தப்பாடுடைய உத்தம குடிமக்களை உருவாக்குதல்' எனும் பணிக்கூற்றுடன் அதிபர் சுந்தரம் திருநாவுக்கரசு தலைமையில் 25 ஆசிரியர்கள், 180 மாணவர்களுடன் தற்போது சிறப்பாக இயங்கி வருகின்றது.

## சாதனைகள்

2014 - 2016 ஆம் ஆண்டு வரை புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய இப்பாடசாலை மாணவர்களில் (2014 - 8 வீதம், 2015 - 7 வீதம், 2016 - 11 வீதம்) வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுள்ளனர். 2014 - 85 வீதம், 2015 - 86 வீதம், 2016 - 89 வீதம் என புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

2016ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சசையில் பிரதீபன் நிமியோன் 3ஏ,3பி,2சி, நாகதீபா லிங்கேஸ்வரன் பி,6சி,2எஸ் பெறுபேறுகளைப் பெற்றனர். 66 வீதமான மாணவர்கள் உயர்தரம் கற்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

2015 இல் கல்வி அமைச்சினால் பண்பட்ட வாசகர் விருது இப்பாடசாலையைச் சேர்ந்த நா.வினிதா, லோ.கஜேந்தினி, ம.கோபிகா ஆகியோருக்குக் கிடைத்தது .

2016 ஆம் ஆண்டு வட மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட கற்றல் வள நிலையப் போட்டியில் இப்பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்றது.

பிரிட்டிஷ் கவுன்சிலினால் சர்வதேச பாடசாலைகளுக்கான விருது இப்பாடசாலைக்கு வழங்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

அப்பர், சுந்தரர், திருஞானசம்மந்தர், மாணிக்கவாசர் எனும் நால்வரின் குருபூசை தினத்தில் அவர்களின் வரலாறு அடங்கிய இறுவட்டு ஒவ்வொரு வருடமும் பாடசாலையால் வெளியிடப்படுகின்றது. அத்துடன் 2016ஆம் ஆண்டு நால்வரின் வரலாறு அடங்கிய "சைவ ஒளி" எனும் புத்தகம் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கவொன்றாகும்.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மினி பஸ்ஸில் ஒரு மினிப் பயணம்





- உமா சந்தோஷ்

“எவ்வளவு அவசர வேலைகளிருந்தாலும் பஸ் பிரயாணத்தை எண்ணினால் ரவுணுக்குப் போக மனம் வராது” என்று சொன்னார் என் நண்பர். கடந்த மாதம் வெளிநாட்டு உறவொன்று யாழ்ப்பாணம் வந்த வேளை பஸ்ஸில் யாழ்ப்பாண ரவுணுக்குப் போகவேணுமென்று அடம்பிடித்தது. “காற்சட்டையை உரிஞ்சுபோட்டுத்தான் இறக்குவாங்களண்ணை” என்று எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. “சரி வா போகலாம்” என்று நடத்தி கேகே.எஸ். வீதிக்குக் கூட்டிக் கொண்டு வந்தேன். கோணில் ஐஸ்கிறீம் முட்டிவழிவதைப்போல மினி பஸ் சன நெரிசலோடு வந்தது. ஒரு மணித்தியாலத்துக்குள் நாலு பஸ் வந்தது. அத்தனையும் ஹவுஸ் புல். ஒட்டோ ஒன்றைப் பிடித்துப் போவோமென்றால், நம்ம ஆள் சொல்வழி கேட்கமாட்டேனென்று விட்டார். எப்படியாவது அவரை அடுத்த பஸ்ஸில் ஏற்றிப் பழிவாங்குவதென்று தீர்மானித்தேன்.

அடுத்த பஸ் வந்து எங்களை உரசுவதுபோல நின்றது. “எங்கை ஐயா? யாழ்ப்பாணமே?” கொண்டக்டர் கேட்டான். “ஓமோம்” என்று ஐரோப்பிய மொடலில் நம்ம ஆள் தலையாட்டிவிட்டு என்னையும் திரும்பிப்பார்க்காமல் பாய்ந்து ஏறிக்கொண்டார். அவர் ஏறிக்கொண்டார் என்று சொல்வதைவிட தன்னையும் செருகிக் கொண்டார் என்று சொல்வதுதான் பொருந்தும் என்று எண்ணுகிறேன். அவரைத் தொடர்ந்து நானும் என்னைச் செருகிக்கொண்டேன்.

“அண்ணை சீ.ரீ.பி பின்னாலை வருகுது” என்று கொண்டக்டர் கத்தினான். மினி பஸ் பட்டையைக் கிளப்பிக்கொண்டு பறக்க ஆரம்பித்தது. “அண்ணை அடுத்த கோல்ற் இறக்கம்” என்று சத்தம்போட்டவரையும் பொருட்படுத்தாது கொண்டக்டரும் மொபைலில் யாருடனோ கதைத்துக் கொண்டிருந்தான். பின்னர்தான் தெரிந்தது அடுத்தடுத்த சந்திகளில் நிற்கும் ஏஜென்ட் உடன் கதைத்து முன்னர் போன, பின்னால் வாற பஸ்களின் விபரங்களைத் திரட்டிக்கொண்டிருக்கிறான் என்று. அடுத்து வாற மற்றும் போற பஸ்ஸின் நேர இடைவெளிக்கு ஏற்ப தனது பஸ்ஸின் வேகத்தைக் கூட்டிக் குறைத்துக் கொண்டிருந்தான். சில இடங்களில் பஸ்ஸை றைவர் உருட்டிக்கொண்டு போனான். சில இடங்களில் கண்மண் தெரியாமல் பஸ்ஸை பறக்கவிட்டான்.

சனங்கள் இறங்குகிறார்களோ இல்லையோ. அவன் ஏற்றுவதை நிறுத்தவில்லை. அவன் ஆட்களை ஏற்றவில்லை - சாக்கில் பஞ்சை அடைவதைப்போல சனங்களை அடைந்தான் என்று சொல்லலாம். காற்றுப் புக வழி வைக்காமல் - காதலர்கள் கட்டி அணைத்துக் கொண்டிருப்பதைப்போல... மக்கள் விரும்பியோ, விரும்பாமலோ நின்று கொண்டிருந்தனர். கிழவர்கள் குமரிகளோடும், குமரன்கள் கிழவிகளோடும் செருகப்பட்டிருந்தனர். சன நெருசலில் மாட்டுப்பட்ட நம்ம ஆள் பஸ்ஸின் அடி வரிசையில் நின்று எனக்குக் கையசைத்தார். இறைச்சிக் கடைக்குப் பாமிலிருந்து கொண்டு வரும் கோழிகள் நெரிசலில் அண்ணார்ந்து முகட்டைப் பார்த்துக் கொண்டிருப்பதைப்போல நம்ம ஆளும் தலையை உயர்த்தி பஸ்ஸின் முகட்டைப்பார்த்துச் சுவாசம் விட்டுக் கொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் ஒரு குமரியும் முன்னால் ஒரு கிழவியும் நின்று கொண்டிருந்தனர். பின்னர் அடுத்த தரிப்பில் கொண்டக்டர் இன்னும் சிலரை ஏற்றினான். நிலவை முகில் மறைப்பதுபோல நம்ம ஆளை மக்கள் மறைத்துக் கொண்டனர். அதிலே ஏறிய ஒருத்தனுக்கு முன்னைய நாளில் அடித்த தண்ணிக் களை இன்னும் கலையாதிருந்தது. ஒரு கட்டை தூரத்துக்குப் போதை நெடி மணத்தது. அவனுக்கு அடுத்ததாக கலியாண வீட்டுக்குப் போவதற்காக ஏறியவர்களில் ஒருவர் கையால் தனது பட்டு வேட்டியைப் பிடித்தபடி தொங்கிக் கொண்டிருந்தார். அவர் மனைவியின் தலைச் சோடனை இன்னும் ஒருவர் கைக்குப் போவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. அவரின் முகத்தில் வேர்வையால் வழிந்தோடிய மஞ்சள் குங்குமம் அவரின் பிளவுஸில் பட்டு ஆவா குறூப்பின் வாள்வெட்டுக்கு இலக்காகிய ஒருவரை ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தது. பின்னர் தீவுப்பகுதியில் இருந்து வந்த சிலரும் ஏறிக் கொண்டனர். அவர்கள் செத்தவீடு ஒன்றிற்கு வந்ததாகப் பேசிக் கொண்டனர். இன்னுமொரு ஆச்சி நல்லூருக்கு நேர்த்திக்கடனுக்குப் போவதற்காக கற்பூரச் சட்டியுடன் காணப்பட்டார். ரியூசனுக்குப்போற பெடியளும் பெட்டைகளும் கும்பல் கும்பலாக நின்று கொண்டு வறண்ட பகிடிகளைப் பரிமாறிக் கொண்டிருந்தனர்.

“ஐயா பகினவா? ஐயா பகினவா” என்ற ஓலம் கேட்டபோதுதான் கண்விழித்தான் கொண்டக்டர். கோண்டாவில் ஆமிக் காம்பில் இறக்க வேண்டிய ஆமிக்காரன் ஒருவனை கொக்குவில் சந்தி வரை கொண்டுவந்தது அப்போதுதான் தெரிந்தது. அவன் சிங்களத்தில் திட்டிய தன் அர்த்தம் கொண்டக்டருக்கு விளங்காதவரைக்கும் நல்லது. அவன் கொண்டக்டரின் அம்மா, அப்பா, பாட்டன், முப்பாட்டன், கோந்துறு, மாந்துறு எல்லாரையும் கிழிச்சு நூல் நூலாக்கிவிட்டு நடந்து கொண்டிருந்தான்.

வழி வழியே வரும்போதெல்லாம் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் பஸ்ஸை நிறுத்தி ஆட்களை அடைந்து கொண்டுவந்தான். வயது போன ஒரு மூதாட்டி மதவடியில் இறக்கி விடும்படி கொண்டக்டருக்குச் சொன்னார். “கோல்ற் இல்லாத இடங்களில பஸ்ஸை நிப்பாட்டினா ஐயாயிரம் தண்டம் அம்மா தெரியுமோ? முதலாளியிட்ட அதை வேண்டேலாது. என்ரை கையாலைதான் கட்டவேணும்.” என்று போக்குவரத்துச் சட்ட விதிகளை ஒன்றும் விடாமல் ஒப்புவித்தான் கொண்டக்டர். “அப்ப இப்பவரைக்கும் எல்லா இடத்திலையும் நிப்பாட்டி வந்தனியெல்லே” என்று அந்த மூதாட்டி கேட்டார். “அம்மா இப்பிடி ஏத்தினாத்தான் நேரத்துக்கு லீசிங் கட்டலாம். கட்டாட்டி பஸ்ஸை கொம்பனி பறிச்சுப்போடுவன். றைவர் சம்பளம் இருக்கு. என்ரை சம்பளம் எடுக்கவேணும்.” என்று தனது பக்க நியாயத்தைச் சொன்னபடி மதவடியில் பஸ்ஸை நிறுத்தி மூதாட்டியை இறக்கிவிட்டான்.

“அண்ணை நிக்கட்டும்” சற்றுத் தள்ளி தெருவில் நடந்து வந்த இளம்பெண்ணொருத்தியைப் பார்த்து பஸ்ஸை சிலோ பண்ணி “எங்கை? யாழ்ப்பாணமே?” என்று வழிந்தான் கொண்டக்டர். தட்டாதெருவில் ஏறிய வர்களை அன்போடு அரவணைத்து ஏற்றிக்கொண்டான். ஏறினவர்கள் எல்லோரும் இளசுகள். பஸ் பறந்து போய் மனோகரா சந்தியிலும் சிவன் கோவிலடியிலும் நின்று ஆட்களை இறக்கியபடி யாழ்ப்பாண பஸ் ஸ்ராண்டை அடைந்தது.

மக்களெல்லாரையும் இறக்கிவிட்ட பிறகு கடைசியாக இறங்கினார் நம்ம ஆள். தொப்பி கீழே விழுந்து மிதிபட்டு பல காலடையாளங்குடன் காட்சி தந்தது. ரீ சேட் வேர்த்து நனைந்து ஈரமாய்க் காற்சட்டைக்கு வெளியே அரையும் குறையுமாயத் தொங்கிக் கொண்டிருந்தது. மூக்குக்கண்ணாடியைக் கழட்டிக் கையிலே வைத்திருந்தார். கை பாக்கின் வயர் அறுந்து தொங்கிக் கொண்டிருந்தது. மிகவும் களைத்துப் போயிருந்தார். “பஸ் காசைக் குடடா” என்றார் காட்டமாக. பின்னர் மெல்ல மெல்ல நடந்து வந்தவர் “எங்கையாச்சும் தண்ணி வெந்நி குடிக்க வேணும். கூட்டிக் கொண்டு போ” என்றார் தளர்வுடன்.

“என்னண்ணை ஒரு மாதிரியா இருக்கிறியள்” என்று கேட்டேன். காற்சட்டையைக் காட்டினார். “என்ன பேஸை எடுத்துப் போட்டாங்களே?” நான் பதைபதைத்தேன். காற்சட்டை “சிப்” கழன்று கிடந்தது. எப்படிக் கழன்றதென்பது யாருக்கும் தெரியாது. அது பற்றி ஆய்வுகள் தொடருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவிதி
PUTHU VITHI

# தலைவனின் தளபதி

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொட்டு அம்மான், கடற்புலிகளின் தளபதி சூசை ஆகியோர் மாத்தையாவை கைது செய்ய நடவடிக்கை எடுத்தனர். இந்த நடவடிக்கையில் பால்ராஜூம் பங்கேற்றார். இதன்போதுதான் தலைவர் பிரபாகரன் பால்ராஜூக்கு அமிலப் பரிசோதனையை நடத்தினார். அது மாத்தையாவை கைது செய்து வர வேண்டும் என்பதே. சுதுமலையில் அமைந்திருந்த மாத்தையாவின் முகாமை பொட்டு, சூசை, பால்ராஜின் அணிகள் சுற்றி வளைத்தன. மாத்தையாவின் அணிகள் சண்டையை நிறுத்தின. முகாமினுள்ளே நுழைந்த பால்ராஜ் மாத்தையாவை பார்த்து "அண்ணை என்னோட வாங்கோ" என அழைத்தார். மாத்தையாவும் மறுபேச்சின்றி அவருடன் சென்றார்.

தனக்கு நெருக்கமானவரும் - தன் மீது ஆரம்பத்தில் நம்பிக்கை வைத்து ஊக்கப்படுத்தியவருமான மாத்தையாவை கைது செய்ததன் மூலம் தான் தமிழீழம் - தமிழ்த் தேசியம் - தமிழீழ விடுதலைப் புலிகள் - தலைவர் பிரபாகரன் மீதே நேசிப்பும் - விசுவாசமும் - நம்பிக்கையும் கொண்டவர் என்பதை பால்ராஜ் நிரூபித்தார். இதன் பின்னர் எக்காலத்திலும் பால்ராஜ் மீது வைத்த நம்பிக்கையையோ, பாசத்தையோ தலைவர் இழக்கவில்லை. இதனால்தான் அவர் தனது நெருங்கிய உறவினரான வரதாவை பால்ராஜூக்கு திருமணம் செய்து வைத்தார். எல்லோரின் திருமண வாழ்வும் இனிமையாக அமைகிறதா? அப்படி அமையாத வாழ்வுதான் பால்ராஜூக்கும் ஏற்பட்டது. ஆனால் இந்தச் சாதாரண குடும்பப் பிரச்சினையை தங்கள் வியாபார இலாபம் கருதி அண்மையில் பெரு விவகாரம் ஆக்கியிருப்பது வேதனைக்குரியதே.

### சிகிச்சையின்போதும் வழிநடத்தல்

ஆனையிறவில் இருந்து கிளாலி வழியாக இப்போதைய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தலைமையில் "யாழ்தேவி" நடவடிக்கையை இராணுவம் மேற்கொண்டது. இந்தத் தாக்குதலில்தான் பால்ராஜ் பெருங்காயத்துக்கு இலக்கானார். இதனால் போர் களத்தில் இருந்து விலகவேண்டி ஏற்பட்டது. இந்தத் தாக்குதலில் உயிர் தப்பியபோதும் அவரால் காலை நேராக வைத்து நடக்க முடியாத நிலை ஏற்பட்டது. எனினும் பால்ராஜின் வழிகாட்டலில் வளர்ந்த தீபனும் மற்றைய தளபதிகளும் யாழ்தேவி நடவடிக்கையை தோற்கடித்தனர். முன்னேறிய இராணுவம் மீண்டும் ஆனையிறவுக்குள் புகுந்து கொண்டது. இராணுவம் இந்த நடவடிக்கையை ஆரம்பிக்கும் முன்னராகப் பூநகரிப் படைத்தளத்தை அழிப்பதற்கான நடவடிக்கைகளை பால்ராஜ் தொடங்கியிருந்தார். இதற்கான வேவுப் பணிகளை அவரது அணியே செய்தது. தலைவருடன் ஆலோசித்து தாக்குதல் திட்டம் தயாரான நிலையிலேயே யாழ்தேவி நடவடிக்கை தொடங்கியிருந்தது. காயத்தால் பால்ராஜ் களம் புக முடியாத நிலையில் பானு, சொர்ணம், ராம், ஆசை என முக்கிய தளபதிகள் ஒன்றிணைந்து தவளைப் பாய்ச்சல் நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இந்தத் தாக்குதல் புலிகளுக்குப் பெரு வெற்றியைப் பெற்றுக் கொடுத்ததுடன் 81 மி.மீ. பீரங்கியையும், விசைப் படகுகளையும் பல ஆயுதங்களையும் அள்ளிக் கொடுத்தது. மருத்துவமனையில் சிகிச்சை பெற்றவாறே காயத்தின் வேதனையையும் பொருட்படுத்தாது தொலைத்தொடர்பு சாதனங்கள் ஊடாக வழிநடத்தியிருந்தார்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காக முன்னேறிப்பாய்தல், சூரியக்கதிர் நடவடிக்கையை இராணுவம் ஆரம்பித்தபோது அதற்கான எதிர் நடவடிக்கையை விடுதலைப் புலிகள் முன்னெடுத்திருந்தனர். புலிப்பாய்ச்சல் நடவடிக்கை மூலம் இராணுவத்தை பின்னோக்கி நகர்த்தி, பொதுமக்களை வன்னிக்கு புலிகள் அழைத்துச் சென்றனர். சூரியக்கதிர் எதிர் தாக்குதலை முன்னின்று நடத்திய பால்ராஜ், பானு, தீபன், சொர்ணம் தளபதிகள் வன்னிக்கு அழைக்கப்பட்டனர். இத்தருணத்தில் தாக்குதல் பொறுப்பை ஏற்ற இரண்டாம் நிலைத் தளபதி ஒருவர் சமர் புரியாமல் வன்னிக்குப் படைகளை அழைத்துச் சென்றார். யாழ்ப்பாணம் வெகுவிரைவாக வீழ்ச்சியடைய அவரின் செயலே காரணம். யாழ்ப்பாணத்தை புலிகள் இழந்ததன் மூலம் உளவியல் போரை இராணுவம் தொடுத்தது. அது புலிகளின் போர்த் திறன் அழிக்கப்பட்டுவிட்டது. இன்னும் சில நாள்களில் புலிகள் அமைப்பையே அழித்து விடுவோம் எனக் கொக்கரித்தது. இந்தப் பரப்புரையால் தமிழ் மக்களின் நம்பிக்கையை சிதைத்தது.

### ஓயாத அலைகள் தாக்குதல்

இதற்கு முடிவு கட்டத் தீர்மானித்த தலைவர் முல்லைத்தீவுப் பெருந்தளத்தை அழிக்கத் தீர்மானித்தார். ஓயாத அலைகள் எனப் பெயரிட்ட புலிகள், வளங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து பால்ராஜின் தலைமையில் முல்லைத்தீவுக்குள் நுழைந்தனர். இந்தச் சமரில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இந்தச் சண்டையில்தான் 122 மி.மீ. பீரங்கிகள் சாள்ஸ் அன்ரனி படை அணியால் கைப்பற்றப்பட்டது. இதைக் கொண்டே கேணல் கிட்டுப் பீரங்கிப் படை கட்டமைக்கப்பட்டது.



பால்ராஜ் மீது தலைவர் மிகுந்த பாசம் கொண்டவர். ஒருமுறை பழ. நெடுமாறன் தலைவரை வன்னிக் காட்டுக்குள் வந்து சந்தித்தார். அப்போது அவருக்கு விலையுயர்ந்த வெள்ளி மணிக்கூட்டைப் பரிசளித்தார். வெள்ளி மணிக்கூடு தான் அணிவதில்லை எனக் கூறிய தலைவர் பிரபாகரன் தன்னருகே நின்ற பால்ராஜை அழைத்து அவரிடம் வழங்கினார். பின் நெடுமாறனைப் பார்த்து நான் அணிவதும் பால்ராஜ் அணிவதும் ஒன்றுதான். அதுமட்டுமல்ல நான் மிகவும் நேசிக்கும் வீரத் தளபதி இவன்தான் என்று கூறினார்.

பால்ராஜ் பல சண்டைகளில் பெரு வெற்றி பெற்றாலும் சிலநேரங்களில் தலைவர் பிரபாகரனுக்கு அவை திருப்தி அளிப்பதில்லை. இதை அறிந்து அவர் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் விதத்தில் சண்டைகளை பால்ராஜ் நடத்துவது வழமை. பால்ராஜ் அப்படி வென்று வந்த சண்டைகள் பலப்பல, இதன்போதெல்லாம் அவரை பாராட்டுவதுடன் பரிசுகளும் அளிப்பது தலைவரின் வழமை. இத்தாவிலில் 34 நாள்கள் நின்று உலகப் புகழ் பெற்ற பெட்டிச் சமரை நடத்திவிட்டு வந்த போது தலைவர் அவரை பாராட்டவில்லை. பால்ராஜின் முகத்தில் கவலை படர்வதை உணர்ந்த அவர் பால்ராஜிடம் ஒலிநாடா ஒன்றைக் கொடுத்தாராம்.

அது பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்தைக்கும் 54 ஆவது படைப்பிரிவின் தளபதி காமினி ஹெட்டியாராச்சிக்கும் நடந்த உரையாடல். ".... அங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் 1200 பேரை அழிக்க உங்களால் முடியாதா?" என ரத்வத்தை கேட்கிறார். அதற்கு காமினி "பிரபாகரன் வந்திருந்தால்கூட போரிட்டுவிடுவோம். வந்திருப்பது பால்ராஜ். அவன் வந்து குந்தி விட்டான் என்றால் அவனை அசைக்கவே முடியாது" என்று பதிலுரைக்கிறார். எதிரியே உன்னைப் பற்றி இப்படிச் சொன்ன பின்னர் என்னுடைய பாராட்டு தேவையே அற்றது என்றாராம் தலைவர். இதன் பின்னர் என்னை விஞ்சிய போராளி என பால்ராஜ் தொடர்பில் தலைவர் விதந்துரைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆனையிறவுத் தாக்குதலின்போது பால்ராஜ் சுற்றி வளைக்கப்படுகிறார் இதையடுத்து "புலிகளின் முதுகெலும்பான பால்ராஜை 24 மணி நேரத்தில் உயிருடன் அல்லது பிணமாக கொழும்புக்கு கொண்டுவருவேன்" எனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான ரத்வத்தை சூளுரைக்கிறார். அவர் சொன்னவாறு கொழும்புக்கு சடலங்கள் சென்றன. ஆனால் சென்றதென்னவோ 300 இராணுவத்தினரின் சடலங்கள்தான்.

குடாரப்பில் பால்ராஜ் தரையிறங்கிய படம் இன்றளவிலும் புகழ்பெற்றது. தலைவர் பிரபாகரனின் வரவேற்பு அறையையும் இந்தப் படமே அலங்கரித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கெல்லாம் மணி மகுடமாக இருந்தவர் பிரிகேடியர் பால்ராஜே. ஓயாத அலைகள் வெற்றி தந்த நிலையில் சத்ஜெய நடவடிக்கையை இராணுவம் தொடங்கியது. இந்த நடவடிக்கையில் கிளிநொச்சியைப் புலிகள் இழந்தனர். தொடர்ந்து ஜெயசிக்குறு பெருஞ்சமரை இராணுவம் தொடங்கியது. சுமார் ஒன்றரை வருடம் நீடித்த இந்தச் சமரை தடுத்து நிறுத்த புலிகளின் முக்கிய தளபதிகள் அனைவரும் களங்களில் இறங்கினர். இவர்களை ஒருங்கிணைத்து வழிநடத்தும் பொறுப்பு பால்ராஜிடம் வழங்கப்பட்டது. புளியங்குளத்தை விழும்வரை வழிநடத்திய பால்ராஜ் தனது பொறுப்பை மற்றொரு முக்கிய தளபதியிடம் ஒப்படைத்து நேரடியாகக் களத்தில் இறங்கினார். இதன் பின்னரே போர் களத்தில் மாற்றங்கள் ஏற்பட்டு வன்னி மண் காப்பாற்றப்பட்டது.

### உலகப் புகழ் பெற்ற களம்

பரந்தன் ஆட்லறி தளம் மீதான தாக்குதல், ஓயாத அலைகள் -02, ஓயாத அலைகள் 03 (ஆனையிறவுப் பெருஞ்சமர்) தாக்குதல்களை நடத்திய தளபதி பால்ராஜே. ஆனையிறவுப் பெருந்தளம் மீதான தாக்குதலே பால்ராஜூக்கு உலகளாவிய பெருமையைப் பெற்றுத் தந்தது. இந்தச் சண்டைக்காக சுமார் 3 வருடங்கள் வேவு தரவுகளை பால்ராஜூம் அவரின் அணியும் சேகரித்தது. தாக்குதல் திட்டம் குறித்து தனக்கு நம்பகமான பால்ராஜிடம் மட்டுமே தலைவர் பிரபாகரன் ஒப்படைத்தார். அவ்வாறு ஒப்படைக்கும்போது "யாழ்ப்பாணத்துக்கான களம் இங்கிருந்துதான் ஆரம்பமாகிறது. கவனமாக எல்லாவற்றையும் பார்த்து வா.." என பால்ராஜூக்கு கூறியிருந்தார். ஆனையிறவில் 20,000 படைகள் நிலைகொண்டிருக்க, அவர்களுக்குத் துணையாக யாழ்ப்பாணத்தில் சுமார் 40,000 படைகளும் ஏனைய பகுதிகளில் 15,000 படைகளும் பக்கபலமாக நிற்க வெறும் 1200 போராளிகள் ஆனையிறவை துண்டாடி நுழைந்து 34 நாள்கள் போர் புரிந்தனர். இந்தச் சண்டைதான் வத்திராயான் பெட்டிச் சமர் எனப் பெயர் பெற்றது. உலகளாவிய ரீதியில் விடுதலைப் புலிகளின் இராணுவ பலம் வியப்புடனும் தளபதி பால்ராஜ் மதிப்புடனும் பார்க்கப்படக் காரணமாயிருந்த சண்டை இதுவே.

தளபதி சூசையின் கீழ் வளர்ந்த கடற்புலிகள் பால்ராஜ் தலைமையிலான 1200 போராளிகளையும் அவர்களுக்கான ஆயுதங்களையும் உணவையும் வெற்றிலைக்கேணி - கட்டைக்காட்டு படைகள் ஊடாக நகர்ந்து தரை இறக்கி சென்றனர். இந்தத் தரையிறக்கமே குடாரப்பு தரையிறக்கம் என அனைவராலும் கொண்டாடப்படுகின்றது. மறைப்புகள் எதுவுமற்ற திறந்த வெளியில் குறைந்த ஆயுத வளங்களையும் உணவையும் வைத்துக் கொண்டு புலிகள் போரிட்டனர். வத்திராயன் வெளியில் சுமார் ஒரு கிலோமீற்றர் நீளமான பெட்டி வடிவ பங்கர் அமைத்து இராணுவத்தையும் டாங்கிகளையும் எதிர்கொண்டு வெற்றி கொண்டு இத்தாவிலை ஊடறுத்து ஏ9 வீதியில் நிலைகொண்ட பால்ராஜின் படைக்கு பெரும் ஆயுதப் பற்றாக்குறை, உணவுத் தட்டுப்பாடு ஆனால் இவை அனைத்தையும் போக்கும் விதத்தில் போராளிகளின் உளவுரனை அதிகரிக்கும் விதத்தில் - குறைந்த உணவுடனும் உணவு இல்லாமலும் கூட ஊக்குவித்தார். இந்த சமரில் 1500 இற்கும் அதிகமான இராணுவம் கொல்லப்பட்டு பல ஆயிரம் பேர் காயம் காரணமாக களத்தில் இருந்து அகற்றப்பட்டு 54 ஆவது படைப்பிரிவையே இலங்கை இராணுவத்தில் இருந்து கலைக்க வைத்தார் பால்ராஜ். யாழ்ப்பாணம் நோக்கி நகர வேண்டிய படை ஆள்கள் பற்றாக்குறையால் நிறுத்தப்பட்டது. மேலும் கிளாலி கடலால் இராணுவம் தப்ப முயன்றபோது அவர்களை அழிக்க

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிராயச்சித்தம்

பார்வைநயம்-23

■ கணபதி சர்வானந்தா

தனக்குக் கிடைக்கின்ற கடைசி ஓவரில் இன்னிங்ஸ் அடிக்கப் புறப்பட்டுத் தோற்றுப்போகும் ஒரு துடுப்பாட்டக்காரனைப்போல இவரது இந்த முயற்சி. மனிதன் அந்தக் கணப்பொழுது தொடக்கம் யோசித்து.. யோசித்தே துவண்டு போனார். ஆயிரம் தடவைகள் பூஜை அறைக்குள் போவதும் வருவதுமாக இருந்தவர் கடைசிவரை என்ன நடந்தது என்று யாருக்கும் வாயைத் திறக்கவேயில்லை. இது எதற்கு என்று கேட்டால் சொல்வதற்குப் பதில் ஒன்றும் இல்லாதவராக இருந்தவர். திடீரென விம்மத் தொடங்கிவிட்டார்.

அவள் அந்தப் பிரதேசக் காரியாலயத்திற்கு முன்னால் நின்றபடி, வாசலையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவள் கணவன் சொன்னதுபோல அந்த ஆட்கள் சரியாக ஒன்பது மணிக்கு வந்திருக்கவேண்டும் இப்பொழுது ஒன்பதரை மணியாகிறது. இன்னும் அவர்களைக் காணவில்லை. முக்கியமா அவர்களைச் சந்தித்தேயாக வேண்டும். சந்தித்து அவர்களுக்குச் சேரவேண்டியதைக் கொடுக்க வேண்டும். கொடுத்துவிட்டால்தான் பழைய ரூபத்தில் அவரை ஒரு மனிதனாகப் பார்க்க முடியும்.

நிச்சயம் அவர்கள் அதை இலகுவாகப் பெற்றிருப்பதற்குச் சாத்தியமில்லை. இதற்காக எதையோ இழந்திருக்க வேண்டும். அடகு வைத்திருக்கலாம் அல்லது கடனாகப் பெற்றிருக்கலாம். இரண்டும் ஒரு வகையில் சுமையாகத்தான் கொள்ளலாம். எதைச் செய்தாகினும் காரியமாக வேண்டும் என்பதுதான் அவர்கள் எதிர்பார்ப்பு. அவர்கள் பக்கத்தில் அது சரி என்று பட்டது.

வந்ததும் அவர்களிடம் அதிகம் பேசக் கூடாது. "அவரால் முடியாத காரியமிது. தெரியாமல் செய்து தருவதாகச் சொல்லிவிட்டார். மன்னிக்கவும்" என்று சொல்வதா? இல்லாவிடில் அதிகம் பேசாது முகத்தைக் கூட ஏறிட்டுப் பார்க்காது அப்படியே தூக்கிப்பொருளைக் கொடுத்துவிட்டு வந்துவிடலாமா? எது சரி? எது பிழை? என்று தெரியாமலிருந்தது.

களவைச் செய்வதற்குக் கூட அவனவனுக்கு அதற்குரிய தகைமை வேண்டும். களவைச் செய்வதற்கு முன் ஒருவன் தன்னை நியாயப்படுத்தக் கூடிய மனோ நிலைக்கு நகர்த்தியாக வேண்டும். அப்போதுதான் அவனுக்கு தான் செய்வது சரியென்று படும். இத்வரை நியாயம், நீதி, நேர்மை என்று வாழ்ந்துவிட்ட இவருக்கு இது எப்படிச் சாத்தியமாகும். இந்தக் கேள்வியை நான் எனக்குள் திரும்பத் திரும்பக் கேட்டு கேட்டுத் தோற்றுப்போயிருக்கிறேன்.

தனக்குக் கிடைக்கின்ற கடைசி ஓவரில் இன்னிங்ஸ் அடிக்கப் புறப்பட்டுத் தோற்றுப்போகும் ஒரு துடுப்பாட்டக்காரனைப்போல இவரது இந்த முயற்சி. மனிதன் அந்தக் கணப்பொழுது தொடக்கம் யோசித்து.. யோசித்தே துவண்டு போனார். ஆயிரம் தடவைகள் பூஜை அறைக்குள் போவதும் வருவதுமாக இருந்தவர் கடைசிவரை என்ன நடந்தது என்று யாருக்கும் வாயைத் திறக்கவேயில்லை. இது எதற்கு என்று கேட்டால் சொல்வதற்குப் பதில் ஒன்றும் இல்லாதவராக இருந்தவர். திடீரென விம்மத் தொடங்கிவிட்டார்.

இரத்தினதுரை பிரதேச சபையில் காணிகள் பற்றிய பகுதிக்குப் பொறுப்பான அதிகாரி. பல காலம் அரச பணியிலிருப்பவர். பல பதவிகளிலிருந்தவர் ஓய்வுபெற இன்னும் சில மாதங்களே இருந்தன. கை நனைக்காதவர் என்ற பெயருடன் "ரிட்டையர்" ஆகவேண்டும் என்பதுதான் அவரது ஆசை. அவர் கை சுத்தமாக இருப்பது பலருக்கு பிரச்சினையான விடயமாகவும் இருந்தது.

இரத்தினதுரைக்கு எல்லாவிதத்திலும் பக்கபலமாக இருந்தவர் அவரது மனைவி. அவள் இதுவரை எதற்கும் ஆசைப்பட்டது கிடையாது. விரும்பி எதையும் கேட்டதுமில்லை. இதுவே இரத்தினதுரைக்கு மனச்சங்கடமாகவும் இருந்தது. "இதுவரை இப்படியே இருந்து என்னத்தைக் கண்டேன்.? என்னத்தைச் சாதித்துவிட்டேன்?" என்ற கேள்விகளுக்கு நடுவே வாழ்ந்தவர்.

நேற்றைய தினம்தான் அவர்கள் வந்திருந்தனர். அவசர மருத்துவ சிகிச்சைக்காக காணியை அடகு வைத்துப் பணம்பெறவேண்டும். வங்கி பணத்தைக் கொடுப்பதற்குக் காணியை உறுதிப்படுத்தி பிரதேச சபையிடமிருந்து கடிதம் ஒன்றைக் கேட்டிருந்தனர். அவர்கள் அதற்காக இரத்தினதுரையிடம் வந்திருந்தனர். காணி உறுதியில் பல குளறுபடிகள் இருந்தன. கடன்பெறப்போறவரின் பெயரில் காணி முழுவதும் இல்லை. ஆனால் வந்தவர்களுக்கு அவர்பெயரில் கடிதம் வேண்டும். இரத்தினதுரை முற்றாக மறுத்துவிட்டார். பலவிதமான முயற்சிக்குப் பிறகு "பியோன்" மூலம் இரத்தினதுரையின் மேசை லாச்சியில் பத்தாயிரம் ரூபா பணம் கொண்ட என்வலப் ஒன்று இடப்பட்டது. இரத்தினதுரை யோசிக்க முன்னர் கண நேரத்தில் நடந்து முடிந்த நிகழ்வினால் உறைந்து போனார் அவர். வழமைக்கு மாறாக புறப்பட தாமதமாகியிருந்தது. பணத்தை எடுத்துப் பொக்கற்றில் வைப்பதுவும் மீண்டும் எடுத்து லாச்சியில் இடுவதுமாக அவர் நடவடிக்கை இருந்தது. அவ்வப்போது கை பதறியது. பொக்கெட் பாரமாக இல்லை. மனப் பாரத்தோடு வீட்டுக்கப் போனார். போற வழியில் பிள்ளையார், வயிரவர் கோயில்கள் என்று ஏறி இறங்கினார். மனம் படபடத்தது.

ஒருவாறாக அவர்கள் வந்துவிட்டனர். பணத்தைத் திருப்பி அவர்களிடம் ஒப்படைத்தபோதுதான் அவளுக்குத் திருப்தியாக இருந்தது. அதைவிட அவர்கள் சொன்ன விடயம் இன்னும் மகிழ்சியாகவும் இருந்தது. "கடன்பெறத்தேவையில்லாமல் உறவினர் ஒருவர் எங்களுக்கு உதவி செய்ய ஓமென்றிருக்கிறார்." மனம் இன்னும் சமாதானப்பட்டது. ஓட்டமும் நடையுமாக வீட்டுக்கு வந்தாள். வீடு பூட்டியிருந்தது. பக்கத்து வீட்டுப் பெண்தான் வந்து கடிதம் ஒன்றினை அவளிடம் நீட்டினாள்.

"அன்ரி இதைக் கொண்டுபோய் தன்ரை ஒபிஸிலை கொடுக்கட்டாம். தான் பின்னேரம்தான் வருவராம். சந்நதிக்குப் போறனெண்டிட்டுப் போறார்." அந்தக் கடிதத்தில் தான் சுயவிருப்பில் வேலையை ராஜினமா செய்வதாக எழுதியிருந்தார் இரத்தினதுரை.

**பிராயச்சித்தத்தில் மனம் சாந்திப்படுகிறது**
**அதை முழுமையாக ஏற்றுக்கொள்கிறது ஆன்மிகம்.**

## இரண்டு தலைநகரங்கள்

வேடிக்கை வாணச் சிறுமழையும்
அணிநடை யானைப் பேருலாவும்
படர் நெடும் மின்கொடிச் சரமும்
உங்களிராவை நனைக்கையில்
பொங்கிப் பிரகாசம் கொள்ளும்
உங்கள் நகரத்தை
போகமும் போதையும் மிஞ்சித்
தள்ளாடும் நள்ளிராக்களை
தூக்கத்தினால் மூடி நீங்கள்
புரள்கையில்
சன்னங்களாலும், பீரங்கிகளாலும்
உடைத்துத் திறக்கப்படுகிறது
ஊரடங்கிய வேறொரு நகரம்
பசியும், வலியும், தீராப் பீதியும் பீடித்த
நள்ளிராக்களில்
பெருக்கெடுக்கும் இரத்தத்
தெருக்களை
தூங்காக் கண்களால் கடக்கிறார்கள்
இன்னொரு தலைநகரத்து மக்கள்

- பா.அகிலன்.

## நந்திக்கடல்



மிஞ்சியிருப்பது
இரும்பும் சாம்பலுமே,
மாமிசத்தாலானதும்
சுவாசிப்பதுமாகிய
அனைத்தையும் சுட்டெரித்த பின்
தங்கத்தாலானதும்
துருப்பிடிக்காததுமாகிய
அனைத்தையும் கவர்ந்து
சென்றுவிட்டார்கள்.
மாமிசத்தாலாகாததும்
துருப்பிடிக்கக் கூடியதுமாகிய
இரும்பையெல்லாம் சேகரித்து
உப்புக்களியில்
குவித்து வைத்திருக்கிறார்கள்.
உப்புக்களியில்
இருபோக மழையில்
துருவேறிக் கிடக்கிறது
கனவு.
காடுகளின் சூரியன்
நந்திக் கடலில்
உருகி வீழ்கிறான்.
கானாங்கோழி
காணாமற்போனவரின்
கடைசிச் சொற்களை
அடைகாத்திருக்கிறது.

- நிலாந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவனின் தளபதி...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்திருந்தால் 20,000 படைகளையும் அழித்திருப்பேன் எனப் பின்னாளில் பால்ராஜ் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### நோயில் வீழ்ந்த பால்ராஜ்

ஆனையிறவை மீண்டும் கைப்பற்றும் எண்ணத்தில் அக்கினிகீல நடவடிக்கையை இராணுவம் தொடங்கியது. இந்தத் தாக்குதலின் போது பால்ராஜ் விழுப்புண்ணடைந்திருந்தார். அத்துடன் இதய நோய்த் தாக்கத்துக்கு உள்ளானார். கூடவே நீரிழிவு, சிறுநீரக நோய்களின் தாக்கமும் அதிகரித்தது. இதனால் களத்தில் முழுமையாக பங்குகொள்ளவில்லை. அவரில்லாத குறையை அவரின் சீடனான தீபன் நிவர்த்தி செய்தார். அவருக்குத் தேவையான ஆலோசனைகளையும் - போர் தந்திரோபாயங்களையும் பால்ராஜ் வழங்கியிருந்தார். தென்மராட்சி வரை முன்னேறிய புலிகள் பின்னர் களச் சூழல்கள் காரணமாக முகமாலை வரை பின்னோக்கி நகர்ந்தனர். இந்த நிலையில்தான் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகியது. இக்காலத்தில் பால்ராஜின் நோய் நிலை தீவிரமாகியிருந்தது.

### எதிரியும் மதித்த தளபதி

சமாதானம் ஏற்பட்டதைத் தொடர்ந்து தமிழரின் காவல் தளபதிக்கு சிங்கப்பூரில் சிகிச்சையளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சிங்கப்பூர் சென்று கட்டுநாயக்காவில் பால்ராஜ் வந்திறங்கினார். அச்சமயம் இராணுவத்தின் இளநிலை அதிகாரிகள் சிலர் பால்ராஜை சுற்றிக் குவிந்துவிட்டனர். கடமையிலிருந்த போர் நிறுத்த கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் சதி நடந்து விட்டதோ என அச்சத்தில் உறைந்து போயினர். ஆனால் அந்த இராணுவ அதிகாரிகள் பால்ராஜை கண்டதும் சல்யூட் மரியாதை செலுத்தியபோதுதான் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். ஆனையிறவுத் தளத்தை கைப்பற்ற பெட்டிச் சமர் புரிந்து 34 நாள்கள் எதுவித உதவிகளும் இல்லாது போராடிய தளபதியை பார்க்க வேண்டும் என்ற அவாவே தங்களை இவ்வாறு குவியச் செய்தது சல்யூட் மரியாதை அளிக்கத் தோன்றியது என்றும் இராணுவத்தினர் அவர்களுக்கு தெரியப்படுத்தினர். எதிரியும் மரியாதை செலுத்திய இவ்வாறான நிகழ்வு உலக வரலாற்றில் மிக அரிதாகவே இடம்பெற்றுள்ளன. எதிரியும் புகழத்தக்க வீரனாக இருக்கும் வாய்ப்பு எத்தனை பேருக்கு வாய்க்கும்?

### திருமண வாழ்வு

எந்த சண்டையிலும் களத்தில் நின்று வழிநடத்தும் பழக்கம் கொண்ட பால்ராஜூக்கு உடலில் ஏராளமான காயங்கள் உள்ளன. இதனைக் குறிக்கும் விதத்தில் பொன்னியின் செல்வன் நாவலில் வரும் பழுவேட்டரையர் என பால்ராஜை தலைவர் அழைப்பது வழமை. தனது சொந்த இடமான மணலாறு பகுதியை மீட்காமல் திருமணம் செய்ய மாட்டேன் என்ற வைராக்கியத்துடன் இருந்த பால்ராஜை திருமணம் செய்யுமாறு தலைவர் வற்புறுத்தி வந்திருந்தார். பல சந்தர்ப்பங்களில் அவர் அதனைப் புறக்கணித்தபோது அவரது உடல்நிலையைக் காரணம் காட்டியும் தனது நெருங்கிய உறவுப் பெண்ணான வரதாவை அவருக்கு மணம் முடித்து வைக்கப்போகிறேன் என்றும் தலைவர் கூறியபோது அதனை பால்ராஜால் தட்டமுடியாது போனது. சிறந்த போர் தளபதி எனப் பெயர் பெற்றவர் பால்ராஜ், இதேபோன்று கடற்புலிகளின் மகளிர் அணியிலும், நிதிப்பிரிவிலும் திறம்பட பணியாற்றியவர் வரதா. அதுமட்டுமின்றி தலைவர் பிரபாகரனுக்கு மச்சாள் முறையானவர். இருந்தபோதும் இருவரின் திருமண வாழ்வு சிறப்பான விதத்தில் இருக்கவில்லை. சாதாரண குடும்பங்களில் எழுவது போன்ற பிரச்சினையே அவரின் குடும்பத்திலும் இருந்தது. ஆனாலும் அதைத் தீர்த்துக் கொள்ள இருவரும் முன்வராமல் தனித்து வாழ்ந்தனர். இருவரையும் இணைந்து வாழ பேச்சுக்கள் நடத்தப்பட்ட நிலையில் வரதா பாம்பினால் கடியுண்டு மரணமடைந்தார்.

### கறைபடியாத வீரத் தளபதி

ஈழப்போரின் அனைத்துக் கட்டங்களிலும் பங்கேற்றவர் தளபதி பால்ராஜ். புலிகளின் தளபதிகளுக்கு எதிராக இலங்கை அரசும் சர்வதேசமும் பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்தது. இதேபோன்று கட்டாய ஆள்சேர்ப்பு, சிறுவர்களை போரில் புலிகளின் தளபதிகள் ஈடுபடுத்தினர் என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. ஆனால் இத்தகைய குற்றச்சாட்டுக்கள் எதிலும் பால்ராஜின் பெயர் இடம்பெறவே இல்லை.

இதேபோன்று பொதுமக்கள், பொதுச் சொத்துக்களுக்கு இழப்பு ஏற்படுத்தும் விதத்திலான தாக்குதல்கள் எவற்றையும் பால்ராஜ் நடத்தவில்லை. இலங்கை - இந்திய இராணுவங்களுக்கு எதிராக மட்டுமே தாக்குதல்களை நடத்தி இழப்புகளை ஏற்படுத்தியிருந்தார். இவை மட்டுமல்ல தலைவர் பிரபாகரனுக்கு அடுத்து தாக்குதல்கள் குறித்து முடிவெடுக்கும் அதிகாரங்களை வைத்திருந்த போதும், மக்களுக்குப் பாதிப்பில்லாதவாறே எப்போதும் நடந்து வந்தார். அதுமட்டுமின்றி போராளிகளின் நடவடிக்கை மக்களைப் பாதிக்கக்கூடாது என்பதிலும், இறந்த எதிரிகளின் உடல்களை சேதப்படுத்துவதையோ அவமானப்படுத்துவதையோ ஒருபோதும் அனுமதிக்கவில்லை. தலைவர் பிரபாகரன் அவருக்கு இட்ட இந்தப் பிரதான கட்டளையை இறுதிவரை அவர் காப்பாற்றினார்.

### மக்கள் நலனில் அக்கறை

விடுதலைப் புலிகளின் சில நடவடிக்கைளால் விவசாயிகள், மீனவர்கள் நஷ்டத்துக்கும் துன்பத்துக்கும் உள்ளாகினர். இவை குறித்து அறிந்ததும் தலைவரின் கவனத்துக்கு அவற்றைக் கொண்டு சென்று அவர்களுக்குத் தீர்வு கிடைக்க வழிவகுத்தார். 2004 டிசம்பரில் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டபோது பலரைக் காப்பாற்றினார். சுனாமியில் பாதிக்கப்பட்ட மக்கள் பலருக்கு உதவிகளையும் வழங்கியிருந்தார்.

### இறுதிச் சண்டை

வன்னி இறுதிப் போரை இராணுவம் தொடங்கிய போது புலிகள் தோல்வியைத் தழுவத் தொடங்கினர். அன்ரன் பாலசிங்கம், தமிழ்ச்செல்வன் ஆகியோரின் மரணம் அரசியல், இராஜதந்திர ரீதியில் புலிகளுக்குப் பெரும் பின்னடைவைக் கொடுத்தது. இவ்வாறான தருணத்தில் பால்ராஜ் களத்தில் எவ்வகையிலும் பங்கேற்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார். எனினும் 59 ஆவது படைப்பிரிவு மணலாறு பகுதியூடாக நடவடிக்கைகளை மேற்கொண்டபோது மருத்துவமனையில் நோய் முற்றிய நிலையில் சிகிச்சை பெற்ற பால்ராஜ் அப்பகுதிக்கு சென்று இராணுவ நடவடிக்கையை தடுத்து நிறுத்த முயன்றிருந்தார். இந்தத் தாக்குதல் புலிகளுக்கு வெற்றியைக் கொடுத்தது. இதுவே பால்ராஜ் வழிநடத்திய இறுதிப் போர்க்களமாக இருந்தது. நூற்றுக்கும் மேற்பட்ட பெரிய - சிறிய சண்டைக்களங்களில் போரிட்ட - வழிநடத்தியபோது வீழ்த்த முடியாத வீரனை ஹார்டியாக் அற்றாக் தாக்கியதில் படுக்கையில் வீழ்ந்தார். இரு வாரங்கள் படுக்கையில் கழித்த நிலையில் 20 மே 2008 அன்று தமிழர் வீரத்தின் அடையாளமாகிப் போனார். மரணத்தைத் தொடர்ந்து 3 நாள்களை துக்கதினமாக புலிகள் கடைப்பிடித்திருந்தனர்.

பால்ராஜ் வீரச்சாவடைந்த செய்தி எங்கும் பரவியபோது புலிகளின் வீரம் மடிந்து போனதாகவே தமிழ் மக்கள் கருதினர். புலிகளின் தோல்வியில் பல காரணங்களும் சதிகளும் துரோகங்களும் இருந்தாலும் பால்ராஜின் மரணமும் ஒன்று என்பதும் நிஜமே.

# பெண்.....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாபநாசம் என்கிற திரைப்படம் அதில் மறைந்திருந்து உடை மாற்றுவதை படம் பிடித்து மிரட்டும் ஆண், சமூகத்துக்கு பயந்த குடும்பம், கொலையொன்றை மறைக்க அல்லது நியாயப்படுத்த என்று பல விடயங்கள். பல பெண்களின் தற்கொலைக்கு இப்படியான மிரட்டல்கள் காரணமாக இருக்கிறன. சட்டம் சரியாக இருக்க வேண்டும் என்பது ஒரு விடயம், அதை தண்டி அப்படி நடக்கும் போது 'இது அந்த பெண்ணினது தவறால் அல்ல என்று ஏற்க கூடிய சமூகம்' இருந்திருந்தால், உடை மாற்றுவதை படம் எடுப்பதை, இணையத்தில் பதிவிடுபவனை விட்டு பெண்ணை குற்றம் கூறும், தவறாக சித்தரிக்கும் சமூகம் இதுவல்ல என்று இருந்தால் போதுமே?

நண்பர்களோடு சுற்றுலா போக கேட்டால் கல்யாணம் செய்து கணவனோடு போ என்பது தான் பெரும்பாலான பெற்றோரின் பதில் ஏன்? பெண்ணுக்கு நண்பர்களுடன் பொழுதை கழிக்க விருப்பம் இருக்காதா? வேலை மாற்றம் கூட கணவன் மாற்றலானால் மனைவி மாற்றலாகி போகிற வழக்கம் தான்.

யாவரும் அவர்கள் முடிவை சுயமாக எடுக்கவும் முடிவுக்கான பொறுப்புகளை கையாளவும் கூடியவர்களாக இருக்க வேண்டும். முடிவுகள் வெற்றியளிக்கலாம் சில நேரம் தவறலாம், ஆனால் அதை கொண்டு அவரை தோல்வியடைந்தவராக சித்தரிப்பது, மீள ஒரு வாய்ப்புக்களை மறுப்பது அல்லது மீண்டும் எதிர்பார்க்கப்பட்ட நிலைமைகளுக்கும் இயைந்து வாழ உந்துவது என்பது முறையற்றது.

பெண்களை பொறுத்தவரை ஒரு பெண் வீரத் தாயாக, தனித்து போராடுபவளாக, முன்னுதாரணமாக, ஊர் போற்ற வாழ்தலை தான் 'பெண்மை'/ பெண்ணியம் அதற்கு அழகு என்று ஒரு கருத்து எல்லாருக்கும் இருக்கிறது.

'பிள்ளைகளை கஷ்டப்பட்டு வளர்த்தாள்' - என்பது 'நல்ல' பெண்ணிற்கு அடையாளமாக்கப் பட்டிருக்கிறது. அவளுக்கான பொருளாதார வாய்ப்புகளை அடைவதற்கான சாத்தியங்கள் சரியாக இருக்கும் பட்சத்தில் அவள் கஷ்டப்பட்டிருக்க தேவையில்லை என்பது தான் விடயம். பொருளாதார வாய்ப்பை நாடுகிற பெண்ணுக்கு (துணையை இழந்த பெண்ணுக்கு) கிடைக்கக் கூடிய பொருளாதார வாய்ப்புக்கள் என்ன? அவர் கல்வியறிவும் திறமையும் திறன் தேர்ச்சியும் எப்படி இருக்கிறது என்பதில் தங்கியது தான் இது. அவளை அவளது கல்விக்கான உரிமையை அடைவதற்கான வாய்ப்புகளை கொண்டிருந்தாளா என்பது முதல் கேள்வி, பெண்களுக்கு படிப்பு போதும் இன்னொரு வீட்டில் வாழ போகிறாய் என்ற மனநிலையை ஆண்கள் தான் குடும்பத்தை பார்க்கும் பொறுப்பை உடையவர்கள் என்ற எண்ணத்தை தூவி விடுவது எத்தகைய தவறானது? வேலைக்கு செல்வதாயினும் 'பாதுகாப்பான' வேலைக்கு போக வேண்டும் என்பார்கள். என்ன பாதுகாப்பு? அந்த பாதுகாப்பின்மை யாரால் வருகிறது?

'சமூகத்தை' திருத்த முடியுமா நீ தானே பாதுகாப்பாய் இருக்க வேண்டும் என்று பெண்ணின் மீது [illegible] விழுவதை அன்பென்றும் பாசமென்றும் அக்கறை என்றும் நினைத்துக் கொள்ள முடிவதில்லை. சமூகம் / நாலு பேர் என்று அத்தனை பேரும் பெண்களின் விடயத்தில் கவனமாக இருந்தால் எப்படி பாதுகாப்பில்லாமல் போக முடியும்? அதே சமூகத்தால் தானே?

'பார், கணவனை இழந்தாலும் கண்ணியமாக வாழ்ந்தாள்' என்பதில் அவளது உடலியல் சார் தேவைகளை மட்டுப்படுத்தி அவளுக்கான தேவை இருப்பதை மறுப்பது என்பது கூட அடிமைத்தனப்படுத்தல் என்றே கருத தோன்றுகிறது. தனக்கொரு துணை தேவை என்பதை அவளே முடிவு செய்ய வேண்டும் என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். அவள் முடிவெடுப்பதை தீர்மானிக்கிற காரணிகள் இருக்கின்றன. அதில் 'அவர் விரும்பவில்லை' என்று சொல்லி விடுவார்கள். விருப்பம் இருந்தும் வெளிக்காட்ட முடியாத சமூக அழுத்தம் ஒன்றை எல்லா பக்கத்தாலும் நிரப்பி விட்டு அவர் விரும்பினால் செய்திருக்கலாம் தானே என நழுவி விடும் புத்திசாலித்தனத்தை நன்றாகவே கொண்டுள்ளது சமூகம்.

கலாசாரம் விழுமியம் என்கிற பெயரில் போட்டு வைத்த எல்லைகளை பெண்கள் தாண்டும் போது விழுகிற முதல் அடி அவள் 'நல்ல' பெண் அல்ல என்பது. எவ்வளவு தூரம் அந்த எல்லைகளை தாண்டுகிறார்களோ அவ்வளவு தூரம் நடத்தைப் பிறழ்வு கற்பிக்கப்படுகிறது. அதிலும் அவளது பாலியல் நடத்தைகளே விமர்சிக்கப்படுகிறது. நடிகை என்றால் இலகுவில் அணுகக் கூடியவர் என்றதாக சித்தரித்து தகாத வார்த்தைப் பிரயோகம் செய்தவர்களே மெரீனாவில் போராட்டத்துக்கு பங்களித்த பெண்களை வீரமானவர்கள், [illegible]கள் என்று பாராட்டினார்கள். அதை விட உடலுறவு, பாலியல் சுகாதாரம் பற்றி பேசும் பெண் ஒழுக்கமற்றவள் என்பதில் இருந்து பெண்ணின் ஆடைகளின் தன்மை ஆண்களுக்கான அழைப்பு என்று எண்ணப்பாடு. 'நள்ளிரவில் வெளியே வந்தமை, அவளது ஆடை மற்றும் அந்த நேரம் ஆண் நண்பருடன் இருந்தவள்' என்பவை போதுமானவை ஒரு பெண்ணை வன்புணர்வுக்கு உள்ளாக்க. இந்த வருட ஆங்கிலப் புத்தாண்டை கொண்டாட வெளியே வரும் பெண்கள் என்றால் இத்தகைய பாலியல் சுரண்டல்களை எதிர்பார்க்க தான் வேண்டும் என்று சொல்லப்பட்டது. 'வயது வந்தவருக்கான நகைச்சுவைக்கு சிரிக்கிற பெண் உடலுறவுக்கு தயாரானவள் என்பது இன்னொரு அளவுகோலாக இருக்கிறது. 'PINK' எனும் படத்தில் இம்மாதிரியான சில விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டன.

சமீபத்தில் படித்ததில் பிடித்தது 'உங்கள் மகன்களுக்கு கற்பியுங்கள், பெண்களை எப்படி மதிப்பது என்று' என்பதை திருத்தி 'உங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுங்கள் அடுத்தவர்களை சமமாக மதிப்பது பற்றி' என்று எழுதியிருந்தது. அதை மீண்டும் வலியுறுத்த தான் விரும்புகிறேன். பாலின அடையாளம் தாண்டி அனைவரும் சக மனிதர்கள் என்ற உணர்வை ஊட்டுவதில் இருக்கிற பிரச்சினையில் தானே இத்தனை பேதமும்?

உங்கள் பெண்களை 'அனுமதிப்பது' பெருமையில்லை. உங்கள் பெண்கள் சுயமாக முடிவெடுக்கவும் சவால்களை எதிர்கொள்ளும் தைரியமாக இருப்பதும் அதற்கு நீங்களும் துணையாக இருந்தீர்கள் என்பதிலும் தான் இருக்கிறது பெருமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொக்குவில்

யாழ்ப்பாணம் நகரை மிக அண்மித்துள்ள கிராமமே கொக்குவில். இன்றைய வளர்ச்சி யுகத்தில் வேகமாக நகர மயமாகி வந்தாலும் கிராமியப் பண்பு இந்த மண்ணில் இன்னமும் நீடித்து வருகின்றமை சிறப்புக்குரியது. தெற்கில் யாழ்ப்பாண நகரத்தையும் வடக்கில் தாவடி, கோண்டாவில் கிழக்கில் திருநெல்வேலி கிராமங்களையும் கொண்டமைந்த கொக்குவிலை காங்கேசன்துறை வீதி ஊடறுத்துச் செல்கிறது. இதனால் கிழக்கு கொக்குவில், மேற்குக் கொக்குவில் எனப் பிரிந்துள்ளது.

முன்னைய காலத்தில் குளங்கள் “வில்” என அழைக்கப்பட்டன. இங்குள்ள குளத்தில் கொக்குகள் நிறைந்திருந்தமையால் கொக்குவில் எனப் பெயர் வந்திருக்கலாம். இதற்கு சான்றாக நந்தாவில் குளம் இன்றளவும் உள்ளது. கொக்கு என்றால் கரும்பு என்ற பொருளும் உண்டு. இந்தக் குளத்தை நம்பி முன்னர் கரும்பு பயிர் இடம்பெற்றமையாலும் இப்பெயர் பெற்றிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. வலிகாமப் பகுதியில் விவசாயம் சிறப்புப் பெற்றாலும் கொக்குவில் நந்தாவில் குளப் பகுதியில் இருந்தே அதற்கு வளமான மண் ஆரம்பமாகின்றமை சிறப்புக்குரியது.

இந்துக்கள் அதிகளவில் நிறைந்து வாழும் இந்த ஊரில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் கோவில், மஞ்சவனப்பதி முருகன், மணியர்பதி சிவசுப்பிரமணியர் (மாத்தனை முருகன்) ஆலயம், கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி (புதுக்கோவில்) கோவில், பொற்பதி பிள்ளையார், ஸ்ரீ சாயி துர்க்கா, கொண்டலடி ஸ்ரீஞான வைரவர், ஆறுமுகநாவலர் புராணபடனம் ஆரம்பித்து வைத்த பிரம்படி தலையாழி வைரவர் ஆலயங்கள் உள்ளன. இவை தவிர வைரவர், காளி, வீரபத்திரருக்கு பல சிறு ஆலயங்களும் உள்ளன. கொக்குவில் இந்துக் கல்லூரி, ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம், நாமகள் வித்தியாலயம், ஞானபண்டித வித்தியாசாலை, பெரியபுலம் மகா வித்தியாலயம், ஸ்தான சி.சி.த.க. பாடசாலை என்பன ஞான ஒளி பரப்பி வருகின்றன. தொழில்நுட்பக் கல்லூரி, பல்கலைக்கழகக் கல்லூரி என்பனவும் கொக்குவிலில் அமைந்துள்ளன.

போராட்ட காலத்தில் முக்கிய கேந்திரமாக கொக்குவில் விளங்கியது. பல போராட்ட அமைப்புகளும் இங்கு தமது முகாம்களை அமைத்திருந்தன. விடுதலைப் புலிகளும் கொக்குவிலை தங்களின் கேந்திர மையமாகப் பயன்படுத்தினர். யாழ். பல்கலைக்கழகத்துக்கு வந்த தலைவர் பிரபாகரனை கொல்லும் அல்லது கைது செய்யும் நோக்கில் இந்திய இராணுவம் நடவடிக்கை மேற்கொண்டது. கொக்குவில் பிரம்படியில் பெரும் மோதல் வெடித்த நிலையில் தலைவர் தப்பிச் சென்றார். தோல்வியடைந்த இந்திய இராணுவம் சுமார் 40 பொதுமக்களை சுட்டுக் கொன்று வெறியாட்டம் ஆடியது. இறந்தோர் நினைவாக ஆடியபாதம் வீதியில் தூபி ஒன்று இன்றும் உள்ளது.

போராட்டத்துக்கு நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகளை கொக்குவில் மண் ஈன்றளித்தது. புலிகளின் முக்கிய தளபதிகளாகவும், தலைவர் பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலர்களாகவும் விளங்கிய லெப்.கேணல் இம்ரான், லெப்.கேணல் பாண்டியன், பிரபல அரசியல்வாதிகளான அ.விநாயகமூர்த்தி, ஈ.சரவணபவன், பஞ்சாங்க ஆசான் சி.இரகுநாத ஐயர், நடனக் கலைஞர் ஏரம்பு சுப்பையா ஆகியோர் கொக்குவிலைச் சேர்ந்தவர்களே.

# கரப்பு

தமிழர்கள் தமது தொழில் முறையில் பல்வேறு வகையான நுட்பங்களைப் பயன்படுத்தினர். அந்தவகையில் மீனவர்கள் மீன்களைப் பிடிப்பதற்கு “ கரப்பு” எனும் ஒருவகை கருவியை அல்லது நுட்பத்தைப் பயன்படுத்தினர்.

இச்செய்முறையினை “கரப்புக் குத்துதல்” என அழைத்தனர். இதிலுள்ள சிறப்பியல்பு என்னவெனில் மீன்களை உயிருடன் பிடித்தலுக்கான ஒரு யுக்தி இதன்மூலம் நிறைவேற்றப்படும்.

ஆழம் குறைந்த கடல் பரப்பு, சிறு குளங்கள் மற்றும் ஆழம் குறைந்த நீர் நிலைகளில் மீன் பிடிக்க இது பயன்படும். மீன்கள் செறிவாக உள்ள பகுதிகளில் இதனைக் குத்தி இக் கரப்பின் மேற்பகுதியில் காணப்படும் வாய் போன்ற துவாரத்தினூடாக தமது கையை உட்செலுத்தி உள்ளே இருக்கும் மீன்களை உயிருடன் பிடித்தெடுப்பர்.



# திருநீற்றுக் குடுவை

இது தமிழர்களின் மிகவும் பழமைவாய்ந்த ஒரு பாத்திரமாகும். பொதுவாக இந்துக்கள் திருநீறு அணிவதை தமது வாழ்வியல் கோலத்தில் மிக உன்னிப்பாகக் கடைப்பிடித்தனர். பயன்படுத்தும் திருநீற்றை சேமிக்க எளியமுறையிலான குடுவை ஒன்றைத் தயாரித்தனர். இதற்கு சிரட்டை பயன்படுத்தப்படுகின்றது.

தேங்காயை உரித்து அதன் மேற்பகுதியில் கால்வாசியை நீக்கி அதன் உள்ளடைகளை நீக்கிவிட்டு, தேங்காயின் கண்ணை துழைத்து அதன் ஊடாக சிறு கயிறை நுழைத்துக் கட்டி விடுவர். அதனுள்ளே திருநீறை இட்டு வைப்பர்.

பார்ப்பதற்கு மிகவும் எளிமையாகவும், செலவற்றதாகவும் இலகுவானதாகவும் இக்குடுவை இருக்கும். இயற்கையான இந்தத் தயாரிப்பு ஆரோக்கியமாகவும் இயற்கையை நேசிப்பவர்களுக்கு ஒரு கலைநயமாகவும் திகழுகின்றது. தற்போது சிரட்டைகளில் பல்வேறு கைவினைப்பொருட்கள் உருவாக்கப்பட்டு சந்தைகளில் விற்பனைக்கு காணப்படுகிறன.

முன்னர் திருநீற்றைப் சேமிக்க பெரிய சங்குகளைப் பயன்படுத்தும் வழக்கமும் இருந்தது. எனினும் தகரம், பிளாஸ்ரிக்குகளின் வரவால் இந்த முறைகள் மறைந்து வருகின்றன. ஆனாலும் கிராமப்புற ஆலயங்களில் இவற்றின் பயன்பாட்டை இன்றளவும் காணலாம்.



# அப்பம்

ஈழ மக்கள் அதிகம் விரும்பி உண்ணும் உணவு அப்பம். இந்திய வழக்கில் ஆப்பம் என அழைக்கப்படுகின்றது. வெள்ளை அப்பம், பால் அப்பம், முட்டை அப்பம் எனப் பலவகைகளில் கிடைத்தாலும் பிரதான மூலப்பொருளாக அரிசி மா பயன்படுத்தப்படுகின்றது.

அப்பம் சுடுவதற்கு என தனியான சட்டி பயன்படுத்தப்படுகின்றது. சட்டியின் வடிவத்தில் உட்குழிவாக மா ஊற்றப்பட்டு, பால் அப்பம் எனின் சீனி கலந்து காய்ச்சப்பட்ட தேங்காய்ப்பால் விடப்படும். முட்டை அப்பம் முட்டை விடப்படும்.

**தேவையான பொருள்கள்**

பச்சை அரிசி - 1 சுண்டு

தேங்காய் - 1

சீனி -250 கிராம்

அவித்த கோதுமை - 1/2 சுண்டு

உப்பு - தேவையான அளவு

அப்பச்சோடா ஃ ஈஸ்ட் - சிட்டிகை

செய்முறை :-

அரிசியை கழுவி களைந்து 6 மணி நேரம் ஊறவைத்தெடுத்து முதலாம் தரம் அரைத்து அரித்து வரும் குருணலில் 1/4 சுண்டு நடுத்தர குருணலை எடுத்து வேறாக வைத்துவிட்டு மிகுதிக் குருணல் முழுவதையும் மாவாக அரைத்து எடுக்கவும்.

குருணலை பாத்திரத்தில் இட்டு 2 தம்ளர் கொதி நீரை ஊற்றி நன்றாக கலக்கி 1/2 தம்ளர் குளிர் நீர் சேர்க்கவும். (கட்டை கரையாமல் இருப்பதற்கு) நன்றாக ஆற வைக்கவும். பின்பு மாவை பிறிதொரு பாத்திரத்தில் இட்டு ஆறிய கஞ்சியை ஊற்றி அப்பச்சோடா, அளவிற்கு தண்ணீர் என்பன சேர்த்து , நீர்த்தன்மையான கூழ்ப் பதமாக கரைத்து புளிக்க வைக்கவும்.

தேங்காயை துருவி கெட்டியான பாலாக பிழிந்து அடுப்பில் வைத்து கொதிக்க வைத்து சீனியை கலந்து ஓரளவு பாணியாக எடுக்கவும்.

கரைத்து வைத்த மாவை எடுத்து அளவாக உப்பிடவும். பின்பு எண்ணெய் பூசிய தாச்சியை அடுப்பில் வைத்து அப்ப மாவை ஊற்றி ஒரு முறை சுற்றிக் கொண்டபின் ஒரு கரண்டி பாலைவிட்டு மூடி வேக வைத்து எடுக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'இறுதிசுற்று' படத்தை இயக்கிய சுதா கொங்காராவின் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிக்கவுள்ளார். உண்மைக் கதைகளை அடிப்படையாகக் கொண்ட இத் திரைப்படத்தின் கதையை சிவகார்த்திகேயனுக்கு அவர் கூறியிருக்கிறார்.

எனினும் இது குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை. தற்போது சிவகார்த்திகேயன் 'வேலைக்காரன்' படத்தில் நடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



'வனமகன்' படத்தின் நாயகி சாயிஷா பிரபுதேவாவின் இயக்கத்தில் விஷால், கார்த்தி நடிக்கவுள்ள கறுப்புராஜா வெள்ளைராஜா படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

வனமகன் வெளியாகும் முன்னரே இந்த வாய்ப்பு கிடைத்துள்ளதால் தனக்கு தமிழில் நல்ல எதிர்காலம் இருக்கும் என்பதால் தமிழ் கற்க ஆரம்பித்துள்ளார்.



தனது தாயார் கண்மணிக்கு நடிகர் ராகவா லாரன்ஸ் கோவில் கட்டியது அறிந்ததே. கடந்த அன்னையர் தினத்தில் அந்தக் கோவில் திறந்து வைக்கப்பட்டது.

தான் கஷ்டப்பட்ட சமயம் ஆதரவுக் கரம் நீட்டிய திரைப்பட சண்டைக் கலைஞர் சுப்பர் சுப்பராயனைக் கொண்டு கோவிலை லாரன்ஸ் திறந்து வைத்தார். இதன்போது ஆயிரம் தாய்மாருக்கு சேலையும் 6 விவசாயப் பெண்களுக்கு தாலியும் வழங்கி வைக்கப்பட்டது.





அட்லீயின் இயக்கத்தில் 61 ஆவது படத்தில் நடித்து வருகிறார் இளையதளபதி விஜய். இதில் மருத்துவர், ஊர் தலைவர், மஜிக் நிபுணர் என 3 வேடங்களில் நடிக்கிறாராம்.

பெரும் எதிர்பார்ப்புடன் தயாராகி வரும் இந்தப் படத்தின் முதல்பார்வை விஜயின் பிறந்தநாளான ஜூன் 22 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. இசை வெளியீடு ஒகஸ்ட் மாதம் நடக்கவுள்ளது.



ரஜினியின் 'கபாலி' பட சாதனையை முறியடித்துள்ளது அஜித்தின் 'விவேகம்' படம். அஜித் நடித்து வரும் 'விவேகம்' படத்தின் டீஸர் 11 ஆம் திகதி நள்ளிரவு வெளியானது. வெளியான 68 மணி நேரத்தில் ஒரு கோடி பார்வையாளர்களை கடந்தது.

ரஜினியின் 'கபாலி' படம் 72 மணி நேரத்திலேயே ஒரு கோடி பார்வையாளர்களைத் தொட்டது. இப்போது அந்த சாதனையை 'விவேகம்' முறியடித்துள்ளது. அஜித்தின் படம் ஒரு கோடி பார்வையாளர்களை கடந்தது இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது.



கலையை விட சிறந்தவர் யாரும் இருக்க முடியாது. ஒவ்வொருவரும் தங்களின் தனித் தன்மையை எண்ணிப் பெருமிதம் கொள்ள வேண்டும். நாம் வித்தியாசமானவராக இருக்கலாம். ஆனால் எமது பலம் தனித்துவம்தான் இப்படி கூறியிருக்கிறார்

மணிரத்தினத்தின் 'காற்று வெளியிடை' படத்தின் நாயகியான அதிதி ராவ் ஹைத்ரி.



ப்ரியங்கா சோப்ரா நடித்த ஹொலிவூட் படமான 'பே வோட்ச்' தமிழில் மொழியாக்கம் செய்யப்படுகிறது. பயங்கரவாதிகளை விரட்டிப் பிடிக்கும் கடலோர காவல் வீரர்கள் பற்றிய இத்திரைப்படத்தில் ஹெர்குலர், பாஸ்டர், ஜி.ஐ.ஜோ எனப் பல பிரபலங்கள் நடித்துள்ளனர்.

இதில் பிரியங்கா சோப்ரா நீச்சல் உடை, உதட்டோடு உதடு சேர்த்த முத்தக் காட்சிகளில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரோஸுக்கு ரவைகளை அன்பளித்த புலிகள்

கூட்டமைப்பும் புலிகளும்

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றாம் நாளே திரும்பி வந்துவிட்டார். பின்னாளில் இவரே பிரபாகரனின் வாழ்க்கைத் துணையானார். மூன்று குழந்தைகளின் தாயானார். இதற்கு மேல் விவரிக்கத் தேவையில்லை.

● ● ●

**புலிகளில் பழிபோட கொள்ளையடித்த ஈ.பி.ஆர்.எல்.எவ்!**

மூன்றாவது முரண்பாடு மட்டக்களப்பில் ஏற்பட்டது. மகிழடித்தீவில் செரண்டிப் என்ற பெயரில் ஒரு நிறுவனம் இருந்தது. கொக்கட்டிச்சோலைப் பகுதியைச் சேர்ந்த அநேகர் இங்கே தொழில் வாய்ப்புப் பெற்றனர். இங்கு பிரசைகள் குழுப் பிரமுகரான சாம். தம்பிமுத்துவும் வெளிநாட்டவரும் இணைந்து இறால் வளர்ப்பில் ஈடுபட்டனர். ஒரு நாள் இரவு இந்த இறால் பண்ணையில் கொள்ளை நடந்தது. மோட்டார்கள் முதலான பெறுமதியானவற்றை ஆயுத முனையில் கொள்ளையிட்டவர்கள் தோணிகளில் அவற்றை ஏற்றி வாவி வழியாகக் கொண்டு சென்றனர். கொள்ளை நடந்த அடுத்த நாள் காலை ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் குணம் என்பவர் சைக்கிளில் வந்த புலிகள் உறுப்பினர் பசீரை வழிமறித்து இரவு நடந்த விடயத்தைக் கூறினார்.

மேலும் "தோழர்! கொள்ளையடிக்க வந்தவர்கள் சில பணியாளர்களைத் தாக்கியுள்ளனர். அத்துடன் தூஷண வார்த்தைகளால் திட்டியுள்ளனர். இதெல்லாம் மோசமான வேலை" என்றார். அதற்குப் பசீர் " உண்மைதான் மட்டக்களப்பைப் பொறுத்தவரை தூஷண வார்த்தைகளைப் பயன்படுத்துவதென்றால் அது புளொட்டின் வேலையாகத்தான் இருக்கும் . அவர்களிடம் இதைப்பற்றிக் கேட்டால் முரண்பாடுதான் ஏற்படும்" எனக்கூறிவிட்டு நகர்ந்தார். தொடர்ந்து மகிழடித்தீவு ஆஸ்பத்திரி விடுதியில் தங்கியிருக்கும் ஒருவரைச் சந்திக்கச் சென்றார். இவரும் அந்த இறால் பண்ணையில் பணியாற்றுபவர். "தாங்களே கொள்ளையடித்து விட்டு எதுவும் தெரியாதது மாதிரி உங்களிடம் சொல்கிறார்கள். இவர்கள் தமக்கிடையே ஒருவருக்கொருவர் காக்கா, கடவுள், காந்தன் என்றெல்லவா அழைத்துக் கொண்டார்கள்" என்று சொன்னார் இவர். "கொள்ளையர்கள் எவரும் இந்தப் பகுதிக்குப் பரிச்சயம் இல்லாதவர்கள். இதேவேளை, இக்கொள்ளைச் சம்பவத்தில் இறால் பண்ணைத் தொழிலாளர் ஒருவருக்குப் பங்கிருக்கிறது. இருட்டில் மறைந்திருந்தே அவர் எங்கெங்கு என்னென்ன பொருள்கள் உள்ளன என அவர்களுக்குச் சொல்லிக்கொண்டு இருந்தார்" எனவும் இவர் மேலும் குறிப்பிட்டார். தொடர்ந்து விசாரித்ததில் கொள்ளையர்களுக்கு உதவிய பணியாளர் ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆதரவாளர் என்றும் புளியந்தீவைச் சேர்ந்த அவர் நிறுவனத்துக்குச் சொந்தமான மினி பஸ்ஸில் கடமைக்கு வருபவர் எனவும் அவரது பெயரையும் சொன்னார்.

சில ஏற்பாடுகளைச் செய்துவிட்டு அன்று பிற்பகல் மட்டுநகரிலிருந்து வரும் மினி பஸ்ஸுக்காக மகிழடித்தீவுச் சந்தியில் காத்திருந்தார் பசீர். அது வந்ததும் அதனை மறித்தார். குறிப்பிட்ட பணியாளரின் பெயரைச் சொல்லி அவரைக் கீழே இறங்குமாறு கூறினார். எவரும் இறங்கவில்லை. எனவே ஒவ்வொருவரது அடையாள அட்டைகளையும் வாங்கிப் பார்க்கத் தொடங்கினார். உடனே சம்பந்தப்பட்டவர் தானாக எழும்பி நின்றார். நிமிர்ந்து பார்த்த பசீரிடம் தனது பெயரைச் சொன்னார். "சரி கீழே இறங்குங்கள்" என்றார் பசீர். அவ்வேளை மினி பஸ் சாரதி "மட்டக்களப்பிலிருந்து எனது வாகனத்தில் வரும் அனைவருக்கும் நான்தான் பொறுப்பு. நீங்கள் வந்து வெள்ளைக்காரரிடம் சொல்லி விட்டு இவரைக் கூட்டிக் கொண்டு செல்லுங்கள்" என்றார். அதனையேற்று இறால் பண்ணைக்குச் சென்ற பசீர் மொழிபெயர்ப்பாளரின் உதவியுடன் வெள்ளைக்காரரிடம் சொல்லி விட்டு அவரை அழைத்துச் சென்றார்.



**சவக்காலையில் தானாகவே வெளிவந்த உண்மை!**

பசீர் கூட்டிச் சென்ற இடம் முனைக்காட்டிலிருந்த சவக்காலை. அங்கே அவரை ஓரிடத்தில் இருக்கச் சொன்னார். அங்கு இருவர் குழி தோண்டிக்கொண்டு இருந்தனர். அதைப் பார்த்ததும் அவருக்கு முழி பிதுங்கியது. கண்கள் கலங்கின. குழி வெட்டியோரில் ஒருவர் வந்து "ஆழம் போதுமா ?" எனப் பசீரைக் கேட்டார். தான் கூட்டிக்கொண்டு போனவரைத் தலையிலிருந்து கால் வரை பார்த்த பசீர். "இன்னும் கொஞ்சம் நீளமாக வெட்டுங்கள்" என்றார் . அவ்வளவுதான் - அதுவரை விம்மிக்கொண்டிருந்தவர் ஓங்கிப் பெருங்குரலெடுத்து அழுததுடன் கொள்ளை எப்படி நடந்தது என்று சொன்னார். எத்தனை பேர் வந்தனர். என்ன என்ன பொருட்களைக் கொள்ளையடித்தனர் என்ற விவரங்களுடன் தான் ஈ.பி.ஆர்.எல். எவ் ஆதரவாளர் என்றும் கடகடவெனச் சொல்லிக்கொண்டு போய் இறுதியில் தன்னைச் சுட்டுவிடாதீர்கள் என்று கெஞ்சினார். எந்த விசாரணைக்கோ மேலதிக கேள்விக்கோ அவசியமில்லாமல் போய் விட்டது.

குழி வெட்டியவர்களுடன் அவரை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு முதலைக்குடாவுக்குச் சென்றார் பசீர். அங்கே காலையில் சந்தித்த குணமும், பின்னாளில் வடக்கு - கிழக்கு மாகாண சபையில் நிதி அமைச்சராக விளங்கியவருமான கிருபாகரனும் இருந்தார். அவர்களிடம் பசீர் "இரவு கொள்ளையடித்தவர்களில் ஒருவரைப் பிடித்து விட்டோம். எனக்குத் தெரியும் இது புளொட்தான் செய்ததென்று. காக்கா, கடவுள், காந்தன் என்று ஒருவரையொருவர். அழைத்ததன் மூலம் எங்கள் இயக்கத்தின் மீது பழியைச் சுமத்தியவர்களை நாங்கள் சும்மா விட முடியாதுதானே ? இப்போது பிரச்சினை என்னவென்றால் அவர் தான் ஈ.பி. ஆர். எல்.எவ் என்கிறார். எதற்கும் அவரை ஒரு தடவை வந்து பாருங்கள்" என்றார். இருவரும் பசீருடன் முனைக்காடு சவக்காலைக்குச் சென்றனர்.

அங்கே குழி வெட்டப்பட்டிருப் பதையும் பீதியுடன் நின்றவரையும் கண்டனர். மீன் முள்ளுச்சிக்கிய பிராமணனின் நிலை அவர்களுக்கு. விழுங்கவும் முடியாது, வெளியில் சொல்லவும் இயலாது. சவக்காலைக்கு வெளியிலேயே நின்று கொண்டார் பசீர். இருவரும் உள்ளே போய் விடயத்தைக் கேட்டனர். பின்னர் தயங்கித் தயங்கி வந்தனர். "தோழர்! இவர் எங்களுடைய தோழர்தான். நகரத்திலுள்ள தோழர்கள் எமக்குத் தெரியாமல் வந்து இதனைச் செய்து விட்டனர்" என்றனர்.

"சரி ! இவர்கள் வேண்டுமென்றே எங்களில் பழி சுமத்தத்தானே காக்கா, கடவுள், காந்தன் எனக் கூறினர். இதனை மன்னிப்பது சிரமம்தானே? உங்களோடும் நான் நன்றாகப் பழகிவிட்டேன். ஒன்று செய்யலாம் - இவர் நேரே வெள்ளைக்காரரிடம் போய் கொள்ளையைச் செய்தது ஈ.பி. ஆர்.எல்.எவ்தான் என்றும் புலிகளுக்கு இதில் சம்பந்தம் இல்லை எனவும் சொல்ல வேண்டும்" என்றார் பசீர். உடனே தலையாட்டினர். குணமும் கிருபாகரனும். வெள்ளைக்காரரிடம் அப்படியே சொன்னார் அந்தப் பணியாளர். அவ்வேளை பசீர் "அவர்கள் ஆயுதமுனையில் மிரட்டித்தான் தமது கொள்ளைக்கு உதவவேண்டும் என்றார்கள். இவரும் பயத்தில் சம்மதித்து விட்டார். தயவு செய்து இவரைப் பணியிலிருந்து நீக்கி விடாதீர்கள். இவரை நம்பித்தான் இவரது குடும்பம் இருக்கிறது" என்றார். உண்மையில் இவரிடம் எந்தக் கேள்வியோ விவரத்தையோ கேட்டிருக்க வில்லை பசீர். வெள்ளைக்காரர் சம்மதித்தார். அடுத்த நாள் சிவா தோழர் என்பவர் முதலைக்குடாவுக்கு வந்தார். அவர்தான் தமது பொறுப்பாளர் என குணம் அறிமுகப்படுத்தினார். இறால் பண்ணை விவகாரத்தில் தமது பக்கம் தவறு இருந்ததை அவர் ஒப்புக்கொண்டார். அவர் போய்ச் சில நாள்களில் "காக்கா, கடவுள், காந்தன் என இவர்கள் மட்டுமா பெயர் வைக்க முடியும்? நாங்கள் வைக்கக் கூடாதா ? என சில ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்கள் புலிகள் உறுப்பினரிடம் கேட்டனர். தலை இருக்க வால் ஆடுகிறது என நினைத்துக்கொண்டனர் புலிகள்.

● ● ●

**ஈ.பி.சுதாவைக் காப்பாற்றிய புலி ஆதரவாளர்!**

முனைக்காடு என்றதும் இன்னொரு விடயத்தையும் குறிப்பிட வேண்டும். பின்னாளில் செங்கலடியில் *16.09.1985* அன்று அதிரடிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் பலியானவர் புலிகள் இயக்க உறுப்பினர் மைக்கல் (நல்லையா பாரதிதாசன்). இவரது மாமன் ஏறாவூரைச் சேர்ந்த சுதா. ஈ.பி. ஆர்.எல்.எவ். உறுப்பினரான இவர் அதிரடிப் படையினரால் கைதானார். வீரதுங்கா என்ற அதிகாரியால் இவர் மோசமான சித்திரவதைக்குள்ளானார். காலில் ஒரு விரலையும் இழந்தார். இவரைத் தீவிரவாத இளைஞர்களைக் காட்டச் சொல்லி அதிரடிப்படையினர் முனைக்காட்டுக்குக் கொண்டு வந்தனர். அங்கு வந்து சேர மாலையாகி விட்டது. வாகனத்தில் இவரை மட்டும் விட்டு விட்டு சகல படையினரும் தேடுதலுக்குப் புறப்பட்டனர். வாகனத்திலிருந்து இறங்கித் தவழ்ந்து வந்த சுதாவை புலிகளின் தீவிர ஆதரவாளரும், பின்னர் மாவீரரான ஒருவரின் சகோதரருமான ஒருவர் கண்டார். சுதாவைத் தோள்மேல் வைத்துத் தூக்கிக் கொண்டு ஓடிப் பத்திரமான இடத்துக்குக் கொண்டு வந்தார். இரவாகி விட்டதால் இவர்களை அதிரடிப் படையினரால் தேட முடியவில்லை. மேலதிகமாக ஆட்களைப் பிடிக்க வந்தவர்கள் கையில் கிடைத்தவரையும் இழந்த நிலையில் திரும்பினர். சில நாள்களின் பின் சித்தாண்டியில் வைத்து மீண்டும் படையினரிடம் சிக்கினார் சுதா. காலில் காயம். முறையான வைத்தியம் கிடைக்காததால் ஒரு காலை இழந்தார்.

சுதாவுக்கு சுவிஸ் நாடு அரசியல் அடைக்கலம் கொடுத்தது. இவர் அங்கேயே வாழ்ந்து வருகிறார். இவரைச் சித்திரவதைக்குள்ளாக்கிய அதிரடிப்படை அதிகாரி வீரதுங்கா **03.04.1985** அன்று கொடுவாமடுவில் நிகழ்ந்த கண்ணிவெடித் தாக்குதலில் பலியானார். பெருந்தொகையான படையினர் பலியான இத் தாக்குதலை ஈரோஸ் மேற்கொண்டது. கோப்பாவெளிப் பகுதியில் சுற்றி வளைப்பை மேற்கொண்டு விட்டுத் திரும்புகையிலேயே இத்தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது. சுற்றிவளைப்பில் கைதாகி இருந்த புலிகள் இயக்க உறுப்பினர்களான சீ.தவராஜா, ராஜன் ஆகியோர் இத்தாக்குதலில் உயிரிழந்தனர்.

**ஈரோஸுக்கு ரவைகள் அன்பளித்த பிரபாகரன்!**

படையினரிடமிருந்து ஈரோஸினரால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுக்குப் போதுமான ரவைகள் இருக்கவில்லை. இது தொடர்பாக அப்போதைய ஈரோஸ் பிரமுகர் பாலகுமார் பிரபாகரனைத் தொடர்புகொண்டார். கடல் வழியாக மிகுந்த ஆபத்தின் மத்தியில் கொண்டுவரப்பட்டு, காடுவழியாகச் சுமந்து வந்த **5.56** ரவைகளின் ஒரு பகுதியை ஈரோஸிடம் அன்பளிப்பாக வழங்கினர் புலிகள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்யாண வைபோகமே

எதிர்வரும் ஜூன் மாதம் 30ஆம் திகதி உதைபந்தாட்ட உலகின் நட்சத்திர நாயகனான லயனல் மெஸ்ஸிக்கும் அவரது சிறுவயதுத் தோழியான அன்ரொறெல்லா றொக் காஸோவுக்கும் திருமணம் நடைபெறவுள்ளதான தகவல் வெளிவந்துள்ளது. ஜூன் 24ஆம் திகதி தனது 30 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடவுள்ள மெஸ்ஸி ஆறு நாள்களின் பின்னர் திருமணம் புரிவதற்கு முடிவு செய்துள்ளார். இந்தப் பருவகாலத்துக்கான சம்பியன்ஸ் லீக் தொடரில் இருந்து பார்ஸிலோனா ஏற்கனவே தோற்று வெளியேறி விட்டது. ஸ்பெயினில் நடைபெறும் லாலிகா உதைபந்தாட்டத் தொடரில் பார்சிலோனா விளையாடும் இறுதிப்போட்டி நாளையோடு முடிவடைவதனால் அதனையும் கருத்திற்கொண்டே திருமணத் திகதி தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஆர்ஜென்ரீனாவில் உள்ள மெஸ் ஸியின் சொந்த நகரமான றொசாரியோ நகரில் சக வீரர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் என சுமார் 600 பேர் வரையான விருந்தினர்கள் கலந்துகொள்ளும் வகையில் திருமண நிகழ்வுக்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. மெஸி ஆர்ஜென்ரீனாவில் பிறந்தாலும் அவரது ஆளுமை வளர்ச்சியில் பார்சிலோனாவின் வகிபங்கு மிக முக்கியமானது. தனது 13 வயதில் பார்சிலோனாவின் இளையோர் அணியில் இடம்பிடித்த மெஸ்ஸி இன்றுவரை பார்சிலோனாவின் நம்பிக்கை நட்சத்திரமாகவே விளங்கி வருகின்றார். மெஸ்ஸியைப் பொறுத்தவரையில் பார்சிலோனா அவரது இரண்டாவது தாயகம். அந்தவகையில் திருமண நிகழ்வின் இரண்டாவது கொண்டாட்டத்தினை பார்சிலோனாவில் நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

சில பத்திரிகைகள் மெஸ்ஸியின் பார்சிலோனா அணியுடனான ஒப்பந்தம் 2018ஆம் ஆண்டு முடிவதைக் கருத்திற்கொண்டு மெஸ்ஸி பார்சிலோனாவுடன் புதிய ஒப்பந்தத்தில் இதுவரை கைச்சாத்திடவில்லை. ஆனால் 10 வருட தனது காதல் வாழ்க்கையைத் திருமணம் எனும் ஒப்பந்தத்தின் மூலம் நீடித்துள்ளார் என்று செய்தி வெளியிட்டுள்ளன.

ஏனென்றால் மெஸ்ஸி, அன்ரொறெல்லா றொக் காஸோவுடன் கடந்த பத்து வருடங்களாகத் திருமணம் செய்யாமலே குடும்பம் நடத்தி வருகின்றார். இவர்களுக்கு தியாகோ, மரியோ என்னும் இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளமையும் குறிப்பிடத் தக்கது. மேற்கத்தேய கலாசாரத்தில் இதெல்லாம் சகஜம் என்றாலும் இதனைப் படிக்கும் வாசகர்களுக்கு 'புள்ளகுட்டி பெத்துக்கிட்டு கட்டிக்கலாமா' என்ற 'சாமி' படப்பாடல் வரி நினைவுக்கு வந்தால் அதற்கு நாம் பொறுப்பல்ல.



கடந்த வாரம் ஐ.பி.எல் தொடரில் குஜராத் லயன்ஸ் – டெல்லி டேர்டெவில்ஸ் அணிகளுக் கிடையிலான போட்டியின் போது 'எக்ஸ்ரா இனிங்ஸ்' நிகழ்ச்சி நடைபெறும் ஸ்ரூடியோவுக்கு தொலைக்காட்சி வர்ணனையாளர்களான மத்தியூ ஹெய்டன் மற்றும் ரவி சாஸ்திரி ஆகியோரோடு WWE சுப்பர்ஸ்ரார்களான பிக் ஈ மற்றும் கொபி கிங்ஸ்ரன் ஆகியோரும் வருகை தந்திருந்தனர். கிரிக்கெட்டுக்கும் தமக்குமான அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட முன்னாள் WWE இணைச்சம்பியன்கள் நிகழ்ச்சியின் போது விளையாட்டாக மத்தியூ ஹெய்டனை தூக்கி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய தருணம்.

# முன்னேற்றம் அவசியம்

இந்திய அணியின் முன்னாள் வீரரும் தொலைக்காட்சி வர்ணனையாளருமான ரவி சாஸ்திரி சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் சம்பியன்ஸ் கிண்ணத்தொடரால் உலகக் கிண்ணத்தொடரின் மதிப்பு குறைவது போல் உள்ளதாகத் தெரிவித்திருந்தார். உலகக் கிண்ணத்தை நடத்தி விட்டு பின் எதற்காக சம்பியன்ஸ் கிண்ணம் என்று அவர் கேள்வி எழுப்பினாலும் ஐ.சி.சி. அதனைக் கருத்திற்கொள்ளவில்லை. இந்நிலையில் இங்கிலாந்தில் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்காக 8 நாடுகளும் தமது அணிகளை அறிவித்துள்ளன.

அதன்படி பாகிஸ்தான் அறிவித்துள்ள அணியில் சகலதுறை வீரர் சொகைப் மலிக்கும் இடம்பெற்றுள்ளார். இதன் மூலம் ஆறாவது தடவையாக இத்தொடரில் விளையாடும் முதல் பாகிஸ்தான் வீரர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார். முன்னதாக பாகிஸ்தான் வேகப்பந்துவீச்சாளர் சொகைப் அக்தர் 1998,2002, 2004, 2006, 2009ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சம்பியன்ஸ் கிண்ணத் தொடர்களில் 5 முறை பங்கு பற்றியதே சாதனையாக இருந்தது.



சம்பியன்ஸ் கிண்ணத்தொடரில் 6 முறை பங்குபற்றிய வீரர்கள் அவுஸ்ரேலியாவின் றிக்கி பொண்டிங், இந்தியாவின் ராகுல் டிராவிட், நியூசிலாந்தின் டானியல் விற்றோரி, இலங்கையின் மகேல ஜெயவர்த்தன, தென்னாபிரிக்காவின் ஜக் கலிஸ், மார்க் பௌச்சர் ஆகியோரே ஆவார். சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இதுவரை 15 ஆட்டங்களில் விளையாடியுள்ள சொகைப் மலிக் 326 ஓட்டங்களையும் 10 விக்கெட்டுக்களையும் பெற்றுள்ளார்.

இத்தொடரில் ஆறாவது முறை பங்குபற்றுவது மகிழ்ச்சியைத் தந்தாலும் இந்தத் தொடரின் முக்கியத்துவத்தையும் உணர்ந்துள்ளோம் என்கிறார் சொகைப் மலிக். ஏனென்றால் தற்போது ஒருநாள் போட்டிகளுக்கான தரவரிசையின்படி 88 புள்ளிகளைப் பெற்று எட்டாவது இடத்தில் உள்ளது பாகிஸ்தான். மேற்கிந்தியத்தீவுகள் அணி 79 புள்ளிகள் பெற்று 9ஆவது இடத்தில் உள்ளது. 2019ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான நேரடித்தகுதியை பெறவேண்டுமானால் எதிர்வரும் செப்ரெம்பர் இறுதிவரை தரவரிசையில் முதல் எட்டு இடங்களுக்குள் இருத்தல் வேண்டும்.

எனவே இந்தத் தொடரில் நாம் சிறப்பாகச் செயற்படுவதன் மூலம் தரவரிசையில் முன்னேற்றம் காண முடியும் என்பதோடு அண்மைக்கால பாகிஸ்தான் ஒருநாள் அணியில் மேற்கொண்டுள்ள மாற்றங்கள் மூலம் அனைத்து அணிகளுக்கெதிராகவும் சிறப்பாக விளையாடி நம்மை நிலைநாட்ட வேண்டிய தேவையும் உள்ளது என்கிறார்.

# கூறியது கூறல்



இந்திய அணியின் முன்னாள் தலைவரான சுனில் கவாஸ்கர் டெஸ்ட் மற்றும் இருபதுக்கு 20 போட்டிகளில் பங்குபற்றும் வீரர்கள் குறித்த ஒரு கருத்தில் எப்போதும் உறுதியாக இருந்தார். அதுதான் இருபதுக்கு 20 போட்டிகளில் அதிரடியாக விளையாடுபவர்களால் டெஸ்ட் போட்டிகளில் சிறப்பாக விளையாட முடியுமா என்பது சந்தேகம்.

ஆனால் டெஸ்ட் போட்டிகளில் சிறப்பாக விளையாடுபவர்களால் இருபதுக்கு 20 போட்டிகளிலும் சிறப்பாக விளையாட முடியும் என்பதே அது. இம்முறை நடைபெற்ற ஐ.பி.எல் தொடரில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி சார்பில் ஹசிம் அம்லா பெற்றுக்கொண்ட இரண்டு சதங்களையும் சன் றைசர்ஸ் அணி சார்பில் கேன் வில்லியம்ஸ் அடித்த அரைச்சதம் ஒன்றையும் சுட்டிக்காட்டி தனது கருத்து உண்மை என்பதை அவர்கள் நிரூபித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

● ● ●



இம்முறை நடைபெறும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் மேற்கிந்தியத்தீவுகள் அணி இடம்பெறாது அவமானகரமானது என்று கூறியுள்ளார் முன்னாள் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் வேகப்பந்துவீச்சாளரான கேட்லி அம்புறாஸ்.

1998ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இருந்து 2013ஆம் ஆண்டுவரை நடைபெற்ற அனைத்து சம்பியன்ஸ் கிண்ணத் தொடரிலும் பங்குபற்றி 2004ஆம் ஆண்டு கிண்ணத்தை வென்ற முன்னாள் சம்பியன் இம்முறை தொடரில் இடம்பெறாதது அவமானமே. அண்மைக்காலமாக சிறந்த பெறுபேற்றை அணி வெளிப்படுத்தவில்லை. எனவே இனியாவது அதனை உணர்ந்து மறுபடியும் நாம் மேல் எழுவதற்கான வழிவகைகளை ஆராய வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

● ● ●



சென்ற வாரம் இலங்கைக்கு விஜயம் செய்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, தான் கலந்து கொண்ட நிகழ்வொன்றில் பேசுகையில் – " முத்தையா முரளிதரன், மறைந்த தமிழக முதலமைச்சர் ஆகியோர் இலங்கையில் உள்ள இந்திய வம்சாவழித் தமிழர்களால் உலகுக்கு வழங்கப்பட்ட பரிசு." என்று புகழ்ந்துரைத்தார். இதை எதிர்பாராத முரளிதரன் 'பிரதமர் மோடி தனது உரையில் எனது பெயரைக் குறிப்பிட்டமை ஆச்சரியமாக இருந்ததாக' தெரிவித்துள்ளார்.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 20.05.2017 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org